947

[தாகுதி 18] தைமீ : : January, 1926 [பகுதி 1



பொருளடக்கம்

	பக்கம்
முருகன் வழிபாடு	1
கௌடல்ய அர்த்த சாஸ்திரம்	2
காளிதாஸ மஹா கவி	5
மின்சாரப் பிரவாகம் ...	8
ஸ்ரீகிருஷ்ண கர்ணம்ருதம்	11
பகவத் அவதார தத்துவம்	13
நமது சிறுகதை—நிழலின் அருமை	15
பல்லவர்கள்	24
இரஞ்சிதம்—(நாவல்)	25
ஹிந்துமதமும் வழிபாடும்	28
சிறுத்தொண்டர்—(நாடகம்)	32
சிறுவர்களுக்கான பக்கங்கள்—மஸ்யாவதாரம்	34
ஸ்திரீகளுக்கான பக்கங்கள்	37
பிரபஞ்ச வர்த்தமானம்	40

OFFICE OF THE REGISTRAR OF BOOKS
19 FEB 1926
MADRAS

சித்திரப்படங்கள்

ஆறுமுகக் கடவுள்—முகப்புப் படம்.

JL
211, N08VO
N26. 1-1.
21837

...தினி சந்தாதார்க்கு ரூ. 1-8-0 விலையுள்ள புத்தகங்கள் இனமாய்த் தரப்படும்.

இன்னுமொரு அத்தாக்ஷி

ஒருபிரசித்தி பெற்ற ஆஸ்பத்திரியிலிருந்து ஒரு தாதி பின் வருமாறு எழுதுகிறாள்:—

"மூன்று மாதமாய் வயிற்றுக் கடுப்பினால் கஷ்டப்பட்டுக்கொண்டிருந்த ஒரு இந்து சிறு பெண் ஆஸ்பத்திரியில் சேர்க்கப்பட்டாள். அவளுடைய குடல் மெலிந்து பலஹீனமாக இருந்தபடியால் பாலும் மற்ற எந்த பேடண்ட் ஆகாரங்களும் தங்கவில்லை. பிறகு அவளுக்கு நெஸ்லேஸ் பால் ஆகாரத்தின் [Nestle's Milk Food) கஞ்சி கொடுக்க அது அவளுக்கு ஒத்துக்கொண்டது. ஜீர்ணசக்தி சீக்கிரம் விர்த்தியடைந்து உடம்பு அனுகூலமாயிற்று. இக்கடிதம் எழுதும் சமயத்தில் அவள் சாதம் ரொட்டி முதலிய ஆகாரம் சாப்பிடக்கூடிய வகையிலிருந்தாள்."

இயற்கை உணவுகளான பால் கோதுமை இவைகளினால் செய்யப்பட்டதும் தவிர பலஹீனர்களும் வியாதியஸ்தர்களும் சீக்கிரத்தில் ஜீர்ணித்து மறுபடியும் ஆரோக்கியத்தை அடையும்படி சாஸ்திரப்படி செய்யப்பட்டிருப்பதினால் நெஸ்லேஸ் பால் ஆகாரம் பலத்தையும் ஆரோக்கியத்தையும் கொடுக்கிறது. சாதாரண வியாதியையுடைய குழந்தைகளுக்கும் பாலியர்களுக்கும் இதனால் உண்டாகும் நன்மைகள் ஆச்சரியப்படத் தகுந்தவை. இவ்வுணவினால் ஆண்மையுள்ள புருஷர்களாக மாறின குழந்தைகள் எண்ணிறந்தன.

குழந்தைகளுக்கும், வியாதியஸ்தர்களுக்கும் அதிலிருந்து குணமடைந்தவர்களுக்கும், வயோதிகர்களுக்கும் நெஸ்லேஸ் பால் ஆகாரம் பலத்தையும் சக்தியையும் கொடுக்கிறது.

அது முழுப்பால் ஆகாரம் என்பதை ஞாபகத்தில் வைத்துக்கொள்ளுங்கள். வேறு பால் சேர்க்க வேண்டியதில்லை. முதல் செலவைத் தவிர வேறு செலவு கிடையாது. அந்த விலையும் இதர ஆகாரங்களைவிட சாசமானது.

பெரிய டின் 1-க்கு விலை ரூபா 1-6-0 (தான்.)

வலதுபுறத்திலிருக்கும் மேல் விலாசத்திற்கு எந்த பாஷையில் எழுதி விசாரித்தாலும் பதில் அனுப்பப்படும்.



கீழ்க்கண்ட விலாசத்தைக் கிழித்து கவர் அல்லது கார்ட் மேல் ஒட்டி அனுப்பவும்.

NESTLÉ & ANGLO SWISS
CONDENSED MILK CO.,
POST BOX No. 396
CALCUTTA.

விவேக போதினி.

OF THE REGISTR
19 FEB 1926
MADRAS

1908-ம்௵ முதல் நடைபெறும் உயர்தரப் பத்திரிகை

யாவராலும் புகழப்பெற்றது

எவ்வயதினர்க்கும் எம்மதத்தினர்க்கும் உபயோகமான பற்பல அருமையான விஷயங்கள் எளிய நடையில் இதில் வெளிவருகின்றன. பெண்பாலார் விசேஷமாய்க் களிப்புடன் படிக்கக்கூடிய பத்திரிகை இஃதொன்றே.

ஏற்கெனவே, அழகாய்ப் பயிண்ட் செய்யப்பட்ட பதினேழு (17) வருஷப் புத்தகங்கள் விற்பனைக்குத் தயாராயிருக்கின்றன. ஒவ்வொரு வருஷக்காப்பியின் விலை ரூ. 6–0–0. 17-வருஷக் காப்பிகளும் சேர்த்து வாங்குவோர்க்கு ரூ. 75–0–0 க்குக் கொடுக்கப்படும். இத் தொகையை ஒரே மொத்தமாய்ச் செலுத்த முடியாதவர்கள், முதல் தவணையில் ரூ. 20-ம், பாக்கித் தொகை ரூ. 55-யும், மாதம் 5-ரூபா வீதம் 11-தவணைகளிலும் செலுத்திப் பெற்றுக்கொள்ளலாம்.

வருஷ சந்தா (தபாற் செலவுடன்)

உள்நாடுகளுக்கு	ரூபா	5–0–0
வெளிநாடுகளுக்கு	„	6–0–0

வருஷ சந்தாவை பாக்கியில் வைத்துக்கொள்ளாமல் முன்பணமாக அனுப்புவோருக்கு, பின்பக்கத்தில் கண்ட புத்தகங்களில் ரூ. 1–8–0 விலையுள்ள புத்தகமோ அல்லது புத்தகங்களோ இனாமாய்க் கொடுக்கப்படும். இப் புத்தகம் அல்லது புத்தகங்களை அனுப்ப ஏற்படும் தபாற் செலவை மாத்திரமே சந்தாதாரர்கள் ஏற்றுக்கொள்ளவேண்டும். தவிரவும், சந்தாதாரர்களுக்கு, பின் பக்கத்தில் கண்ட புத்தகங்களை 1-ரூபாய்க்கு 2-அணா வீதம், கமிஷன் தள்ளியும் அனுப்பப்படும். சந்தாவைப் பாக்கியில் வைத்துக்கொண்டிருப்பவர்கட்கு இச் சௌகர்யம் கிடைக்காது.

விளம்பர விகிதம்

முழுபக்கத்துக்கு ஒருவருஷத்துக்கு ரூ.	100
அரைபக்கத்துக்கு ஒருவருஷத்துக்கு „	60
கால் பக்கத்துக்கு ஒருவருஷத்துக்கு „	36

ஒரு வருஷம் அல்லது ஆறுமாத காலத்துக்குக் குறைந்த விளம்பரங்களை பத்திரிகையில் பிரசுரிக்க ஏற்றுக்கொள்ள முடியாது. வெளியூர் வாடிக்கைக்காரர்கள், 3-மாத விளம்பர விகிதத்தை முன்பணமாக அனுப்பவேண்டும். சென்னையிலுள்ள விளம்பரக்காரர்கள் மாத்திரம் தாங்கள் செலுத்தவேண்டிய விளம்பரத் தொகையை மாதாமாதம் செலுத்தலாம்.

அல்லயன்ஸ்

காலண்டர்கள்

12-மாதங்களுக்கும், 12-தினுசு ஆப்டோன் படங்கள்; இங்கிலீஷ் தேதியுடன் தமிழ்த் தேதி, முக்கிய விரதாதிகள் இவைகள் குறிக்கப்பட்டுள்ளன. இரண்டு கலரில் அச்சிடப்பெற்றது. திருப்புகழ் விருத்தியுரை வருஷ சந்தாதாரர்களுக்கும், மற்றும் நமது வாடிக்கைக்காரர்களுக்கும் காலண்டர் இனாமாய் அனுப்பப்படும். மற்றவர்கள் 3-அணா ஸ்டாம்பு அனுப்பிப்பெறவும்.

அல்லயன்ஸ் கம்பெனி, மயிலாப்பூர், சென்னை.

விலாஸம்:— மானேஜர், விவேக போதினி, மயிலாப்பூர், சென்னை.

உயர்தரமான தமிழ்ப் பிரசுரங்கள்

		ரூ.	அ.	ப.
ஷண்முக விஜயம் (படங்களுடன்)		0	12	0
ஆரியமத உபாக்கியானம், முதற் பாகம்	(படங்களுடன்)	0	8	0
ஆரியமத உபாக்கியானம், 2-ம் பாகம்	,,	0	10	0
ஸ்ரீமத் ராமாயண ஸாரம்	,,	1	0	0
ஸ்ரீமத் பாரத ஸாரம்	,,	1	2	0
ஸ்ரீமத் பாகவத ஸாரம்	,,	1	0	0
பஞ்சரத்தினம்	,,	0	12	0
மரகதவல்லி	,,	0	12	0
இயற்கை அற்புதங்கள்	,,	0	10	0
ராஜம் ஐயர் சரிதை	,,	0	8	0
முரளீதரன்	,,	0	10	0
வியாஸ விதானம்	,,	0	12	0
ஐரோப்பிய மஹா யுத்தம்	,,	1	4	0
திருமூலர் திருமந்திரம்	,,	2	4	0
பாண்டவ சரித்திரம் அல்லது தருமமே ஜயம்	,,	2	4	0
பீஷ்மர் சரித்திரம்	,,	0	6	0
குஹன் சரித்திரம்	,,	0	4	0
விக்ரமசிங்கன் கோட்டை மர்மம் அல்லது கற்பின் வெற்றி		1	0	0
தனபாக்கியம் அல்லது ஓர் அதிருஷ்டவதியின் சரித்திரம்	,,	2	0	0
ஷண்முகசுந்தரம் அல்லது காதல் திறம்	,,	2	0	0
தஞ்சைநாயகர் தாழ்வு அல்லது விதியின் வலிமை	,,	1	0	0
பரதன் அல்லது ப்ராத்ரு சிகாமணி	,,	0	12	0
ருக்மிணி அல்லது பதி பக்தி	,,	0	8	0
ஸ்ரீமத் ராமாயண வினாவிடை (7-காண்டங்களும்)	,,	1	8	0
ஸ்ரீமத் பாரத வினாவிடை (இரண்டாம் பாகம்)		1	4	0
ஷை. (மூன்றாம் பாகம்)		1	4	0
சிவ்குமாரன் அல்லது கொலைஞன் யார்?		1	0	0
மோகனாங்கி அல்லது காணாமற்போன பெண்மணி		1	4	0
விஜயபாஸ்கான் அல்லது ஒரு குற்றத்துக்கு ஒன்பது குற்றம்	(புதிய பதிப்பு)	(அச்சில்)		
மனுநீதிச்சோழன் (மனுமுறை கண்ட வாசகம்)		0	8	0
ஹனுமப் பிரபாவம்		0	3	0
புலவர் சரித்திரத்திரட்டு		0	12	0
ஸ்திரீரத்னம்		1	4	0
ஜகஜ்ஜோதி		0	10	0
பீமலா அல்லது திவான் மகள்		0	8	0
செல்வராஜன்		0	12	0
சற்குணசந்திரன்		0	10	0
பிரபாவதி		0	4	0
கிரிஸெல்டா அல்லது பொறுமையுள்ள மனைவி		0	3	0
ஹிமார்ஜுனை		0	8	0
ஷேக்ஸ்பியர் சரிதையும், பெரும்புயலும்		0	8	0
நீலிவசீகரம்		0	10	0
பூதத்வ போதினி		0	10	0
தேடாத செல்வம்		0	3	0
கமலாகாந்தன் அல்லது பித்தன்		0	2	0
குண்டலகேசி அல்லது தற்கொல்லியை முற்கொன்றவள்		0	5	0
அம்பலவாணன் அல்லது நாவாய்க் கைதி (முதற் பாகம், நான்கு ஆப்டோன் படங்களுடன்)		1	8	0
டிரெயினிங் ஸ்கூல் ஆரம்ப கணிதம்		1	0	0
ஸ்ரீ பால ராமாயணம் (படங்களுடன்)		0	8	0
நால்வர் சரித்திரம்	,,	0	12	0
மைதிலி—மிகவும் உயர்ந்த நாவல்		0	12	0
தஞ்சாவூர் ஜில்லாவின் வரலாறு		0	8	0

விலாஸம்:— மானேஜர், விவேக போதினி, மயிலாப்பூர், சென்னை.

21837.

உ. வேலுமயிலுந் துணை

அருணகிரிநாதர் அருளிச்செய்த

திருப்புகழ்

விருத்தி உரை

முதல் தொகுதி 6- படை வீடுகள்

டெமி அளவில், 64-பக்கங்கள்கொண்ட 12-சஞ்சிகைகளாக வெளிவருகிறது. கிளேஸ் காகிதத்தில் ஒரு பதிப்பும், பெதர்வேயிட் எனும் விலையுயர்ந்த காகிதத்தில் ஒரு பதிப்பும், ஆக இரண்டு பதிப்புகள் வெளிவருகின்றன :—

வருஷ சந்தா (தபாற் செலவுடன்)

கிளேஸ் காகிதப் பதிப்புக்கு ரூ.	4 12	கிளேஸ் தனிச்சஞ்சிகை அணா	7
பெதர்வெயிட் காகிதப்பதிப்பு ,,	6 0	பெதர்வெயிட் ஷை ,,	9

பத்திரிகை அபிப்பிராயங்கள்

சுதேசமித்திரன்.— * * நமக்குக் கிடைத்துள்ள விருத்தி உரை, முதனூலின் அழகிற் கியைந்ததா யிருக்கிறது. முருகன் அழகன், திருப்புகழ் அழகியது. இந்தப் புத்தகமும் அழகாக அச்சிடப்பட்டிருக்கிறது. * சில பாடல்களின் உரை, மிக்க விசேஷமானதென்று அறிவிக்கப்பட்டோம். ஆனால் ஒவ்வொரு பாட்டின் உரையும் அப்படியேதான் இருக்கிறது.

லோகோபகாரி.— * * இது கண்ணுக்கும் கருத்துக்கும் இன்பம் விளைக்கிறது. அருணகிரிநாதர் அருளிச்செய்த திருப்புகழின் பெருமையை நாம் சொல்லவல்லோ மல்லேம். அதனைத் தமிழ் மறை என்பார் அறிஞர். பண்டிதரும் பாமரரும் போற்றும் திருப்புகழுக்கு உரையில்லாத குறை நெடுநாளாக இருந்து வந்தது. அந்தக் குறை முருகன் அருளால் இப்பொழுது நீங்கிவிட்டது. * * இதனைப் படிப்போர் திருப்புகழின் உட்கருத்தைத் தெளிவாக அறிந்துகொள்ளலாம். * * முருகன் அடியார்களும் திருப்புகழ் விருப்புடையார்களுமான தமிழர்கள் இதனை ஆதரிக்கவேண்டு மென்பதை நாம் சொல்வது மிகையாம். * * இந்த நன்முயற்சியைத் தமிழர்கள் போற்றுவார்களாக.

தமிழன்.— * * அருணகிரிநாதர் அருளிய திருப்புகழ் போன்ற நூல்களுக்கு நல்ல பதிப்புகள் வெளியிடப் பெறுவதும் ஓர் ஆனந்தமே யாகும். இத்தகைய ஆவல் அல்லயன்ஸ் கம்பெனியாருக்கு ஏற்பட்டதைப்பற்றி நாம் மகிழ் வெய்துகிறோம். * * தமிழைப் புதிதாகக் கற்கும் மாணவருக்கும் திருப்புகழ் படிப்பதில் துணை செய்வதாகும். பொதுவாகத் தமிழ் மக்களும் சிறப்பாக முருகக் கடவுளது அடியார்களும் திருப்புகழுக்கு விருத்தியுரை காணும் நன்முயற்சியினை ஆதரிப்பார்களென்று நம்புகிறோம்.

இந்து சாதனம்:—* * உரை மிக நுட்பமாகவும் விரிவாகவும் பல தக்க பிரமாண சகிதமாகவும் இனிது எழுதப்பட்டுள்ளது. பிரதி, கண்டோர் கண்கவரும் வனப்பினதாய் அழகுற அச்சிடப்பட்டிருக்கின்றது. சிவபெருமானுக்குக் குமாரக் கடவுள் பிரணவப் பொருளை ஓதிச் சிவகுருமூர்த்தமான திருவுருவப் படம் திருவருள் விலாஸத்தோடு கூடியனவாய் எவ்வகைக் கன்னெஞ்சினரையும் கண்ட மாத்திரத்தே உருகச்செய்யும் பான்மையனவாய் அமைக்கப்பட்டுள்ளது.

ஸமரஸ போதினி:—* * * திருப்புகழுக்கு இதுவரை, நமக்குத் தெரிந்தமட்டில், இத்தகை உரை இலது. இவ்வுரை மிகவும் அழகிய நடையில், பொருள் நுட்பங்களை மழுப்பிவிடாது நன்குவிளக்கி எழுதப்பட்டிருக்கின்றது. பொதுவாகவே இஃது புலவர் விருந்தாகத்தக்கதே என நாம் கூறுவோம்.

விலாஸம்:— அல்லயன்ஸ் கம்பெனி, மயிலாப்பூர், சென்னை.

A. (No. 963) **Aletris Cordial**

அல்லெட்டரிஸ் கார்டியல்

ஸ்திரீகளின் பலஹீனத்தைத் தீர்க்கும் மருந்து

உலகெங்கும் வைத்தியர் யாவராலும் ஸ்திரீகளின் சகலவிதமான நோய்களுக்கு உபயோகிக்கப் படுவது. ருது அடையநிற்கும் சிறுமிகளுக்கும் இம்மருந்து மிகச் சிறந்தது.

அளவு:—தேயிலைக் கரண்டி மருந்தை, உண்ட பின்னும், நித்திரைக்குப் போவதற்கு முன்னும் உட்கொள்ளவேண்டும். உஷ்ணமான ஜலத்துடன் கலந்துகொண்டால் விசேஷ குணம் உண்டு.

Celerina

ஸிலரீனா

பலமற்றவர்க்குக் கைகண்ட மருந்து

உண்பதற்கும், உறங்குவதற்கும் ஒரு மணி முன்பு ஒரு தேயிலைக் கரண்டியளவு, நாளுக்கு மும்முறை சாப்பிட்டால், மனத்தளர்ச்சி, அலட்டல், புரட்டல், தூக்கமில்லாமை, மூர்ச்சை, மயக்கம், நரம்புக்கேடா லாகும் அஜீர்ணம், பலஹீனம், குடிக்கேடால் விளையும் நோய்கள் இவை யாவும் ஒழிந்து உடம்பு புஷ்களமடையும். லாகிரி வஸ்துக்கள் கலவாது, மூளை வஸ்து விருத்தியடைய, கவனத்துடன் செய்யப்பட்டது.

இப்பிரசித்திபெற்ற மருந்துபோல் போலியாக இருக்கும் மருந்துகளைப் பார்த்து ஏமாறுமல்

RIO CHEMICAL COMPANY, NEW YORK CITY, U. S. A.

என்ற லேபிலைப் பார்த்து வாங்கவும். இது மருந்துக்கடைகளில் எங்கும் கிடைக்கும்.

(A. No. 2278)

பாலாஜி அண்டு கம்பெனி, காசி.

புதிய சரக்குகள்! உடனே எழுதுங்கள்!! சகாய விலைகள்!!!

புதுமாதிரி பட்டுப் புடவைகள்

இந்தப் புடவைகள் மெல்லிய பட்டினுல் பளபளப்பாகவும் அழுத்தமாகவும் நெசவு செய்யப்பட்டுள்ளது. சிவப்பு, பச்சை, ரோஜா, நீலம் முதலிய கலர்களில் விழிம்பு முந்திகளும் அழகான ஜரிகை வேலையும் செய்யப்பட்டுள்ளது. 8 கஜம் 2½ முழம் அகலம், புடவை 1-க்கு விலை ரூ. 25, 30, 35-முதல் 45-வரை.

பட்டு ரவிக்கைகள்

உடல் சாதா விழிம்புக்கு அழகான ஜரிகைவேலை செய்யப்பட்டு பலவித புதுமாதிரி கலர்களில், ரவிக்கை 1-க்கு விலை ரூ. 3-முதல் ரூ. 5-வரை.

விளையாட்டுப் பாத்திரங்கள்

பித்தளை வெங்கலத்தால் செய்த 32-வித சாமான்கள் அடங்கியதும், குழந்தைகளுக்கு சந்தோஷத்தை உண்டுபண்ணக் கூடியதுமானவை:

1 நெ. பெரிய செட் 1-க்கு	ரூ.	5 0 0
2 நெ. மத்திம செட் 1-க்கு	ரூ.	3 0 0
3 நெ. சிறிய செட் 1-க்கு	ரூ.	2 8 0

அன்னபூர்ணி அம்மன் ஸ்தோத்திரம் இனும்.

Balajee & Co., Silk Merchants,

Benares City.

20-பதிப்புகளுக்குமேல் வெளிவந்திருக்கின்றன. சுமார் **100,000** பிரதிகள் வரை செலவாயிருககின்றன. ஆகையால் இவைகளின் சிறப்புக்கு வேறு அத்தாக்ஷியும் வேண்டுமோ? எலிமெண்டரி உபாத்தியாயர்களுக்கும், வியாபாரிகளுக்கும் தகுந்த கமிஷன் கொடுக்கப்படும்.

ஆரியமத உபாக்கியானம்.

புதிய பதிப்புகள்

முதற் பாகம் = = = = விலை அணா **8**	துரைத்தனத்தார் அங்கீகரித்தவை	இரண்டாம் பாகம் = = = = விலை அணா **10**

ஒவ்வோர் பாகததிலும் நமது இராமாயண, பாரத, பாகவத கிரந்தங்களிலிருந்து எழுதப்பட்ட பற்பல நீதிக் கதைகள் அடங்கியிருக்கின்றன. அநேகம் அழகிய ஆப்டோன் படங்கள் கொண்டது. பள்ளிக்கூடச் சிறுவர் சிறுமியரும் வாசிக்கத்தகுந்த எளிய நடையில், இனிய தமிழில் இவை எழுதப்பெற்றிருப்பது பாராட்டத்தக்கது. இதன் **3**-ம் பாகம் தயாராகி வருகிறது. அநேகம் படங்களுடன் விரைவில் வெளிவரும்.

சில முக்கிய அபிப்பிராயங்கள்

Sir P. S. Sivaswami Ayyar, K. C. S. I. C. I. E.—* *The stories are such as to appeal to all boys and are told in an easy popular style. *The work is very well adapted for the lower forms of our schools.*

The Madras Mail.— *The book is well adapted for use in the lower forms of schools as a Text Book of Morals.*

The Hindu.— Can be profitably introduced into Elementary Schools for Moral Instruction.*

தேசபக்தன்.—மனித வாழ்க்கைக்கு இன்றியமையாது வேண்டற்பாலனவாய ஒழுக்கம், பக்தி, கடமை முதலியவற்றைச் சரித்திர வடிவாகப் **படிப்போர் மனதில் பசுமரத்தாணிபோல் பதியுமாறு எளிய தமிழ் நடையில் எழுதியிருக்கிறார்.** இளமையில் இந்நூலை வாசிப்போர், வயதில் எல்லாவித நறுங்குணங்களையும் பெற்றுத் தேசத்துக்கு நலஞ் செய்பவராவர் என்பதிற் சந்தேகமில்லை. தற்கால நாகரிகம் எனனும் விஷயம் இந்தியாவை எரித்துவரும் இந்நாளில், இந்தியாவின் பண்டைப்பெருமைகளை நிறுத்த வல்ல இத்தகைய நூல்கள் வெளிவருதல் வேண்டுமென்பது நமது கோரிக்கை.

இந்நூல் வாசக பாடமாகவும், சமய பாடமாகவும் ஆண், பெண் பாடசாலைகளில் போதிக்கப்படல் வேண்டும். இந்நூல் சிறுவர் சிறுமியர் உள்ளத்தைக் கவரத்தக்கவாறு எழுதப்பெற்றிருப்பது பாடசாலை அதிகாரிகள் கவனிக்கத்தக்கது. இடையிடையே கதைகளுக்கேற்ற படங்களும் அமைக்கப் பெற்றிருக்கின்றன.

சுதேசமித்திரன்.—புராதனமான நமது புராண இதிகாசங்களில் பொதிந்து கிடக்கும் நீதியைப் புகட்டக்கூடிய அநேக கதைகள் இச்சிறந்த நூலில் அடங்கியுள. நமது சிறுவர்களை ஆதி முதலே நல் வழிப்படுத்தி நீதி மார்க்கங்களை அவர்களுக்கு அறிவூட்ட இத்தகைய புத்தகங்கள் தக்க கருவிகளாகுமென்பதை நாம் சொல்லவேண்டியதில்லை. **இத்தகைய சிறந்த நூலை நமது கல்விச்சாலைகளில் பாடப் புத்தகமாக ஏற்படுத்தல் மெத்த அவசியம். கீழ்தரப் பாடசாலை மாணவர்களுக்குத் தகுந்தபடி இப்புத்தகம் நன்றாக எழுதப்பட்டிருக்கிறது. இது பால்யர்களுக்கு நீதிமார்க்கங்களைப் போதிக்கும் அருமை நூலாகும்.**

வைசிய மித்திரன்.—* * நம் தமிழ்நாட்டில் "தேசியக் கல்வி" என்ற சொல் பரவு முன்னமேயே, நமது இந்து மதத்தின் சிரோரத்தினமாய் விளங்குகின்ற வேதம், உபநிஷத், மகாபாரதம், புராணம் முதலிய உயர்தர நூற்களினின்றும் உத்தம தரும தத்துவங்களைக் கதைகளின் மூலமாகவே சிறுவர் சிறுமியருக்குக் கற்பிக்க விரும்பி, கல்விபயிலும் மாணவர்க் கெல்லாம் சிறந்ததோர் ஞானவுணவளித்து தேசீயக் கல்வியின் அஸ்திவாரத்தை ஆஸ்திக முறையில் வலுப்படுத்திவிட்டதைக் குறித்துப் பெரிதும் மகிழ்ச்சியுறுகின்றோம். நமக்குக் கிடைத்துள்ள புத்தகங்கள் **13**-ம் பதிப்பாக வெளியிடப்பட்டிருப்பதைப் பார்க்கத் தமிழ்நாட்டு மக்களும், கல்விச்சாலைத் தலைவர்களும் இதன் பயனை நன்குணர்ந்து ஆதரிக்கிறார்களென்றே கருத இடமுண்டு. இவ்விரண்டு புத்தகங்களும் ஒவ்வொரு குடும்பத்திலும் ஸ்திரீ புருஷர்களால் பெரிதும் ஆதரித்தும் படிக்கத்தக்கனவாம். இரண்டு பாகங்களின் விலை ரூ. **1—2—0.**

விலாஸம்:— மானேஜர், விவேக போதினி, மயிலாப்பூர், சென்னை.

Please note the Price!!

22ct. Rolled Gold
WRIST WATCH Rs. 12-8



Small Size and handy Similar to an eight anna coin, assorted fancy mirage bezel shapes, enamel dial with clear figures stamped inside the case as "Guaranteed for Five Years" by the makers, Highest standard with Swiss mechanism with hinged back. Complete with fine strap Rs. 12-8-0:

18 ct. Rolled Gold Wrist Watch 3 years Guarantee Rs. 7.

புதிய மாதிரி *!!* நூதனமானது *!!!*



உயர்ந்த வால்நட் கேஸில் செய்யப்பட்ட

ஆபீஸ் கிளாக் - ரூபா 5.

இந்த ஆபீஸ் கிளாக், பெயர் பெற்ற கெடியார கம்பெனியாரால் செய்யப்பட்டு எங்களால் வரவழைக்கப்பட்டது. பார்வைக்கு மிக்க அழகாயும், சுவற்றில் மாட்டுவதற்கு மிக்க ரம்மியமாக இருக்கிறது. எல்லா விடங்களிலும், கவர்ன்மெண்டு லோகல்பண்டு, முனிசிபல், மற்ற வியாபார ஆபீஸ்களில், இக்கெடியாரம் (பிரான்ஸ் தேசத்தின் ஆபீஸ் கிளாக்கை) சந்தோஷத்துடன் உபயோகித்து வருகிறார்கள். முந்துங்கள் *!!*

5-வஷரும் உத்திரவாதம். விலை 1-க்கு ரூ. **5**

ஜெர்மன் "பீ" டைம்பீஸ் ரூ. 2-8-0. 18-காரட் ரோல்ட்டு கோல்ட்டு கைகெடியாரம் ரூ. 7. 22-காரட் ரோல்டுகோல்டு கை கெடியாரம் ரூ. 12-8-0.

விலாஸம்:—**காப்டன் வாச் கம்பெனி,**
தபால் பெட்டி நெ. 265, மதராஸ்.

A. (No. 2700)

ஷண்முகம் மூக்குத்தூள்

70-வருஷ காலமாக குணத்தில் உயர்ந்ததாயும், மணத்தில் இதர பொடியைவிட மேன்மையாயு மிருந்து, இந்தியா, பர்மா, ஸிலோன் முதலிய இடங்களில் ஏராளமாய் விற்பனையாய் வருகிறது.

4 பலம் **13** அண. **5** பலம் **15** அண.

ஆர். கே. பரிமள மூக்குத்தூள் **1**புட்டி அண **4**.

(போஸ்டேஜ் உள்பட)

மறந்துவிடுமுன் எழுதவும்

ஷண்முகம் ஸ்னப் கம்பெனி, லிமிடெட்.

தபாற்பெட்டி நெ. 140, சென்னை.

பெரிய கம்பெனி! பெரிய கம்பெனி!!

பட்டு பீதாம்பர கம்பெனி, ஸ்ரீகாசி

நாணயமான சரக்குகள்.

சுத்தமான பட்டு! சகாய விலை!!

உயர்தரமான

பட்டு பீதாம்பர சேலைகள் ரவிக்கைகள்

துப்பட்டாக்கள், வெண்பட்டு வேஷ்டிகள், அங்கவஸ்திரங்கள், உருமால்கள் முதலிய எல்லாத் தினுசுகளும், சிவப்பு, ரோஸ், ஊதா, பச்சை, மஞ்சள், மேகவர்ணம், வெள்ளை, சிலேட் கலர், ஆரஞ்சு, கத்தரிப்பூக் கலர், கிரிம்ஸன் முதலிய எல்லா இங்கிலீஷ் கலர்களிலும் மிகவும் சரச விலைக்குக் கிடைக்கும்.

பட்டு பீதாம்பர கேட்லாக் இனாம்.

உடனே எழுதுங்கள்.

Address.—**Manager,** (A. No. 2914)

Silk Pitamber Co., *Benares City.*

விலாஸம்:—மானேஜர்,

பட்டு பீதாம்பர கம்பெனி, ஸ்ரீகாசி.

உன் சுகத்திற்காக கவனி

உனக்கு பசிதீபன மில்லாவிட்டாலும் சரி, நீ எலும்பும் தோலுமாய் இளைத்துப்போயிருந்தாலும் சரி, உன்னுடைய கண்கள் குழிவிழுந்திருந்தாலும் சரி, உன்னுடைய மூளை பலயீனமடைந்து அதனால் நீ ஞாபகசக்தி குறைவடைந்திருந்தாலும் சரி, நீ மலச்சிக்கலினால் கஷ்டப்பட்டுக்கொண்டிருந்தாலும் சரி, உன்னுடைய தேகத்தில் பலமில்லாவிட்டாலும் சரி, இன்னும் இதர தொந்திரவுகளை யெல்லாம் எங்கள்

ஆதங்கநிக்ரஹ மாத்திரைகள்

வேரோடு களைந்துவிடுமென்று அறிவிக்கிறோம். மேற்படி மாத்திரைகள் சென்ற 42-வருஷங்களாக இந்தியாவிலும் வெளிநாடுகளிலும் உபயோகப்படுத்தப்பட்டு வருகின்றன. அவைகளை உபயோகித்த சொற்பகாலத்தில், உனக்கு தூக்கத்தையும் பலமான ஞாபக சக்தியையும், அதிக பலத்தையும் கொடுக்கும்.

32-மாத்திரைகளடங்கிய டப்பி 1-க்கு விலை ரூ. **1**. கேட்போருக்கு கேட்லாக் இனாம்.

வைத்திய சாஸ்திரி மணிசங்கர் கோவிந்தஜி

ஆதங்கநிக்ரக ஔஷதாலயம், போஸ்ட்பாக்ஸ் நெ. 1252, பிராட்வே, மதராஸ்.

(A. No 1819) THE MOST CHARMING PERFUME

OTTO DILBAHAR (Registered.)

எல்லோருடைய மனதையும் அதியுற்சாகப்படுத்தும் சுகந்தம்

ஆடோ தில்பஹாார் (ரேஜிஸ்டார்ட்.)

நீடித்திருக்கக் கூடியதும், நிகரில்லாத உன்னத வாசனையுடையதும், மனதிற்கு சந்தோஷ முண்டாக்கக் கூடியது. ஆல்கஹால், சாராயம் முதலிய சம்பந்தமில்லாத பொறுக்கான சில சுகந்த புஷ்பங்களிலிருந்து இறக்கிய சத்தினுல் சேர்க்கப்பட்டது. உம்முடைய கைகுட்டையில் சில துளிகள்விட, புஷ்பத்தோட்டத்தின் மத்தியிலிருந்து அனுபவிக்கக்கூடும் வாசனையை தரக்கூடியது. விவாக காலங்களிலும், பூஜாகாலங்களிலும், இன்னும் மற்ற சென்டுகள் அத்தர்களைவிட இத்த ஆடோ டில்பஹாார் அதிக இன்பத்தைக் கொடுக்கும்.

அடியில் வருமாறு அளவு புட்டிகளில் நிறப்பி விற்கப்படுகிறது.

பெரிய புட்டி 1-க்கு	(4-டிராம் அல்லது ½-அவுன்ஸ்)	விலை ரூ.	2—0—0
வேறு ,,	(2-டிராம்)	,,	1—4—0
நடுத்தரம் ,,	(1-டிராம்)	,,	0-12—0
சிறிய புட்டி ,,	(½-டிராம்)	,,	0—8—0
மாதிரி ,,		,,	0—2—0
வாசனைக் கார்ட் 1-க்கு		,,	0—1—0

பிரசித்தமான எல்லா வியாபாரிகளாலும் விற்கப்படுகிறது. இதே மாதிரி அநேக பெயர்கள் மார்க்கட்டில் இருப்பதால், வாங்கும்போது புட்டிகள் பேரில் ஆடோ டில்பஹாார் என்னும் பெயர் இருக்கிறதா என்று கவனித்துப் பார்த்து ஜாக்கிரதையுடன் வாங்கிக்கொள்ளவும்.

சோல் ஏஜண்டுகள்:—

ஆங்கிலோ இண்டியன் டிரக் அண்டு கெமிகல் கம்பெனி,

155, ஜும்மா மஸித், மார்க்கட், பம்பாய்.

ஆறுமுகக்கடவுள்.

விவேகபோதினி

"எப்பொரு ளெத்தன்மைத் தாயினு மப்பொருண்
மெய்ப்பொருள் காண்ப தறிவு."—திருவள்ளுவர்.

தொகுதி 18 | குரோதனஹு தைமீ :: 1926-ம் ஹு ஜனவரிமீ | பகுதி 1

முருகன் வழிபாடு
WORSHIP OF LORD MURUGA

செகமாயை யுற்றெ னகவாழ்வில் வைத்த
திருமாது கெர்ப்ப முடலூறித்
தெசமாத முற்றி வடிவாய்நி லத்தில்
திரமாய ளித்த பொருளாகி
மகவாவி னுச்சி விழியான னத்தில்
மலைநேர்பு யத்தி லுறவாடி
மடிமீத டுத்து விளையாடி நித்த
மணிவாயில் முத்தி தரவேணும்
முகமாய மிட்ட குறமாதி னுக்கு
முலைமேல ணைக்க வருநீதா
முதுமாம றைக்கு ளொருமாபொ ருட்குள்
மொழியேயு ரைத்த குருநாதா
தகையாதெ னக்கு னடிகாண வைத்த
தனியேர கத்தில் முருகோனே
தருகாவி ரிக்கு வடபாரி சத்தில்
சமர்வேலெ டுத்த பெருமாளே!*

(பதவுரை) முக மாயம் இட்ட குறமாதினுக்கு - முகத்தின் அழகினால் நின்னை மயக்கின குறப்பெண்ணான வள்ளிநாயகிக்கு, முலைமேல் அணைக்கவரு(ம்) நீதா - அத்தேவியார் நாயகனாகிய நின்னை அணைத்துக்கொண்டுகளிக்குமாறு வந்த நீதிமானே! முது மா மறைக்குள் ஒரு மா பொருட்கு - பழமையான சிறந்த வேதங்களுக்குள் பொருந்தியுள்ள ஒப்பற்ற சிறந்த பொருள் ஒன்றுக்கு (பிரணவத்துக்கு), உள்மொழியே உரைத்த குருநாதா - அந்தரங்கப் பொருளை உபதேசித்தருள குருவாய் வந்த நாதனே! தகையாது எனக்கு உன் அடிகாணவைத்த - அடியேன் (துயரத்தினால் வருந்தி) இளைக்காமல் உனது பாதாரவிந்தங்களைக் காணும்படி செய்த (பெருமானாகிய) தனி ஏரகத்தின் முருகோனே - ஒப்பற்ற தலமாகிய **ஏரகம் என்னும் ஸ்வாமி மலையில்** எழுந்தருளியிருக்கும் ஞானவாசனை வீசும் நாதனே! தருகாவிரிக்கு வடபாரிசத்தில் - வளப்பத்தைக் கொடுக்கும் காவிரியாற்றின் வடபாகத்தில்(உள்ள அத்தலத்தில்), சமர்வேல் எடுத்த பெருமாளே - போருக்குரிய வேலாயுதத்தைக் கையிலெடுத்த பெரியோனே! செகமாயை உற்றெ(றே)ன் - உலகமாயையினால் பீடிக்கப்பட்டுள்ள அடியேனது, அக வாழ்வில் வைத்த திருமாது - அகவாழ்க்கையில் (மனத்தினுள் வாழும் வாழ்க்கையில்) நீ அமர்த்திவைத்த(அந்தக்காரணமான) நலமுற்ற பெண்ணினுடைய, கெர்ப்பம் உடலூறி தெசமாதம் முற்றி - கர்ப்பத்தில் சேர்ந்து உடல் பருக்கப்பெற்று பத்து மாதகாலம் அதில் தங்கி முதிர்ந்து, வடிவாய் நிலத்தில் திரமாய் அளித்த பொருளாகி - குழந்தையின் உருவத்துடன் பூமியில் அவள் உறுதியாகப் பெற்றெடுத்த பொருளாகி, மக அவாவின் உச்சி விழி ஆனனத்தில் மலைநேர் புயத்தில் உறவாடி - மிகுந்த ஆசையுடன் தலையின் உச்சி கண்கள் முகம் மலைபோல் பருத்த தனபாரங்கள் இவைகளுடன் குலாவி, மடிமீது அடுத்து விளையாடி - மடிமீது அமர்ந்து விளையாடி, நித்தம் மணி வாயில் முத்தி தரவேணும் - தினந்தோறும் நினது அழகிய வாயினால் முத்தம் தரவேண்டும்.

(விருத்தியுரை) வள்ளிநாயகியினுடைய ஆசையைப் பூர்த்திசெய்வதற்குத் தக்க சமயத்தில் வந்து உதவிய வரும், சிறந்த வேதங்களில் அடங்கிய பிரணவத்தின் அந்தரங்கப் பொருளை எடுத்துரைத்த ஞானதேசிகருமான முருகப்பெருமானை விளித்துச் சுவாமிகள் பின் வருமாறு பிரார்த்திக்கிறார் :—உலகமாயையினால் பீடிக்கப்பட்டிருக்கும் அடியேன், வருந்தி இளைக்காமலிருக்குமாறு தேவரீர் பாத தரிசனம் தந்தருளியதனால், உண்மையான பொருள் யாதென்று உணர ஆராயத் தொடங்கினேன். அவ்வாறு ஆராயத் தொடங்குவதே ஞானத்தை அடைவதற்குரிய நெறி

(இதன் தொடர்ச்சி 12-ம் பக்கம் பார்க்க.)

*திருப்புகழ் விருத்தியுரை :—தொகுதி 1, மலர் 2, பாட்டு 32, மயிலாப்பூர் அல்லயன்ஸ் கம்பெனியார் வெளியீடு. வருஷ சந்தா ரூ. **6-0-0. 4-12-0.**

விவேக போதினி

தொ. 18] குரோதன௵ தைமீ [ப. 1

கௌடல்ய அர்த்த சாஸ்திரம்

ARTHASASTRA OF KAUTALYA (CHANAKYA)

பரததேச வாஸிகளான இந்துக்கள் அனைவரும் தருமம், அர்த்தம், காமம், மோக்ஷம் (அறம், பொருள், இன்பம், வீடு) என்ற நால்வகைப் புருஷார்த்தங்களைக் கைப்பற்றி உலக வாழ்க்கை நடத்தி வரவேண்டுமென்பது ஆதி முதல் ஏற்பட்டுள்ள ஓரின்றிமையாத கொள்கையாகும். ஏதோ கால வித்தியாசத்தால், சுமார் 1000 வருஷகாலத்திற்கு மேலாக நம் நாட்டு மன்னர்கள், தருமமிழந்து அசூயை பாராட்டி, ஒருவரோடொருவர் கலகஞ் செய்துகொண்டு, வீண் போராட்டமாடத் தலைப்படவே, அந்நிய தேசத்தவர்கள் நம் தேசத்தின் மீது படையெடுத்துக் கைப்பற்றும்படி நேரிட்டது. இதன்உண்மை அறியாதவர்கள், நம் பூர்வீகர்கள் உலக வாழ்க்கைக்கு வேண்டிய சாதனங்களைச் சரிவரக் கவனியாது, மறுமையிலுள்ள மோக்ஷமென்பதை வற்புறுத்திக்கூறி, வேதாந்த விஷயமான தகவல்களிலேயே நம் மனம் நாடும்படி செய்துவிட்டதால்தான், இவ்வுலக ஐசுவரியாதிகள் விஷயத்தில் மற்ற ஜாதியார்களைக் காட்டிலும் நாம் மிகக் கேவலமான நிலைமையி லிருந்துவரக் காரணம் ஏற்பட்டுள்ளது எனக் குறை கூறிவருகிறார்கள். இவ்வாறு சொல்வது சரியல்ல.

மேற்கூறிய நான்கு புருஷார்த்தங்களைப் பற்றியும் முன்னோர்கள் எழுதியுள்ள கிரந்தங்கள் பல உள. இவற்றை நன்றாய் ஆராய்ந்து பார்ப்பவர்களுக்கு, மோக்ஷத்தைப்போல், மற்ற மூவித புருஷார்த்தங்களும் மிக்க அவசியமானவை என்பதுதான் நம் பூர்வீகர்களின் கருத்து என்பது நன்கு விளங்கும். மேலும், மோக்ஷமென்பது உயர்தர ஞானமடைந்து அறியத்தக்க விஷயம். தர்மாதி மூவகை விஷயங்களோ ஒவ்வொரு நாளும் நாம் கைக்கொண்டு நடக்கத் தக்கவை. இவை சம்பந்தமாக பலவித தகவல்கள் கூறி, தேக ஆரோக்கியம், பொருள் சம்பாதனம், பாவமற்ற சுகானுபவம் இவைகட்கெல்லாம் ஆதாரமாயும், நம் நாட்டின் சீதோஷ்ண ஸ்திதி, பழக்கங்கள், மனோபாவங்கள் இவற்றிற்கு ஏற்றவாருமுள்ள விதிகளை நியமித்து நல்வழி காட்டியிருக்கிறார்கள். எக்காரணங்களாலோ, நாம் இவற்றை அசட்டை செய்து, அனுஷ்டானத்தில் கை நழுவவிட்டு, பிறநாட்டார் நம்மை ஆக்ரமிக்கும்படிவிட்டு, நாம் தாழ்ந்த நிலைமையி லிருப்பதற்குவேண்டிய காரணம் தேடிக் கொண்டால், இவ்வித கேவலஸ்திதிக்கு நம் முன்னோர்களின்மீது பழி சுமத்துவது உசிதமாகுமா?

சுமார் 1000 வருஷங்களாக இவ்வித நூல்களைப்பற்றிய கவனம் நமக்கில்லையென்றே சொல்லலாம். அநேகம் எதிரிகளால் அழிக்கப்பட்டு, பிரசுரமாகாமலே போய்விட்டன. ஏதோ சில கையெழுத்துப் பிரதிகள் கிடைத்தாலும் அவற்றை அச்சிட்டு வெளியிட வேண்டுமென்கிற சிரத்தை வெகு அபூர்வமாய்விட்டது. பாடசாலைகளிலும், உயர்தர கலாசாலைகளிலும், மாணாக்கர்கள் இவ்விஷயமாகக் கற்றறியவேண்டிய தகவல்கள் கிடையவே கிடையாது. மற்றைய பொது ஜனங்கள் இவற்றைத் தெரிந்து கொள்வதற்கான சாதனங்களுக்குக் கேட்பானேன்?

ஆகாரம், விவகாரம், சிற்றின்ப அனுபவம் இவை சம்பந்தமாக யாதொரு நிர்ப்பந்தமுமில்லாமல், ஒவ்வொருவரும் யதேச்சையா யிருந்துவர வேண்டுமென்ற மனப்பாங்கு நிறைந்ததும் நவீன நாகரிகம் பொருந்தியுமுள்ள இக்காலத்தில், தருமாதி சம்பந்தமான நூல்களை ஆதரித்துப் பிரசாரஞ் செய்ய முயல்வோர் மிகவும் சொற்பமே. மேனாட்டு தருமம், அர்த்த சம்பாதனம், இராஜ்ய பரிபாலன முறைகள் முதலியனவே கவனிக்கப் பட்டுவருகின்றன. நமது பூர்வீக தருமசாஸ்திரங்கள், அர்த்தசாஸ்திரங்கள், பூகோளம், ககோளம், கணிதம்,வைத்தியம்முதலியன சம்பந்தமான நூல்களின் பிரசாரமானது ஆதரவுக்குறைவால்அநேக

நூற்றாண்டுகளாக வரவரத் தாழ்ந்த நிலைமையை அடைந்து வந்துகொண்டிருக்கிறது. முற்றிலும் ஞானத்தைப் பொறுத்துள்ள வேதாந்த சாஸ்திர விசாரம் மட்டிலும், ஆங்காங்கே சிறிது ஏற்பட்டு, பண்டிதர்களும் பாமர ஜனங்களும் மோக்ஷ சாஸ்திர நூல்களைப் படித்து ஒருவாறு பிரசாரத்திலிருக்குமாறு செய்துவந்திருக்கிறார்கள். உலகவாழ்க்கையில் நாம் பிரதிதினம் அநுஷ்டிக்கவேண்டிய கர்மங்கள், நியமங்கள் முதலியன விஷயத்தில் தர்மசாஸ்திரங்களுக்கு எவ்வளவு நெருங்கிய சம்பந்தமுள்ளதோ, அவ்வளவு மோக்ஷசாஸ்திரங்களுக் கில்லாமையால், பிறநாட்டு நாகரிகம், வெகுகாலமாய் இப்பரத நாட்டில் ஏற்பட்டு, நாளடைவில் பரவி, நமது பூர்வீக நாகரிகத்தை அழித்து வரினும், கேவலம் ஞானஆதாரமாயுள்ள வேதாந்த விசாரம் ஏதோ நடமாடி வந்துகொண்டிருக்கிறது.

இதனால், நம்முன்னோர் ஆதியிலேயே உலக வாழ்க்கைக்குரிய தர்மங்கள், ஒழுங்குகள், ராஜநீதிகள் முதலானவற்றைச் சரிவரக் கவனியாது விட்டு விட்டு, நாம் கண்ணால் காணமுடியாத மோக்ஷமென்னும் விஷயத்தைப்பற்றி மனம்போனபடி கூறி, நம்நாட்டார் ஐதிகசுகமும் மேன்மையும் பெறாமல் தடுத்து, நம்மை இவ்வித நிலைமைக்கு வரும்படி செய்து விட்டனர் என்று குறை சொல்லுதல் பேதமைத்தனம். மேனாட்டார் பலர் பிறப்பதற்கு முன்னரே, பண்டைக் காலத்திலேயே நாகரிகம் வாய்ந்து வளர்ந்தோங்கினதாகச் சொல்லப்படும் ஜாதியார் பிரசித்தி பெறுவதற்கு முன்பேயும், இப் பரத நாட்டார் மேலான நாகரிகமுடையவர்களாய்க் கீர்த்தியுடன் விளங்கிவந்தனர் என்பது மேனாட்டுச் சரித்திரக் காரர்களே ஒப்புக்கொண்ட விஷயம். இவ்வாறு நம்முன்னோர் மேன்மையடைந்து சிறந்த நாகரிகம் பெற்றிருப்பதற்கு, அவர்களிடம் உலக தரும முறைகள், அர்த்த சம்பாதன ரீதிகள், ராஜாங்க நீதிகள் முதலியன விஷயமான ஞானமும் இருந்திருக்கவேண்டு மென்பதற்குச் சந்தேகமில்லை.

அநேக நூற்றாண்டுகளாக இவ்வித நூல்களில் பல அழிக்கப்பட்டும், மிகுதியுள்ள சில நம்மால் ஆதரிக்கப்படாமலும் வந்திருப்பதால், இவை விஷயமான ஞானம் நம் நாட்டில் பிரசாரக்குறைவடைந்து, மிகவும் மலினமாய் விட்டது. நம் முன்னோர்கள் அர்த்த சாஸ்திரங்களிலும் நன்கு கவனம் செலுத்தி, பலவித நூல்கள் இயற்றியுள்ளார் என்று சொன்னால், அதைக் கேட்கும் மாணாக்கர்களும், மற்றவர்களும் பெரும் வியப்படைந்து, 'இது உண்மைதானா?' என்று வினவவும் வினவுகிறார்கள். இவ்வித நிலைமை வெகுவாறு துக்கிக்கத்தக்கதே! தேசாபிமானம் பாராட்டி, தேசிய விஷயங்களில் கிளர்ச்சி யுண்டாக்கி, நமது தேசத்தின் க்ஷேமத்தையும் மேன்மையையும் சம்பாதிக்க முயன்றுவரும் பிரபுக்களும், கல்வியில் பெரியோரும், சங்கத்தார்களும் நமது பூர்வீகக் கிரந்தங்கள் விஷயமாகத் தக்க ஊக்கங் கொண்டிருப்பதாகத் தெரியவில்லை. கல்விப் பிரசாரம், நாகரிகம், உலகநடை ஒழுங்குகள், ஆத்மவிசாரம் முதலியன சுதேச சம்பந்தமான (national) ரீதிகளில் ஏற்பட்டு, நாம் ஸ்வராஜ்யம் பெறவேண்டுமென்று பலவாறு பேசி வருகிறோம். அநுஷ்டானத்தைக் கவனித்தால் ஹிந்துக்களுக்கு இன்றியமையாததாய் ஏற்பட்டுள்ள நாகரிகம், மனோபாவம் முதலிய மேன்மையை நிலைநிறுத்தி, நாம் ஒரு பெரிய ஜாதியார் என்னும் பெருமையை மீண்டு மடைவதற்காதாரமா யுள்ள சாதனங்கள் தேடப்பட்டு வருவதாய்த் தோன்றவில்லை. இனியாவது இவ்விஷயமான உத்ஸாகமும், விடாமுயற்சியும் ஏற்பட்டு, கல்வி எங்கும் பரவி உலகவாழ்க்கையில் நாமெல்லோரும் வாஸ்தவமான சுகமும் க்ஷேமமும் பெறுவதற்கான நிலைமை சீக்கிரத்தில் உண்டாகுமென நம்புகிறோம்.

அர்த்த சாஸ்திரம்.—செங்கோல் மன்னன், தன் ராஜ்யத்திலுள்ள லக்ஷக்கணக்கான ஜனங்களின் க்ஷேமத்தைக் கருதி, அவர்களை ஸன்மார்க்கத்தில் நடத்தி, அவர்கள் ஐசுவரியமும், தேக ஆரோக்கியமும் பொருந்தி சுகமாய் வாழும்படி தர்மபரிபாலனம் செய்வதற்கான ராஜாங்க முறைகளை எடுத்துக்கூறும் நூலுக்கு அர்த்த சாஸ்திர மெனப் பெயர். ஒரு கிரகஸ்தன், அவனுக்கு ஏற்பட்டுள்ள வர்ணாசிரம தர்மங்களை யனுஸரித்து நடந்து, திரவிய சம்பாதனம் செய்து தன் குடும்பத்தாரின் இகபர சுகத்தைத் தேடிக் காப்பதுபோல், அரசனும் ஆயிரக்கணக்கான குடும்பங்கள் நிறைந்துள்ள ராஜ்யத்தைத் தன் சுகத்திற்காக ஏற்பட்டதாக நினைக்காமல், அதிலுள்ள பிரஜைகள் அனைவரும் வறுமையால் வருந்தித் தவிக்காமலும், தீய குணங்களைக் கைப்பற்றி நடவாமலும், ஒருவருக்கொருவர் கலகம் செய்து நாசமடையாம லிருக்குமாறு தக்க நீதி நெறிகள் ஏற்படுத்தி, அவர்கள் க்ஷேம

மாய் வாழும்படி செய்யவேண்டியது ஒரு பெரிய கடமை என நினைத்து, அதைச் சரிவர செலுத்த வேண்டும். உசிதமான வரிகள் போடுவதும், திரவியமானது சிலரிடத்தே தங்காமல் எல்லோரிடமும் பரவி நிற்கும்படி செய்வதற்கானவிதிகள் ஏற்படுத்துவதும், வழக்குகளைத் தீர்ப்பதும், நியாய ஸ்தலங்கள் ஏற்படுத்தி, பக்ஷபாதமில்லாமல் நியாயம் சொல்லும்படியான நியாயாதிபதிகளை நியமிப்பதும், நகர பந்தோபஸ்துக்காக தக்கசேவகர்களையும், உத்தியோகஸ்தர்களையும் ஏற்படுத்துவதும், வேவுகாரர் மூலமாய் ஜனங்களும் அதிகாரிகளும் கெட்டவழியில் செல்லும் தகவல்களை இரகசியமாய் அறிந்து, அவர்களுக்குத் தக்க தண்டனை விதிப்பதும், இவ்வாறு தனது ராஜ்யத்தை ஸ்தாபித்துக்கொண்டு, சத்துருக்களை ஜயித்து அடக்குவதும், இன்னும் அநேக தகவல்களும் அர்த்த சாஸ்திரங்களில் விவரிக்கப்படுகின்றன.

இவ்வித அர்த்த சாஸ்திரக் கிரந்தங்கள் முற்காலத்தில் அநேகமிருந்தன வென்று தெரியவருகிறது. இவற்றுள் பல நூல்கள், கால அளவில் சத்துருக்களால் அழிக்கப்பட்டுள்ளன. இவை விஷயமான குறிப்புகள் முற்காலத்திய இதர கிரந்தங்களில் காணப்படுகின்றனவே ஒழிய, இந்நூல்கள் இப்போது காணப்படவில்லை. இவை போக, மிகுந்திருக்கும் அர்த்த சாஸ்திரங்கள் பல உள. இவைகளிலிருந்து நாம் அறிந்து கொள்ளக்கூடிய ஞானம்சங்கள் அநேகமுண்டு. இவ்வித கிரந்தங்களுள் மிகப் பிரசித்திபெற்றது கௌடல்ய அர்த்த சாஸ்திரம். கௌடல்யனுக்குச் சாணக்யன் என்றும், விஷ்ணு குப்தன் என்றும் மற்றைய பெயர்கள் உண்டு. சாணக்யன் என்பவர், பூர்வம் நந்த வம்சத்தை யழித்து, மகத தேசத்தில் மௌரிய வம்சத்து சந்திரகுப்தனைச் சக்கரவர்த்தியாக ஏற்படுத்தி, அவனது முக்கிய மந்திரியாக இருந்து மகததேச மேன்மை எங்கும் பரவிச் செழிக்கும்படி செய்ததாக எல்லோரும் ஒப்புக்கொண்ட விஷயம். இவர் கிறிஸ்து பிறப்பதற்கு முன் நாலாவது நூற்றூண்டில் (4th Century B. C.) வசித்ததாக மேனாட்டுச் சரித்திரக்காரர்களும், அவர்களை யனுசரித்துக்கூறும் ஆங்கில பாஷையில் தேர்ச்சியுள்ள இந்திய வித்துவான்களும் அபிப்பிராயப்படுகின்றனர். இதற்கு ஆதாரம், அலெக்ஸாண்டர் என்னும் கிரேக்க அரசன் இந்தியாமீது படையெடுத்து வந்த காலத்தில் (கி.மு. 323) இங்கு அரசாங்கம் செலுத்திவந்த சந்திரகுப்தன் என்னும் வேந்தனும், இதற்குச் சுமார் 1200 வருஷங்களுக்கு முன் மகத தேசத்தில் மௌரிய வம்சத்தை ஸ்தாபித்து, செங்கோல் செலுத்தி பெரும் புகழடைந்ததாக நம் புராணாதிகளில் கூறப்பட்டுள்ள மௌரிய சந்திரகுப்தனும் ஒருவரென்றே நினைப்பது தான். மௌரிய சந்திரகுப்தனது காலம் கி. மு. நான்காவது நூற்றூண்டுக்கு முன்பானது என்று ஏற்பட்டால், கௌடல்யனது ஜீவகாலமும் முந்தினதாகவே ஏற்படும். இப்போது மேனாட்டார் சொல்லும் அபிப்பிராயத்தை அனுசரித்தே இவரது காலத்தை ஒப்புக்கொண்டாலும், சுமார் 2200 வருஷங்களுக்கு முன்னரே இவர் வசித்து, அர்த்த சாஸ்திரப் பிரசாரம் செய்து, அவ்வித ஞானம் வெகுவாறு பயன்படுமென்பதை அனுஷ்டானத்தில் காட்டியுமிருப்பதாகத் தெரியவருகிறது. இவருக்கு முந்தி பல மகரிஷிகளால் இயற்றப்பட்டுள்ள 10 அர்த்த சாஸ்திரக் கிரந்தங்களை நன்கு ஆராய்ந்து பார்த்து, அவற்றிலுள்ள ஸாராம்சங்களை தாம் எடுத்துக் கூறுவதாய் இவரது கிரந்தத்திலேயே சொல்லப்பட்டிருக்கிறது. இவரது கிரந்தமானது எல்லாவற்றிலும் சிறப்புற்றதாய் விளங்கி, பூர்வீக மன்னர்கள் பலரால் அனுஷ்டிக்கப்பட்டு வந்து, பிரஜைகளின் க்ஷேமத்திற்கும் சௌக்கியத்திற்கும் தக்கதொரு சாதனமா யிருந்துவந்ததுடன், மேனாட்டார் பலரும் இதைச் சிலாகித்துக் கூறும்படி அவ்வளவு மகிமை பொருந்தியது என்பது கவனிக்கத்தக்க விஷயம்.

இவ்வருமை நூலில் அடங்கியுள்ள எல்லா விஷயங்களையும் இவ்வித பத்திரிகையில், ஒன்றும் விடாது எடுத்துக் கூறுவது சுலபமான காரியமில்லாததால், முக்கியாம்சங்களாவது பின்வரும் சஞ்சிகைகளில் கூறப்பட்டுவரும். இதுகாறும் அச்சிடப்பட்டுவெளியாயுள்ள கௌடல்யஅர்த்த சாஸ்திரப் பதிப்புகளுள் திருவனந்தபுரம் சமஸ்தானத்தின் ஆதரணையின்கீழ், ஸ்ரீமகாமஹோபாத்யாய கணபதி சாஸ்திரி அவர்களால் வெளியிடப்பட்ட பிரதியே சுத்தமானதும், அர்த்த ஸ்வாரஸ்யம் பொருந்தியதாகவும் காணப்படுகிறது. இனி நம்மால் கூறப்படும் விஷயங்கள் மேற்கண்ட பிரதியை யனுசரித்தவைகளா யிருக்கும் என்பது கவனிக்கத்தக்கது.

காளிதாஸ மஹா கவி

KALIDASA THE GREAT POET

ரகுவம்சம்

முன் தொகுதியில், காளிதாஸ மஹா கவியின் முக்கிய கிருதிகளில் ஒன்றாகிய ரகுவம்சம் என்னும் மகா காவியத்தில், வைவஸ்வத மனுவிடமிருந்து சூரிய குலத்தின் உற்பத்தியும், அக்குல மன்னர்களின் தர்ம பரிபாலனம், பராக்கிரமம், பொய்யாமை, இந்திரிய நிக்கிரகம் முதலிய உயர்தர குணங்களும், பின்னர் திலீபன் என்னும் சக்கரவர்த்தியின் உற்பத்தியும், இராஜ்யபரிபாலன மகிமையும், அவன் வசிஷ்டரது காமதேனுவை ஆராதித்து, ரகு என்னும் ஓர் உத்தம புதல்வனை அடைந்ததும், ரகுவின்பராக்கிரமம், ஔதாரியம், அதிதி ஸத்காரம் முதலிய உத்தம குணங்களும், அவனது புத்திரனான அஜன் விதர்ப்பதேச அரசனது சகோதரியான இந்துமதியைச் சுயம்வரத்தில் அடைந்த வைபவமும், ஆகாயத்திலிருந்து அவள்மீது விழுந்த புஷ்பமாலையால் அவள்இறந்தபோது அவனடைந்த துக்கமும், பிரலாபமும், பிறகு வசிஷ்டரால் மனந்தேற்றப்பெற்று, அவன் சுவர்கஞ் சென்று அவளை யடைந்து களித்ததும், அவனுக்குப் பின் தசரதன் என்னும் பராக்கிரமசாலி உத்தர கோசலத்துக்கு அரசனாகி, பெருங்கீர்த்தி பெற்றதும், முதலில் மதுபானம், சூதாடுதல், ஸ்திரீ சாபல்யம், வேட்டை யாடுதல் இவற்றில் மனம் நாடாது, இவன் ராஜ்யபரிபாலனத்திலேயே நோக்கமுள்ளவனாயிருந்ததும்பிறகு வேட்டையாடுவதில் மேன்மேலும் அவன் மனம் இடிபட்டு, அவன் அதில் மிக்க ஆசை கொண்டதும் ஒருவாறு எடுத்துக் காட்டப்பட்டன. இம் மகா காவியத்தின் மேற்பாகத்திலுள்ள அம்சங்கள் இனி எடுத்துக் காட்டப்படும்.

வாக்கியாலங்காரங்களுள், உவமை அணி (உபமாலங்காரம்) என்பது காளிதாஸன் கிருதிகளில் வெகு ஸ்வாரஸ்யம் வாய்ந்ததாய்க் காணப்படுமென்பது பிரசித்தமானது. இதற்கு அநேக உதாரணங்களைப் பின்வரும் விஷயத்தில் நன்கு காணலாம் :—

"ஒருநாள் தசரதன் விடியற் காலத்தில் எழுந்து, ஒருவருக்குந் தெரியாமல் புறப்பட்டு, தபஸ்விகள் வசிக்கும் தமஸை நதிதீர மடைந்தான். அங்கு ஒரு சிறுவன் ஒரு குடத்தில் ஜலம் நிரப்பிக் கொண்டிருந்த சப்தமானது யானையின் துவனிபோல் அவன் காதிற்பட்டது ; உடனே அச்சப்தத்தைக் குறிவைத்து ஓரம்பு எய்தான் ; யானையைக் கொல்வது தர்ம சாஸ்திரங்களில் தடுக்கப் பட்டிருந்தாலும், அவன் யானையைக் கொல்ல நினைத்தான். "ரஜோ குணம் மேலிட்டால், படித்த வித்துவான்களும் கெட்டவழியில் நடக்கத் தலைப்படுவாரல்லவா?" பாணம் தொடுத்ததும், "ஓ பிதாவே!" என்ற சப்தம் அவன் காதிற் பட்டது. ஏதோ அநர்த்தம் விளைந்தது என்று அவன் நடுநடுங்கினான். உடனே குதிரையை விட்டுக் கீழே இறங்கி அங்கு ஓடினான் ; விவரமறிந்து வாடினான். அப்பால் அச்சிறுவனை எடுத்துக் கொண்டு குருடர்களான அவன் தாய்தந்தையர்களிடம் சென்று, தான் செய்த குற்றத்தை எடுத்துரைத்து, தான் அஞ்ஞானத்தால் அவ்வாறு செய்த அபராதத்தை க்ஷமித்தருள வேண்டுமென்று பிரார்த்தித்தான். புத்திர சோகந்தாளாது தவித்த அந்த ரிஷியும், 'நீயும் உன் அந்தியகாலத்தில் என்னைப்போல், புத்திர சோகத்தால் வருந்தி மாணமடைவாய்' என்று சபித்துவிட்டு, தம் பத்தினியுடன்தேக வியோகமடைந்தார். தசரதனும், படபம் என்னும் அக்கினியை உள்ளடக்கியுள்ள சமுத்திரம்போல், தனது நாசத்துக்குக் காரணமான மேற்கூறிய சாபத்தை மனத்திலடக்கிக் கொண்டு, தான் செய்த அபராதத்தைக் குறித்துப் பச்சாதாபத்துடன் தனது நகரம் வந்துசேர்ந்தான்.

பின்னர், தசரத மகாராஜன் இந்திரனுக்கொப்பானவனாயும், ஸர்வ ஐசுவரியங்கள் பொருந்தியவனாயும் அரசு புரிந்து வருகையில், சற்றேறக் குறைய பதினாயிர வருடங்கள் கடந்தன. ஆனால் ஒரு குறைவு மட்டும் தீராமலிருந்தது. பித்ருருணம் என்னும் கடனைத் தீர்க்கவல்ல புத்திர சம்பத்து அவனுக்கு ஏற்படவில்லை. "கடையப்படுவதற்கு முன், வெளிப்படாத ரத்தினங்களின் உற்பத்தியோடு கூடிய க்ஷீர சமுத்திரம்போல், தசரதன் ஏதோ காரணத்தை அபேக்ஷித்துள்ள சந்ததியுடையவன்போல் இருந்தான்." சமுத்திரத்திலிருந்து ரத்தினங்கள் வெளி வருவதற்குச் சமுத்திர மதனம் என்பது ஓர் உபகரணமானது போல், தசரதருடைய புத்திரோத்பத்தியும் ஒரு காரணத்தால் ஏற்படக் கூடியதாயிருந்தது. அதாவது, அவருக்குப் புத்திர சம்பத்து இல்லையென்

பது இல்லை. ஆனால் அவர் அதைத் தடையின்றி அனுபவிப்பதற்கு ஒரு விசேஷ சந்தர்ப்பம் நேரிட வேண்டியிருந்தது என்பது கருத்து. இந்த ரகசியம் அறிந்த ரிஷ்யச்ருங்காதி மகான்கள் புத்திர காமேஷ்டியென்னும் ஒரு விசேஷ வேள்வியைச் செய்யத் தொடங்கினார்கள்.

இச்சமயத்தில், இராவணனால் பீடிக்கப்பட்ட தேவர்கள், கோடையில் சூரிய தாபத்தால் தவிக்கும் பிராணிகள் நிழலடர்ந்த ஒரு விருக்ஷத்தை நாடுவதுபோல், விஷ்ணுவைச் சரணமடைந்தனர். அவர்கள் சமுத்திரத்தண்டை சென்ற தக்ஷணமே ஆதிபுருஷனும் யோக நித்திரைவிட் டெழுந்தார். 'கால விளம்பம் இல்லாமலிருப்பதே இனி ஏற்படப்போகிற காரியஸித்திக்குத் தக்கதோர் அறிகுறியல்லவா?" விஷ்ணுவானவர் ஆதிசேஷனாகிற ஆசனத்தின்மீது, அவனது முடிகளிலுள்ள நாக ரத்தினங்களின் ஒளியால் பூசப்பெற்ற திவ்விய மங்கள விக்கிரகத்தோடும், ஸ்ரீ லக்ஷ்மீ தேவியின் கைகளில் தாங்கப்பட்ட தமது பாதகமலங்களோடும், மலர்ந்ததாமரைப் புஷ்பங்கள்போன்ற நேத்திரங்களோடும், இளம் வெயில் நிறமுள்ள பீதாம்பரம் தரித்தும், கௌஸ்துபம் என்னும் உத்தம ரத்தினத்தால் அலங்கரிக்கப்பெற்ற மார்போடும், தேஜோமயமான ஸ்ரீவத்ஸம் என்னும் அடையாளத்தோடு கூடும், சைதன்யம் பொருந்திய சக்கரம் சாரங்கம் முதலிய ஆயுத விசேஷங்களால் கோஷிக்கப்பட்ட 'ஜய' சப்தங்களோடும், ஸர்ப்பங்கள்மீது இயல்பாயுள்ள விரோதத்தை ஒழித்துள்ள பக்ஷி ராஜனான கருடனால் கைகுவித்து வணங்கப்பட்டும், யோக நித்திரைவிட்டு எழும் சமயத்தில், தம்மை ஸ்துதித்துப் பாடுவதற்காக வந்துள்ள பிருகு முதலான மஹரிஷிகளைத் தமது பாவனமான கடாக்ஷங்களால் அனுக்கிரகித்திருக்கக்கண்டு, தேவர்கள் அவருக்கு ஸாஷ்டாங்கமாகத் தண்டனிட்டு, துதிக்க ஆரம்பித்தனர்.

"ஜகத்தைச் சிருஷ்டித்தும், அதை ரக்ஷித்தும், இறுதியில் அதை ஸம்ஹரித்தும் இவ்வாறு மூன்றுவித ரூபம் தரித்துள்ள பரம புருஷனே உமக்கு நமஸ்காரம். ஆகாயத்திலிருந்து விழும் மதுர ரஸமான மழை ஜலமானது விழும் ஸ்தலங்களின் சுபாவ பேதத்தால், வெவ்வேறு ரஸமுள்ளதாய் மாறுவதுபோல், யாதொரு விகாரமுமில்லாமல் ஒரே ரூபமாயுள்ள தேவரீரும் ஸத்வாதி குணங்களுள் அனுப்பிரவேசித்துப் பலவித ரூபங்களை அடைகிறீர். உம்மை லோகங்களால் அளக்கமுடியாது. ஆனால் நீர் பிரபஞ்சமனைத்தும் அளந்தவர்; உமக்கோர் ஆசையும் கிடையாது, ஆனால் பக்தர்களின் விருப்பங்களை யளித்துக் காப்பவர்; உம்மை ஜயிப்பாரில்லை, நீர் எல்லாரையும் ஜயிக்கவல்லவர்; நீர் அதிஸூக்ஷ்மமானவர், எங்கும் வியாபிக்குமாறு சிருஷ்டிக்கப் பெற்றுள்ள ஜகத்துக்களெல்லாவற்றிற்கும் ஆதிகாரணம். ஜீவராசிகளின் இருதயங்களில் அந்தர்யாமியாய்ச் சமீபத்திலிருந்தாலும் உமது ரூபங் கண்டறியக் கூடாததாகையால், வெகு தூரத்திலிருப்பவராக விளங்குகிறீர்; ஸர்வ பரிபூர்ணனாய் யாதொரு இச்சையுமில்லா திருந்தாலும், பெருந் தவஞ்செய்து வருகிறீர்; தயையால், பிறர்களுக்கு ஏற்பட்டுள்ள துக்கங்களைத் தீர்க்கும் விரதங் கொண்டவராயினும், அது விஷயத்தில் உமக்கு ஒரு துக்கமும் நேரிடாது நித்தியானந்தத்தோடு கூடியிருக்கிறீர்; ஆதிமுதலுண்டாய புராண புருஷனானாலும், யாதொரு விகாரமுமில்லாமல் ஒரே ரூபமாயுள்ளவர்; நீர் எல்லாமறிந்தவர்; உம்மைச்சரியாய் அறிந்தவர் இல்லை, ஸ்வயமாய் ஏற்பட்டவர்; ஆனால் எல்லாப் பிரபஞ்சத்திற்கும்உற்பத்தி காரணம்; எல்லாவற்றிற்கும் நீரே பிரபு, ஆனால் உமக்கு யஜமான் கிடையாது; நீர் ஒருவர், ஆயினும் பல ரூபங்களாய்ப்பிரகாசிக்கிறீர்; ஏழு சாமங்களால் துதிக்கப்பெற்றவர்; ஏழு சமுத்திரங்களின் ஜலத்தில் சயனஞ் செய்பவர்; ஏழு ஜ்வாலையுள்ள அக்கினியை முகமாயுள்ளவர்; ஏழு லோகங்களுக்கும் ஒரே ஆதாரமாயுள்ளவர்; தர்மம், அர்த்தம், காமம், மோக்ஷம் என்ற நான்குவித புருஷார்த்தங்களின் ஞானம்; கிருத, த்ரேத, த்வாபர, கலியுகங்கள் என சொல்லப்பட்ட காலவியவஸ்தை; உலகில் பிரம்ம, க்ஷத்திரிய, வைசிய, சூத்திர என்கிற நான்கு வர்ணங்களின் ஏற்பாடு; இவையெல்லாம் சதுர்முக ரூபியான உம்மிடமிருந்தே உண்டானவை; ஜன்மமற்றவராயினும், பலவித அவதாரங்கள் எடுத்துள்ளீர்; உமக்கு ஆகவேண்டியகாரியம் ஒன்றுமில்லாவிடினும், சத்துருக்களை யழித்தவராகிறீர்; ஸதா லோக ஸம்ரக்ஷணத்தில் நோக்குள்ளவராயினும், (யோக) நித்திரை யனுபவிக்கிறீர்; இவ்விதமுள்ள உமது ஸ்வரூபத்தை யார் நிஜமாய் அறியக்கூடும்! (கிருஷ்ணாதி அவதாரங்களிற்போல்) சப்தாதி உலக விஷய சுகங்களை அனுபவிப்பதற்கோ, (நரநாராயணர்கள் போல்) கடுந்தவஞ்செய்வதற்கோ, சாது ஜனங்களைக் காப்

ஐயப் படாஅ தகத்த துணர்வானைத் தெய்வத்தோ டொப்பக் கொளல்.

பதற்கோ, அல்லது உதாஸீனமா யிருப்பதற்கோ உம்மைத் தவிர வேறு யாரால் முடியும்?

கங்கா நதியின் பிரவாகங்கள் பல வழிகளாய்ச் சென்றும் சமுத்திரத்தையே யடைவது போல, வேதாதி சாஸ்திரங்களில் பலவகையாய்க் கூறப்பட்டுள்ள சித்தி மார்க்கங்களெல்லாம் உம்மிடமே முடிவடைகின்றன; காமக் குரோதம் முதலான இழி குணங்களை யொழித்து, உம்மிடமே மனத்தை நாட்டி, யாதொரு பலனையும் கருதாது, தமக்கு ஏற்பட்டுள்ள கர்மங்களைச் செய்துவருபவர்களின் மோக்ஷ ஐசுவரியத்துக்கு நீரே சாதனமாகிறீர். பூமி முதலான ரூபமாயுள்ள உமது மகிமையானது நேரில் பார்க்கக் கூடியதாயினும், இவ்வளவுதான் என்று அறியக் கூடாததா யிருக்கிறது. வேதம், சாஸ்திரம் முதலானவற்றால் அறியப்படவேண்டிய உமது பெருமையைப் பற்றிக் கேட்பானேன்? ஸ்மரணத்தினால் மாத்திரமே, நீர் பக்தனைப் பாவனமாக்கி ரக்ஷிக்கிறீர் என்றால், உமது தர்சனம், ஸ்பர்சனம் முதலான காரியங்களின் பலன் அறியப்பட்டதாகவே ஆகிறது! நீர் எற்கெனவே அடையாத இச்சையோ, இனி உமக்கு ஆகவேண்டிய காரியமோ ஒன்றுமில்லை; எனினும், நீர் பலவாறு அவதரித்துக் கர்மங்கள் செய்வதற்குக் காரணமானது, உலகைக் காத்தருள வேண்டுமென்கிற உமது அபார கருணையேதான். பரஞ்சோதி ரூபமான பெருமானே! உமது மகிமையை வர்ணித்து மேற்கூறாமல் விடுவதானது, எங்கள் சிரமத்தாலும், அசக்தியாலுமே ஒழிய, உமது கல்யாண குணங்களின் மகிமை அவ்வளவுதான் என்பதாலில்லை"

இவ்வாறு தேவதைகள் திருமாலை வர்ணித்துக் கூறி, தங்களுக்கு ராக்ஷஸர்களிடமிருந்து உண்டாய பயத்தைத் தெரிவித்தனர். இவையெல்லாம் பரம புருஷனது யதார்த்த நிலைமையைச் சொன்னதாயிற்றே ஒழிய, அர்த்தமில்லாப் புகழ்ச்சியாகவில்லை.

மேற்கூறிய வர்ணனையில் காளிதாஸன் விரோதாபாஸம் என்னும் அணிரூபமாய்ப் பகவானது குணங்களை எடுத்துக் காட்டிய ஸ்வாரஸ்யமும், அவனுடைய உபநிஷதாதி சாஸ்திர ஞானமும், உயர்ந்த அர்த்தங்களை எளியநடையில் சுலபமாய் எடுத்துக் கூறும் அவனது சாமர்த்தியமும் நன்கு விளங்கும்.

இவ்வாறு துதிக்கப்பெற்ற நாராயணன், அலைகடலோசையை யடக்கக்கூடிய கம்பீரத் துவனியோடு பின்வருமாறு பதிலுரைத்தார்:—"தேவர்காள்! தமோ குணத்தால், ஸத்வ ரஜோ குணங்கள் மூடப்படுவதுபோல், உங்களது மகிமையும் பராக்கிரமமும் இராவணனால் அடக்கப்பெற்றுள்ளன என்பது எனக்குத் தெரியும். அகல்மாத்தாய் நேர்ந்துள்ள பாவத்தால், ஸாது ஜனங்களின் மனம் வாடி வருந்துவதுபோல், மூவுலகமும் ராவணனால் பீடிக்கப்பெற்றுத் தவிக்கிறது என்பதையும் நான் அறிவேன். இதை நிவர்த்திக்கும் விஷயத்தில் உங்களது கோரிக்கையும் எனது உத்தேசமும் ஒன்றுபடுவதால், நீங்கள் இது விஷயமாய் 'இவ்வாறு செய்' என்று என்னைப் பிரார்த்திக்க வேண்டியதில்லை;(நானே இதைத்தீர்க்கக் கடமைப் பட்டவன்). நெருப்பின் கோரிக்கையின் பேரிலா, காற்றானது அதற்கு உதவுகிறது? முன்னர், தனது ஒன்பது சிரங்களை அறுத்துச் சிவபெருமானைத் திருப்திசெய்துள்ளராவணன், தனது பத்தாவது தலையை வெட்டாது, என் சக்கராயுதத்திற்கு இரையாக ஏற்படுத்தியிருக்கிறான்போலும்!

பிரம்மதேவன் அவனுக்கு அளித்துள்ள வரனை யனுஸரித்து, அத்துஷ்டனது சேஷ்டைகளை, சந்தனமரம் விதியால் ஸர்ப்பத்தைச் சகிப்பதுபோல், நான் இதுகாறும் பொறுத்துள்ளேன். நல்ல வேளையாய், அவன் மனுஷ்யர்களை அவமதித்து, அவர்களிடமிருந்து தனக்கு மரணம் நேரிடாம லிருக்கவேண்டுமென்று வரம் கேட்காமல் விட்டுவிட்டான். ஆகையால் நான், பூமியில் தசரத மகா ராஜனுக்குப் புத்திரனாய் அவதரித்து, எனது கூர்மையான பாணங்களால் அவன் தலைகளை யறுத்து, அவற்றால் ரண பூமிக்குப் பூஜைசெய்வேன். கூடியசீக்கிரம் உங்கள் துக்கங்கள் நிவர்த்தியாகும். வேள்விகளில், ராக்ஷதர்களால் தடுக்கப்படாமல் நீங்கள் உங்கள் ஹவிர்ப் பாகங்களை அனுபவிக்கலாம்." இவ்வாறு, விஷ்ணுவான நீலமேகமானது, ராவணனை க்ஷாமத்தால் (மழை இன்மையால்), வாடியுள்ள தேவதைகளாகிற பயிரை, அபயப் பிரதான வாக்காகிற ஜலத்தால் தெளித்துவிட்டு மறைந்தது. இங்குக் கூறப்பட்டுள்ள உவமை முதலான வாக்கணிகளின் ஸ்வாரஸ்யம் கவனிக்கத்தக்கது.

பின்னர் இந்திராதி வானவர்களும்,தங்கள் கோரிக்கையை ஈடேற்றிவைப்பதற்காக அவதரிக்கப்போகும் விஷ்ணுவை, தாங்களும் சுக்கிரீவாதி வானர ரூபமாய், பூமியில் அவதரித்து அநுசரித்தனர்.

மின்சாரப் பிரவாகம்

CURRENT ELECTRICITY

[ஸ்ரீமான் ஏ. வரதாச்சாரியார், பி.ஏ., எல்.,டி.]

முன் தொகுதியில், மின்சாரப் பிரவாகம் ரஸாயன மாறுதலால் உண்டாகக் கூடுமென்பதை வால்டா என்னும் பௌதிக வித்துவான் கண்டு பிடித்து, அதற்காக அவர் உபயோகப்படுத்திய மின்சார பாண்டத்தின் அமைப்பும், செய்கையும், பின்னருண்டாய வித்துவான்கள் வால்டேயிக் மின்சார பாண்டத்துக்குரிய ஆந்த்ர நஷ்டம், (Local action), த்ருவபாவம் (Polarisation) என்னும் குறைவுகளைக் கண்டறிந்து, அவற்றை நிவர்த்திப்பதற்காகச் செய்த ஏற்பாடுகளின் தத்வ விவரணமும்; மின்சாரப் பிரவாகத்தைக் கண்டறிவதற்கான மின்சாரப் பிரவாக ஸூசினி (Galvanoscope) என்னும் கருவியின் அமைப்பும், செய்கையும், உபயோகங்களும்; மேற்கூறிய ஆந்த்ரநஷ்டம், த்ருவபாவம் என்னும் குறைவுகளை நீக்கி, மின்சார சக்தி பலம் குன்றாது ஒரே விதமாய்ப் பிரவகிப்பதற்குத் தக்க ஏற்பாடுகளுள்ள மின்சார பண்டங்களுள், டேனியல் மின்சார பாண்டத்தின் விவரணமும், இன்னும் மற்றைய தகவல்களும், பரீக்ஷண பூர்வமாய் எடுத்துக் கூறப்பட்டன. இன்னும் சில முக்கியமான மின்சார பாண்டங்களின் அமைப்பு, செய்கை முதலியன அடியிற் குறிக்கப்படுகின்றன.—

லேக்ளான்சே மின்சார பாண்டம். (The Leclanche Cell):—



(1) அமைப்பு:—ஒரு வெளிப் பாத்திரத்திலுள்ள நவச்சார விலயனத்தில் (Solution of ammonium chloride), பாதரசத்தால் பூசப்பட்டுள்ள ஒரு துத்தநாக தண்டம் தோய்க்கப்பட்டிருக்கிறது. ரந்த்ரமுள்ள ஒரு திரண்ட வடிவத்தில் (Porous cylinder) ஒரு கரித்தகடு வைக்கப்பட்டு, திரண்ட வடிவத்துக்கும் தகட்டுக்கும் இடையேயுள்ள பிரதேசமானது சுட்ட கரித் தூளோடு கலந்துள்ள மாங்கனீஸ் பேர் ஆக்ஸைட் (Manganese per oxide) என்னும் பிராணவாயு நிறைந்துள்ள கறுப்பான பஸ்பத்தால் நிறைக்கப்பட்டிருக்கிறது. இதன் மேற்பாகம் கீலால் மூடப்பட்டு, அதில் காற்று, ஜலம் இவை வெளியே போவதற்கான சிறு துவாரங்கள் விடப்பட்டிருக்கின்றன. மேற்கூறிய கரித்தகட்டில் ஒரு துருவக் கம்பியும், துத்தநாக தண்டத்தில் மற்றொரு கம்பியும் பொருத்தப்பட்டு, இவற்றின் மற்றைய நுனிகள் வேண்டும்போது சம்பந்தப் படுத்தக்கூடியவைகளா யிருக்கின்றன.

செய்கை:—மின்சார பாண்டத்தின் துருவக் கம்பி நுனிகளைச் சம்பந்தப்படுத்தினால், அடியிற் கண்ட ரஸாயன மாறுதல்களால் மின்சாரப் பிரவாகமுண்டாகி, பலக்குறைவின்றி சுற்று மார்க்கத்திற் செல்லும்:—

(i) துத்தநாகம் + நவச்சாரலவணம் = (a) துத்தநாக ஹரிதி (zinc chloride) + (b) நவச்சாரக் காற்று (ammonia) + (c) ஜலகரவாயு (Hydrogen). இவ்வித மாறுதலில் உண்டாகும் வஸ்துக்களுள் (a) & (b) அடையாளமுள்ள பதார்த்தங்கள் ஜலத்தில் விலயனமாகின்றன. ஜலகரவாயுக் குமிழ்கள் மின்சார சக்தியால் இழுபட்டு, கரித்தகட்டை நோக்கிச் சென்று, அதைச்சுற்றியுள்ள மாங்கனீஸ் பெராக்ஸைட் என்னும் பிராணவாயு அம்சம் மிகுந்துள்ள பஸ்பத்திலுள்ள பிராணவாயுவின் ஒரு பகுதியுடன் சேர்ந்து ஜலமாக மாற்றப்படுகிறது.

(ii) மாங்கனீஸ் பெராக்ஸைட் + ஜலகரவாயு = மாங்கனிக் ஆக்ஸைட் (manganic oxide) + ஜலம். இங்கு, மாங்கனிக் ஆக்ஸைட் என்பது பிராணவாயு அம்சம் குறைந்துள்ள ஒரு ஊதாநிறமான பஸ்பம். இவ்வாறு ஜலகரவாயுவானது மாங்கனீஸ் பஸ்பத்தால் தாக்கப்பட்டு, கரித்தகட்டின் மீது படிந்து நிற்காவண்ணம் செய்யப்படுவதால், துருவபாவம் என்னும் பிரவாக பலக்குறைவு நேரிடாமல், அது ஒரே அளவாய்ச் சலித்து வருவதற்கு இடமுண்டாகிறது.

ஆனால், மாங்கனீஸ் பேர்ஆக்ஸைட் என்

னும் பஸ்பம் ஜலகரவாயுவைத் தாக்கி, துருவ பாவத்தை யழிக்கும் விஷயத்தில் கொஞ்சம் தாமதமான செய்கை யுடையதாகையால், லேக்ளான்சே மின்சார பாண்டத்தை இடைவிடாது நீடித்தகாலம் உபயோகப்படுத்தினால், ஜலகரவாயுக் குமிழிகள் கரித்தகட்டின்மீது படிந்து, மின்சாரப் பிரவாகத்தைப் பலவீனமாக்கி, இறுதியில் அது சுற்றுமார்க்கத்திற் செல்லாதபடி செய்யவும்கூடும். இவ்வித சந்தர்ப்பம் நேர்ந்தக்கால், பாண்டத்தின் துருவக் கம்பிகளின் நுனிகளைப் பிரித்துவைத்தால், மேலே (i)ல் கூறியுள்ள ரஸாயன மாறுதல் நின்றுவிடும்; இதனால் ஜலகரவாயு மேன்மேலும் உற்பத்தியாகாமலிருக்க, கறுப்பு மாங்கனீஸ் பஸ்பம் கரித்தகட்டின்மீது படிந்துள்ள ஜலவாயுவைத் தாக்கி, ஜலரூபமாய் மாற்றி, சிறிது நேரத்தில் துருவபாவத்தை நிவர்த்திசெய்யும். மீண்டும், துருவக்கம்பி நுனிகளை ஒன்று சேர்த்தால், பிரவாக முண்டாகி, தடையின்றிச் செல்லும்.

உபயோகம்:—ஆகையால் லேக்ளான்சே மின்சார பாண்டமானது தந்தித்தபால், மின்சாரமணி, டெலிபோன் முதலிய ஏற்பாடுகளில் மிகவும் உபயோகப்படக் கூடியது. இவற்றில், மின்சாரப் பிரவாகம் இடைவிடாது தேவை யில்லையாதலால், துருவபாவம் ஏற்பட நியாயமில்லை. மின்சார சக்தியை ஒரே ரீதியாய் நீடித்து உபயோகப்படுத்த வேண்டிய விஷயங்களில் இப்பாண்டம் அவ்வளவு பயன்படாது.

இந்த மின்சார பாண்டமானது, அதிகச் செலவில்லாமல் செய்யக்கூடியதும், மற்றைய பாண்டத்திற்குரிய அசௌகரியங்க ளில்லாமல், சுலபமாய்க் கையாண்டு வரத்தக்கதாயு முளது.

குறிப்பு:—இவ்வித பாண்டத்தில் திரவரூபமாயுள்ள விலயனத்துக்குப் பதிலாக, இரஸாயன மாறுதலுக்குரிய வஸ்துக்களைக் கடினரூபமாய் (in solid form) உபயோகப்படுத்தி, இப் பாண்டங்களை எங்கு வேண்டுமானாலும் சுலபமாய் எடுத்துக்கொண்டு போவதற்கு உதவுமாறு செய்திருக்கிறார்கள். இவ்வாறு செய்யப்பட்டுள்ள ஏற்பாடுகளைத் திரவமற்ற மின்சார பாண்டங்கள் (Dry cells)என விவகரித்து வருகிறார்கள். இவற்றைச் சிற்சில பேதங்களுடன் பலவிதமாய்ச் செய்து வருகிறார்கள். இவற்றில் காணக்கூடிய முக்கியாம்சங்க ளாவன:—கறுத்த மாங்கனீஸ் பஸ்பத்தால் சூழப்பட்டுள்ள கரித்தகடு; துத்தநாகத்தகடு; இதோடு கலந்து ரஸாயன மாறுதலுண்டாக்குவதற்காக, நவச்சார லவணமோ அல்லது துத்தநாக ஹரீதியோ, பாரிஸ் சாந்து (Plaster of Paris) என்று சொல்லப்பட்ட ஸுதாகர கந்தகாமிலீயம், (Calcium Sulphate; இதுஸுதாகரம் (calcium), கந்தகம் (sulphur), அமிலகரவாயு அல்லது பிராணவாயு (oxygen), இம்மூன்றும் சேர்ந்துண்டாய வஸ்து) மாவு முதலிய வஸ்துக்களோடு கலக்கப்பட்டு, மிகவும் சொற்ப ஈரமுள்ளதாய் வைக்கப்பட் டிருக்கிறது. இவ்வித திரவமற்ற மின்சார பாண்டங்களை வேண்டிய இடங்களுக்கு எடுத்துப்போய், கோர்வையாய் (battery) உபயோகப்படுத்தி, தடையின்றி நீடித்துச் செல்லக்கூடிய பிரவாகம் (continuous current) உண்டாகும்படி செய்து கொள்ளக் கூடும்.

புன்ஸேன் மின்சார பாண்டம் (The Bunsen Cell):—



படம் 6

அமைப்பு:—பீங்கானைப் போன்ற ஒரு பாத்திரத்தில் கந்தகாமிலம் (கந்தகத் திராவகம்) ஊற்றப்பட்டு, அதில் துத்தநாகத்தினாலாய குழாய் போன்ற திரண்டவடிவம் தோய்க்கப்பட்டிருக்கிறது. அதிரந்திரமுள்ள (Porous) ஒரு பாத்திரத்தில் தர்க்கியாமிலம் (*i. e.* அக்கினித் திராவகம்; Nitric acid) ஊற்றப்பட்டு, அதில் ஒரு கரித்தகடு வைக்கப்பட்டிருக்கிறது. இப்பாத்திரமும் கந்தகாமிலத்தில் தோய்த்து வைக்கப்பட்டிருக்கிறது. துத்தநாகத்திலும், கரித்தகட்டிலும் துருவக் கம்பிகள் பொருத்தப்பட்டு, அவற்றின் மற்றைய நுனிகள் வேண்டும்போது சம்பந்தப் படுத்தக் கூடியவைகளா யிருக்கின்றன.

செய்கை:—பிரவாகம் உற்பத்தி யாவதற்கும், துருவபாவத்தைத் தடுப்பதற்குமான ரஸாயன மாறுதல்களாவன:—

(i) துத்தநாகம் + கந்தகாமிலம் = வெள்ளைத் துத்தம் + ஜலகரவாயு.

(ii) ஜலகரவாயு + தார்க்கியாமிலம் = ஜலம் + தார்க்கியகர நீறு (Nitrogen oxide).

இங்கு அமிலகரவாயுவின் (Oxygen) அம்சம் மிகுந்துள்ள தார்க்கியாமிலமானது, ஜலகரவாயுவைத்தீவிரமாய்த் தாக்கி, தன்னிடமுள்ள பிராணவாயுவின் ஒரு பாகத்தைக்கொடுத்து, அதை விரைவில் ஜலமாக்குந் தன்மையுள்ள தாகையால், இப்பாண்டத்தில் துருவபாவம் ஏற்படாது,பிரவாகம் ஒரே ரீதி பலத்துடன் செல்வதற்கு இடமுண்டாகிறது. இவ்வித மாறுதலா லுண்டாகும் ஜலமானது தார்க்கியாமிலத்துடன் கலந்து, அதன் சக்தி குன்றுமாறு செய்யும்; இவ்வாறு ஜலமிச்ரமாகும் திராவகத்தை எடுத்து விட்டு, ஜலமிச்ரமில்லாத பலமுள்ள திராவகத்தை அவ்வப்போது உபயோகப்படுத்தி வரவேண்டும். இப்பாண்டத்தை உபயோகப்படுத்துவதில், ஒரு குறைவு உண்டு. தார்க்கியகரமும், பிராணவாயுவும் சேர்ந்துண்டாகும் தார்க்கியகரநீறு என்னும் காற்று ரூபமான வஸ்துவானது கெட்ட வாசனை யுள்ளது; சுவாசித்தால், தொண்டையைப் புண்ணுக்கும் குணமுள்ளது.

க்ரோவ் மின்சார பாண்டம். (The Grove Cell);—

மேற்கூறிய புன்ஸேன் பாண்டத்தில், கரித் தகட்டுக்குப் பதிலாக, கனரஜதம் (Platinum) என்னும் உலோகத்தா லுண்டாய) தகட்டை உபயோகித்தால், அது க்ரோவ் மின்சார பாண்டமாகும். இங்கு ஏற்படும் ரஸாயனுதி மாறுதல்களும், மற்றைய செய்கைகளும் புன்ஸேன் பாண்டத்திலுள்ளவை போலவே இருக்கின்றன.

பைக்ரோமேட் மின்சார பாண்டம் :—(The Bichromate Cell).

அமைப்பு :—குண்டிகை (Flask) போன்ற ஒரு கண்ணுடிப் பாத்திரத்தில் ஜலமிச்ரமான கந்தகாமிலம் ஊற்றப்பட்டு, அதில் தூளாக்கப்பட்ட போடாஸியம் பைக்ரோமேட் என்னும் அமிலகரவாயு அம்சம் நிறைந்துள்ள பதார்த்தம் போடப்பட்டிருக்கிறது. இக்குண்டிகையின் முகத்துவார மூடியில் செங்குத்தாய் ஒரு பித்தளைக் குழாய் பொருத்தப் பட்டிருக்கிறது. அடிப்பாகத்



படம் 7

தில் ஒரு துத்தநாகத் தகட்டைத் தாங்கியுள்ள ஒரு பித்தளைக் கோலானது, மேற்கூறிய குழாயில் மேலும் கீழும் செல்லக் கூடியதாயும், ஒரு சுரிபாணி மூலமாய் வேண்டிய ஸ்தானத்தில் தங்கி நிற்கக்கூடியதாயு மிருக்கிறது. இத் துத்தநாகத் தகட்டுக்கு இருபுறத்திலுமுள்ள இரு கரித்தகடுகள் திராவகத்தில் அமிழ்ந்து நிற்குமாறு வைக்கப்பட் டிருக்கின்றன. இவ்விரு கரித் தகடுகளும் மூடியின் மேலுள்ள, துருவக்கம்பி பொருத்துவதற்கான மூட்டுத் திருகாணியுடன் (Binding screw) ஒரு கம்பி மூலமாய்ச் சம்பந்தப்படுத்தப்பட் டிருக்கின்றன. மற்றொரு துருவக் கம்பியானது, துத்தநாகத் தகட்டுடன் சம்பந்தப் படுத்தப்பட்டுள்ள வேறொரு திருகாணியில் பொருத்தப்பட் டிருக்கிறது.

குறிப்பு :—துத்தநாகத் தகட்டைத் தாங்கி நிறுத்துவதற்கான மேற் கூறிய ஏற்பாடானது, வேண்டும்போது அதைத்திராவகத்தில் அமிழ்த்தி இரஸாயனமாறுதல் உண்டாகுமாறு செய்வதற்கும், மற்றவேளைகளில் அதை உயரத்தூக்கி நிறுத்தி, அநாவசியமான மாறுதல் ரூபமான நாசமுண்டாகாதபடி செய்வதற்கும் என்று அறியவும்.

செய்கை:— இங்குண்டாகும் மாறுதல்கள் வெகு சிக்கலுள்ளவை. முக்கியமாய்த் தெரிந்து கொள்ளவேண்டிய விஷயமாவது:—துத்தநாகமும்

(இதன் தொடர்ச்சி 15-ம் பக்கம் பார்க்க.)

அடுத்தது காட்டும் பளிங்குபோ னெஞ்சங் கடுத்தது காட்டு முகம்.

ஸ்ரீ கிருஷ்ணகர்ணம்ருதம்

SRI KRISHNA KARNAMRUTAM

"த்ரிபுவனகமனம் தமாலவர்ணம்
ரவிகரகௌரவாம்பரம் ததானே |
வபு ரளகருலாவ்ருதானனப்ஜே
விஜயஸகே ரதிரஸ்து மே நவத்யா" ||

117. மதுரிம்பரிதே மனேபிராமே
ம்ருதுள தரஸ்மித முத்ரிதானனேந்தௌ |
த்ரிபுவன நயனைகலோப நீயே
மஹஸி வயம் வ்ரஜபாஜி லாலஸா: ஸ்ம : ||

"கார்வண்ணனது நிகரற்ற ஸௌந்தர்யாதிசயத்தில் மனம் ஈடுபட்டு, அதை வர்ணித்துக் கூறுகிறார் லீலாசுகர் :— "மாதுரியம் நிரம்பியதும், வெகு மனேஞ்ஞமானதும், அழகிய புன்சிரிப்பால் அலங்கரிக்கப்பட்ட சந்திரன்போன்ற அழகிய திருமுகமண்டலத்தோடு கூடியதும், மூவுலகங்களிலும் எல்லோரும் கண்டு களிக்கத்தக்கதும், ஆயர்பாடியில் சஞ்சரித்துவந்ததுமான தேஜஸில் ஆஸ்தையுள்ளவர்களா யிருக்கிறோம்."

118. பாணௌ வேணு: ப்ரக்ருதி ஸுகுமாரா—
க்ருதௌ பால்ய லக்ஷ்மீ :
பார்ச்வே பாலா: ப்ரணயஸரஸா—
லோகிதா பாங்கலீலா : |
மௌளௌ பர்ஹம் மதுர வதனம்—
போருஹே மௌக்த்ய முத்ரே
த்யார்த்ராகாரம் கிமபி கிதவம் ஜ்யோதி—
ரன்வேஷயாம : ||

"கையில் புல்லாங்குழல் ; இயல்பாய் வெகு அழகிய ரூபத்தில் பால்ய்சோபை ; பக்கங்களில் மிருந்த ஸிநேக பாவத்துடன் கடைக்கண் பார்வையால் கடாக்ஷிக்கப் பட்டுள்ள இடைச்சிறுவர்கள்; கூந்தலில் மயில் தோகை ; அழகு நிரம்பிய தாமரைப்புஷ்பம் போன்ற முகத்தில் பிரேமை நிறைந்துள்ள லாவண்யம் ; வர்ணிக்க வொண்ணுததும், எல்லோரையும் வஞ்சிக்கத்தக்கதுமான இவ்வித ஒளி விசேஷத்தை நாம் தேடுகிறோம்." அபார கருணைகொண்டு பூமியில் அவதரித்து, தமது நிகரற்ற சௌந்தரியத்தாலும், அற்புத லீலைகளாலும், பார்ப்பவர் மனதைக் கவர்ந்து, ஸௌலப்ய குணத்தால் ஆயச்சிறுவர்களுடன் கூடி விளையாடின கார்வண்ணனது ரூபாதிசயங்களைத் தியானித்து வர்ணிக்கிறார் லீலாசுகர் என்பது கருத்து.

119. அநன்ய ஸாதாரண காந்தி காந்தமா—
க்ராந்த கோபீ நயனுர விந்தம் |
பும்ஸ : புராணஸ்ய நவம் விலாஸம்
புண்யேன பூர்ணேன விலோகயிஷ்யே ||

"உலகங்களில் மற்றவர்களிடம் காணக்கிடைக்காத விசேஷ தேக காந்தியால் பார்க்கப் பார்க்க மனேஞ்ஞமானதும், கோபிகைகளின் தாமரைப்புஷ்பம் போன்ற கண்களால் இடைவிடாது பார்க்கப்பட்டதும், அநாதிகாலமாயுள்ள பரமபுருஷனது புதிதான லீலாவிசேஷத்தை, பூர்ணமான புண்ணியமிருந்தாலல்லவோ நான் பார்க்கக்கூடும்!"

120. ஸாஷ்டாங்க பாதமபிநந்த்ய ஸமஸ்தபாவை :
ஸர்வான் ஸுரேந்த்ர நிகரானிதமேவ
யாசே |
மந்தஸ்மிதார்த்ர மதுரானன சந்த்ரபிம்பே
நந்தஸ்ய புண்யநிசயே மம பக்திரஸ்து ||

"நான் சுத்தமான மனப்பாங்குடன் தேவகணங்களின் பாதங்களில் சாஷ்டாங்கமாய்த் தண்டனிட்டு, அவர்களிடம் கெஞ்சிக்கேட்டுக் கொள்ளும் விஷயம் ஒன்றே. அதாவது புன்சிரிப்பு நிறைந்து, சந்திர பிம்பம்போல் வெகு மனேஞ்ஞமாய் விளங்கும் திருமுக மண்டலத்தோடு கூடியவும், நந்தகோபரது புண்ணியங்களின் கூட்டமே உருவெடுத்து வந்ததுபோலுமுள்ள கார்வண்ணனிடம் எனக்கு ஸ்திரமான பக்தியிருக்க வேண்டுமென்பதே." மற்றைய தேவர் முதலானேருடைய

கிருபையானது மோக்ஷசாதன மாகாதென்பதும், ஸ்ரீ கண்ணபிரானது காருண்யமே பேரானந்தத்தை யளிக்குமென்பதும் லீலாசுகரின் திருடமான தீர்மானம் என்பது கருத்து.

121. ஏஷு ப்ரவாஹேஷு ஸ ஏவ மன்யே
க்ஷணோபி கண்ய: புருஷாயுஷேஷு |
ஆஸ்வாத்யதே யத்ர கயாபி பக்த்யா
நீலஸ்ய பாலஸ்ய நிஜம் சரித்ரம் ||

"பிரவாகம்போல் சென்று கொண்டிருக்கும் மனிதர்களின் ஆயுட்காலங்களில், எந்த க்ஷண நேரமாவது குழந்தை ரூபமான கார்வண்ணனது திவ்விய சரித்திரத்தைப் பக்தியுடன் தியானிப்பதில் கழிக்கப்படுகிறதோ, அந்த க்ஷண காலந்தான் ஸபலமாக நினைக்கப்பட வேண்டும்: அதாவது மற்றைய காலங்கள் வீண்பொழுதென்பது கருத்து."

122. நிஸர்க ஸரஸாதரம் நிஜ தயார்த்ர-
திவ்யேக்ஷணம்
மனோஞ்ஞ முகபங்கஜம் மது ரஸார்த்ர
மந்தஸ்மிதம் |
ரஸஞ்ஞ ஹ்ருதயாஸ்பதம் ரமிதவல்லவீ—
லோசனம்
புன: புனருபா ஸ்மஹே புவனலோப—
னீயம் மஹ: ||

"சுபாவமாய் மதுர ரஸம் நிரம்பிய அதரத்தோடு கூடினதும், அபார கருணை நிறைந்த திவ்விய கடாக்ஷங்களுடையதும், அதிரம்மியமான முக கமலத்தோடு விளங்குவதும், மனதைக் கவரக்கூடிய புன்சிரிப்போடு பிரகாசிப்பதும், ரஸமறிந்தோர் மனத்தை விட்டு அகலாது எப்போதும் தியானிக்கப்படுவதும், பக்திரூபமான சிருங்கார ரஸம் நிரம்பிய கோபிகைகளால் இடைவிடாது கண்ணாரக்கண்டு களிக்கப்பெற்றதும், எல்லா உலகங்களிலும் பார்ப்பவர் மனத்தைக் கவரக்கூடிய லாவண்ணியம் பொருந்தியதுமான தேஜோ விசேஷத்தை அடிக்கடி உபாஸிக்கிறோம்."

123. ஸ கோபி பால: ஸரஸீருஹாக்ஷ:
ஸாச வ்ரஜஸ்த்ரீ ஜனபாத தூளி: |
முஹுஸ்ததேத த்யுகளம் மதீயே
மோமுஹ்யமானேபி மனஸ்யுதேது ||

"புண்டரீகம் போன்ற அழகிய கண்களோடு கூடிய வர்ணிக்கமுடியாத அச்சிறுவன்; அவ்வளவு பாக்கியம் பெற்ற ஆயர்பாடியிலுள்ள ஸ்திரீகளின் பாத தூளி; இவ்விரண்டும், அஞ்ஞானத்தாலும் ராகத் துவேஷாதிகளாலும் மூடப்பட்டுத் தவிக்கும் என் மனதில் உதிக்குமாக!" பகவானுடைய பால லீலைகளும், கோபிகைகளின் பக்தி பரவசமான சேஷ்டைகளும் பரம பாவனமென்பதும், அவற்றின் தியானம் பேரானந்தத்தை யளிக்குமென்பதும் இதன் கருத்து.

124. அதிபூமிம பூமிமேவ வா
வசஸாம் வாஸித வல்லவீஸ்தனம் |
மனஸாமபரம் ரஸாயனம்
மதுராத்வைத முபாஸ்மஹே மஹ: ||

கோபிகைகளுடன் உல்லாஸமாய்க் கூடிக் களித்த தேஜோ மயமான வஸ்துவானது, வாக்குகளால் வர்ணிக்கத் தகாததாயோ, வர்ணிக்க முடியாததாயோ இருந்தாலும் சரி, திவ்விய ஔஷதம் போல் மனதிற்கு ஒப்பில்லா சுகத்தை யளிக்கக் கூடியதும், நிகரற்ற மாதுர்யமே உருவெடுத்தது போலுமுள்ள அந்தத் தேஜஸை தியானித்துச் சரணமடைகிறோம்.

125. ஜனனாந்தரேபி ஜகதேக மண்டனே
கமநீயதாம்னி கமலாயதேக்ஷணே |.
வ்ரஜஸுந்தரீஜன விலோசனாம்ருதே
சபலானி ஸந்து ஸகலேந்த்ரியாணி மே ||.

"ஸர்வப் பிரபஞ்சத்திற்கும் ஒரு திலகம்போல் விளங்குபவரும், மனதைக் கவரத்தக்க தேஜஸோடு கூடியவரும், தாமரைப் புஷ்பம்போல் விசால நேத்திரங்களோடு கூடினவரும், ஆயர்ப்பாடியிலுள்ள கோபிகைகளின் கண்களுக்கு அமிருதம்போல் ஆனந்த மளிப்பவருமான கண்ணனிடம், மறு ஜன்மத்திலும் எனது புலன்கள் ஆஸ்தை யுள்ளவைகளாய் இருக்கட்டும்" கார்வண்ணனது ஸௌந்தரிய தரிசனமானது, மோக்ஷஸுகத்தைவிட உயர்ந்த ஆனந்தத்தை உண்டுபண்ணுமென்பதும், இது கிடைப்பதானால், மோக்ஷத்தைக் கருதுவதைவிட, வேறு ஜன்மம் எடுப்பதே நலம் என்று சொல்லத்தக்கதாய் பகவானது ரூபலாவண்ய ஸேவையானது அவ்வளவு அற்புதமென்பது கருத்து.

(முதற் பக்கத் தொடர்ச்சி.)

யாகலின், அடியேனுடையது அந்தக்கரணமான ஆராயும் நெறியிலேயே நின்று மேன்மேலும் அறிவு பெருகப் பெற்று, தக்க பருவத்தில் மெய்ஞ்ஞானத்தின் சொரூபமான தேவரீரது பாதார விந்தங்களை யடைந்து, அந்த மெய்ஞ்ஞானத்துடன் கொஞ்சிக் குலாவி, இறுதியில் தமது திருவாய்மலரினால் வாவென்று அழைக்கப்பட்டு முத்திபெறவேண்டும்.

பகவத் அவதார தத்துவம்

THE SIGNIFICANCE OF THE AVATARS

[அனந்தஸூனு]

இவ்வுலகைப் படைத்துக் காத்துவரும் தெய்வம் ஒன்றுண்டென்றும், மானிடராய்ப் பிறந்துள்ளோருக்குப் பிரத்தியக்ஷமாயுள்ள இவ்வுலக வாழ்க்கையைவிட வேறுபட்டதும், கண்ணுக்குப் புலப்படாததுமான மோக்ஷம் என்பது ஒன்று இருக்கிறதென்றும், அதை அடைவதற்கு, பாவங்களை ஒழித்து சத்தியம், தயை, சுயநல மொழித்தல், பொறுமை முதலிய நற்குணங்களைக் கைக்கொண்டு தர்மமார்க்கத்தில் நடப்பதும், ஈசுவரனைப் பக்தியுடன் தொழுவதும் முக்கிய சாதனங்கள் என்றும் உலகில் எல்லா மதத்தினரும் ஒப்புக்கொண்டிருக்கின்றனர். பொதுவாய் இவ்விஷயங்களைப் பற்றிப் பேசுவோமாகில், உலகில் ஒரே மதம் இருக்கவேண்டுமென்று சொல்லலாம். ஆனால், அநேக மதங்களிருப்பதையும், வெவ்வேறு நாட்டார் வெவ்வேறு ஆசாரங்களைத் தழுவி நடப்பதையும் நாம் அனுபவத்தில் பார்த்துவருகிறோம். இதன் காரணம் என்னே!

ஒவ்வொரு மதத்திலும் முக்கியமான மூன்று அம்சங்கள் உண்டு:—(1) ஈசுவரன், ஜீவன், உலக சிருஷ்டி, பிரளயம், தர்மம், மோக்ஷம், பாபம், புண்ணியம், பக்தி இவற்றின் விவரணங்களடங்கிய தத்துவ ஞானம் (Philosophy); (2) மேற்கூறிய ஞான பாகங்களை, பெரியோர்களின் சரித்திரங்கள் ரூபமாய் ஜனங்கள் மனதில் நன்கு பதியுமாறு எடுத்துக் காட்டக்கூடிய புராண, இதிஹாஸாதி கதைகள் (Mythology); (3) அந்தந்த தேசங்களின் சீதோஷ்ண ஸ்திதிக்கும், அந்தந்த ஜாதியாரின் மனப்பாங்குக்கும், தத்துவ ஞானத்துக்கும் ஏற்றவாறு இகபரசுகம் பெறுவதற்காக அவரவர்கள் அனுஷ்டிக்க வேண்டிய கரும முறைகள் (Rituals).

ஒவ்வொரு மதத்திலும் இம்மூன்று அம்சங்களும் ஒற்றுமையுள்ளவைகளாயிராமையால், மதங்கள் வேறுபடக் காரணமுண்டாயிருப்பதுடன், 'எனது மதம் உயர்ந்தது. உனது மதம் தாழ்ந்தது' என்கிற விவகாரமும், அதன் மூலமாயுள்ள ஆக்கிரகமும், வீண் கலகங்களும் ஏற்பட்டு வந்திருக்கின்றன. அவரவர் தத்தம் மதக் கொள்கைகளைச் சற்றேனும் சரிவரத் தெரிந்து பிறமதத்தினரைத் தூஷிக்காமலும், ஆனால் அவர்களுள் சிலர் செய்யக்கூடிய துர்ப்போதனைக்குட் படாமலுமிருப்பது அவசியம். ஹிந்துக்கள் என்பவருக்கு ஹிந்துமதம் இத்தகையது என்கிற ஸ்தூலமான ஞானங்கூட ஏற்படாவிட்டால், இதைவிட துக்கிக்கத் தக்கவிஷயம் வேறு ஒன்றுமில்லை. செல்வம் பெறுதல், இதர தேசங்களை ஜயித்து நாட்டை விஸ்தாரப்படுத்துதல், ஐம்புலன்களுக்குரிய சுகத்தைத்தேடிக் களித்தல் முதலிய விஷயங்களால் மட்டும், ஒரு ஜாதியாரின் மேன்மையும், புகழும் நீடித்து நிற்கா.

இந் நாட்டிலும், மேனாடுகளிலும் முன்னர் எத்தனையோ இராஜ்யங்கள் கொஞ்சகாலம் மிக உன்னத பதவியிலிருந்து, பிறகு அதோகதியடைந்திருப்பதைக் கேட்டிருக்கிறோம். இப்போதும் அநேக ஜாதியார் இது விஷயமாய்த் தடுமாறித் தவிப்பதைப் பார்த்துவருகிறோம். ஒவ்வொரு பெரிய ஜாநியாருக்கும் இன்றியமையாத தேர்ச்சி (culture) ஒன்றுண்டு. இது மதத்துடன் சம்பந்தப் பட்டதாகவே இருக்கும். ஒரு ஜாதியாரின் நாகரிகத்தில், காலத்துக் கேற்றவாறு சிற்சில பேதங்கள் ஏற்படக்கூடினும், மேற்கூறிய தேர்ச்சியின் மூல ஆதாரமாயுள்ள நோக்கங்களையும், ஒழுக்கங்களையும் நன்கறிந்து, அவைகளைத் தழுவி நடந்து, தேசத்தின் ஐசுவரியத்தையும் மேன்மையையும் ஸ்திரப்படுத்துவது நிஜமான தேசாபிமானம், தேர்ச்சி அபிமானம் இவற்றைப் பாராட்டுவோரின் முதற் கடமையாகும்.

இவ்வாறு நமது ஹிந்துமத சம்பந்தமான ஞான பாகங்களைப்பற்றி, இளம்பருவத்தில் நமது சிறுவர், சிறுமிகள் கற்றறிவதற்கு வேண்டிய சாதனங்கள் இப்போது ஏற்பட்டுள்ள கலாசாலைகள் முதலியவற்றில் இல்லை என்றே சொல்லலாம். ஏதோ கல்வியின் சில பாகங்களைக் கற்று, யதேஷ்டமாய் உண்டு களிப்பதற்குச் சாதனமான இதர நாட்டு நாகரீகங்களையும், ஒழுக்கங்களையும் கைப்பற்றி நடக்கும் சிறுவர்கள், வயதுமுதிர்ந்து, உலகவாழ்க்கையில் பிரவேசிக்குங்கால், அவர்களுக்கு நமது மதத்தில் அஞ்ஞான மாத்திரம் அல்ல, ஒருவித துவேஷமும், பரிகாச புத்தியும் ஏற்பட்டு, அவர்கள் அதைப் பலவாறுத் தூஷித்துக் கூறுவதற்கும் இடமுண்டாகிறது. இவ்வித கேவல ஸ்திதி நீங்குவதற்கு, நம் சிறுவர் சிறுமிகள் நம் மதத்தின் முக்கிய கொள்கைகளையும், பெரியோர்களின் சரித்திரங்களையும் தெரிந்து கொள்ளல் அவசியம்.

பகைமையுங் கேண்மையுங் கண்ணுரைக்குங் கண்ணின் வகைமை யுணர்வார்ப் பெறின்.

ஒவ்வொரு மதத்திலும், கண்ணுக்குப் புலப்படாத புண்ணியம், பாபம், தர்மம், நரகம், மோக்ஷம் முதலிய விஷயங்களைப் பாமர ஜனங்கள் அறிந்து நடப்பதற்கு ஆதாரமாயுள்ள சாஸ்திரங்கள் உள. ஏதோ ஒரு மஹான் ஆழ்ந்த சமாதியாலோ, வேறு எவ்விதமாயோ தத்துவ ஞானத்தை அடைந்து, தமது சீடர்கள் மூலமாய் வெளியிட்டிருக்கிறார் என்பதும், அவர் செய்துள்ள உபதேசங்கள் அடங்கியுள்ள கிரந்தங்களே அம்மத சாஸ்திரங்கள் என்பதும் மதக் கொள்கைகளாம். ஆனால், நமது மதத்தில், எவ்வித ஞானத்துக்கும் வேதங்கள் முக்கியமான ஆதாரமென்றும், இவைகள் ஈசுவரனைப்போல், ஆதியந்தமில்லாமல் சாசுவதமானவைகள் என்பதும், ரிஷிகள் தங்கள் தவப்பயனால் வேதங்களின் அர்த்தங்களைக் கண்டறிந்து, ஸம்ருதிகள், இதிஹாஸ புராணங்கள் முதலான கிரந்தங்கள் ரூபமாய் ஜனங்கள் நன்கு அறியுமாறு வெளியிட்டிருக்கிறார்களென்பதும், எங்கும் நிறைந்து பிரகாசிக்கும் நிர்க்குணமான பரம புருஷன் லீலையாய் உலகத்தைப் படைத்தல், காத்தல், அழித்தல் என்னும் மூவித கருமங்கள் செய்யும்போது பிரமன், விஷ்ணு, ருத்திரன் என்ற மூர்த்தி ரூபங்களாய்ப் பிரகாசிக்கிறான் என்பதும் ஆஸ்திகர்களின் முக்கிய கொள்கை. பகவான் ஜீவராசிகள், ஸ்தாவர வஸ்துக்கள் முதலியவற்றைக் குணரூபங்களுடன் ஸ்தூலமாய்ப் பிரகாசிக்கச் செய்வதே சிருஷ்டி ; வெகு காலத்திற்குப் பிறகு இவற்றின் ஸ்தூல ரூபத்தை யழித்து, தம்முள் ஸூக்ஷ்மமாய் அடங்கியிருக்குமாறு செய்வதே பிரளயம் எனப்படும்.

சிருஷ்டி, ஸ்திதி, லயம் இவை மாறி மாறி நடந்தேறி வருகின்றன. ஒரு சிருஷ்டிக்கும், மறு சிருஷ்டிக்குமுள்ள நீண்ட கால அளவை, க்ருதயுகம், த்ரேதாயுகம், த்வாபரயுகம், கலியுகம் என்று நான்கு பாகங்களாக வகுத்துக் கூறுகிறார்கள். இவ்வாறு அநேக சதுர்யுகங்கள் கூடிய கோடிக் கணக்கான வருஷங்களின் காலபரிமாணமானது கல்பங்களென்றும், மன்வந்தரங்களென்றும் விவரிக்கப் படுகிறது. சிருஷ்டி காலத்தில், பிரமனும், அவருக்கு உதவியாயுள்ள மனு முதலிய சிருஷ்டி கர்த்தாக்களும் பிரபஞ்சத்தைப் படைப்பதற்கும், ஸ்திதி காலத்தில் உலகிலுள்ளோர் தம்தம் தர்மங்களையும், ஆசாரங்களையும் சரிவர அறிந்து நடப்பதற்கும் முக்கிய ஞான சாதனம் வேதங்களே. ஸ்மிருதிகள், புராணாதிகள் இவற்றின் அர்த்தங்களைத் துலக்கிக் காட்டுவதற்கான சகாயக் கிரந்தங்கள். இவ்வித ஞானசகாயங்களிருப்பினும், பலமான கர்மவாசனையால், மானிடர், அசுரர் முதலானோருள் சிலர் விவேகத்தைக் கைநழுவவிட்டு, பாபமார்க்கத்தில் நடந்து, ஜனங்களுக்கு ஹிம்ஸை செய்ய நேரிடுகிறது.

இவர்களால் உலகங்களுக்குப் பெருங்கேடு ஏற்படும்போது, விஷ்ணுவானவர் பூமியில் மானிட ரூபமாகவோ, வேறுருபங் கொண்டோ தோன்றி, துஷ்டர்களை ஸம்ஹரித்து, சிஷ்டர்களைப் பரிபாலித்து, தர்மத்தை நிலைநிறுத்துகிறார். மேலும், பிரளயாதி காலங்களில், ஸூக்ஷ்மமா யிருக்கும் சராசர வஸ்துக்களுக்கு யாதொரு நாசமும் ஏற்படாம லிருக்கும் பொருட்டும், மீண்டும் சிருஷ்டி காலத்தில் வேதநாசத்தால் உண்டாகக் கூடிய அஞ்ஞானாதி இடையூறுகளைத் தடுக்கும் பொருட்டும், ஸ்ரீமந் நாராயணன் சமயத்திற்கேற்ற உருவங்கொண்டு ஜீவராசிகளை அனுக்கிரகிக்கிறார். இவ்வாறு அவர் உருவமெடுத்து லோகரக்ஷணம் செய்வதைப் பகவத் அவதாரம் எனக் கூறி வருகிறோம். இவ்வித அவதாரங்கள் பல உள. இவற்றுள் முக்கியமானவை பத்து அவதாரங்கள் உண்டு என்பது நமது கொள்கை. சந்தர்ப்பத்துக்கேற்றவாறு, பகவானுடைய அம்சம் பெற்றுள்ள மகான்களும், ஆசிரியர்களும் இப்புவியில் அப்போதைக்கப்போது ஜனித்து, ஞானப்பிரசாரம் முதலான லோகோபகாரம் செய்துவருகிறார்கள்.

மேற்கூறிய பகவதவதாரங்கள் பத்துள், சில மானிட ரூபமாயும், மற்றும் சில மத்ஸ்யம், கூர்மம் முதலான ஜந்துக்களுருவாகவும் ஏற்பட்டுள. ஸத்வகுண மூர்த்தியான பகவான், மனுஷனாகவோ இதர ஜந்துவாகவோ பிறக்கிறார் என்பதால், அந்தந்த ரூபங்களுக்குரிய தமோகுணம், பாவம், துக்கம் முதலியவற்றால் மூடப்பட்டு, நம்மைப்போல அவரும் வருந்துகிறாரென்று நினைக்கக்கூடாது. ஸர்வசக்தனும், ஸத்யஸங்கல்பனும், ஸர்வவியாபியுமான பரமபுருஷனுக்கு, பிறப்பாலுண்டாகும் துக்கம், அஞ்ஞானம் முதலிய இழிகுணங்கள் ஒருகாலும் கிட்ட அணுகா. சில சமயம், சாதாரண மனிதனைப்போல் சுகம், துக்கம், அஞ்ஞானம் முதலிய ஸம்ஸாரகஷ்டங்களை அனுபவிப்பதாய் அவர் பாவனை செய்தாலும், வாஸ்தவமாகவே அவை அவரைப் பீடிப்பதாக நினைத்து, அவரை அவமதிக்கக்கூடாது. இவ்வித சேஷ்டைகள் பகவானது ஸௌலப்யகுணத்தையும், அபார

கருணையையும் வெளியிடுகின்றன. இல்லாவிடில் அவரது அவதாரகாலங்களில், பாமர ஜனங்கள் அவருடன் கூடப்பழகி, அவரது ஸகவாஸம்,ஸல்லாபம் முதலானவற்றால் பரிசுத்தமாகிக் கடைத்தேறுவதற்கு சுலபமான சாதனம் எங்ஙனம் ஏற்படும்?

பிரபஞ்ச சிருஷ்டி, ஸ்திதி, லயம் இவற்றை லீலைகளாகக் கொண்ட பரமாத்மாவுக்கு, மேற்கூறிய சாதாரண மனுஷ்யாதி பாவனைகளும் விநோதார்த்தமெனவே கொள்ளவேண்டும். 'உயர்ந்தவை, தாழ்ந்தவை' எனச் சொல்லப்பட்ட பிராணிகளில் ஸஞ்சரித்து வரும் வாயுவை உயர்குணமுள்ளது, கீழ்ப்பட்டது என்று சொல்லத்தகுமோ? அதுபோல், ஸர்வேசுவரன் எவ்வுருக்கொண்டாலும், அதனால் அவருக்கு யாதொரு தாழ்வும் கிடையாது. நாம் நமது கருமத்துக்கேற்ற சரீரத்தை யடைந்து ஸம்ஸார துக்கத்தை யனுபவிப்பதுபோல்,அவரும்கருமபந்தத்தால் அவ்வித ரூபங்க ளெடுத்துள்ளார் என நினைக்கவே கூடாது. ஸ்ரீமத் பாகவதம், ஸ்ரீ பாரதம்,ஸ்ரீராமாயணம், மாத்ஸ்யபுராணம், விஷ்ணுபுராணம் முதலிய புண்ணிய கிரந்தங்களில் பகவத் அவதாரங்களின் மகிமை நன்கு எடுத்துக் கூறப்பட்டிருக்கிறது. இவ்வித அவதார ரகசியங்களை ஸ்ரீ சுகப்பிரம்மரிஷி பாகவத சிரோமணியான பரீக்ஷித் மகாராஜனுக்குச் சொல்லியிருப்பதாக ஐதிஹ்யம்.

(10-ம் பக்கத் தொடர்ச்சி.)

கந்தகாமிலமும் சேர்ந்து ஏற்படும் மாறுதலால் ஜலகர வாயுவானது உண்டாகிறது. இது மேற்கூறிய பொடாஸியம் பைக்ரோமேட் என்னும் பதார்த்தத்தாலும், கந்தகாமிலத்தாலும் தாக்கப்பட்டு, ஜலரூபமாய் மாறுகிறது. இப்போ துண்டாகும் மற்றைய வஸ்துக்களால் கிரமேண விலயனத்தின் சிவப்பு நிறமானது பச்சை நிறமாகிறது. இவ்விதம் நிறம் மிகவும் மாறிவிட்டால், கந்தகாமிலம் முதலியன புதிதாய் உபயோகப் படுத்தப்பட வேண்டுமென அறியவும்.

குறிப்பு:—க்ரோமிக் திராவக பாண்டம்.(The Chromic acid cell):—பூர்வம் உபயோகப் படுத்தப்பட்டுவந்த பொடாஸியம் பைக்ரோமேட்டுக்குப் பதிலாக, க்ரோமிக் ஆஸிட் என்னும் வஸ்துவை உபயோகப் படுத்துவது பலவிதத்தில் நலமென்று கண்டுபிடித்து, இப்போது இவ்வித பாண்டத்தையே வெகுவாறு உபயோகப்படுத்தி வருகிறார்கள்.

நமது சிறு கதை

OUR SHORT STORY

நிழலின் அருமை

[ஸ்ரீமதி ருக்மணி அம்மாள்]

"பிறகு அவ்விரு காதலர்களும் மணம்புரிந்துகொண்டு சௌக்கியமாக விருந்தார்கள்."

புஸ்தகத்தை மூடி ஒரு பெருமூச்சுடன் பக்கத்தில் வைத்தாள் ஸரோஜா. ஸ்ரீனிவாஸன் (சிநேகிதர்களுக்கு சீமா) மிகுந்த அக்கரையுடன் தன் கையிலிருக்கும் புதிதாக வந்த 'மோட்டார்' புஸ்தகத்தை படித்துக்கொண் டிருந்தபடியால் தன் மனைவி கதைப் புஸ்தகத்தைக் கீழே வைத்துவிட்டு தன்னை உற்று நோக்கினதைக் கவனிக்கவில்லை.

எதிர் வீட்டு மாடியிலிருந்து இவர்களைப் பார்த்த விசாலாக்ஷிக்கு ஸரோஜாவைப்போல அதிர்ஷ்டசாலியாக பகவான் தன்னை ஏன் சிருஷ்டிக்கவில்லையென்று தோன்றிற்று.

உண்மையில் ஒருவர் இத் தம்பதியை நோக்கினால் இவர்களுக்கு லக்ஷ்மீ கடாக்ஷம் பூர்ணமாக யிருக்கிறது; ஒரு குறைவும் கிடையாது என்று சொல்லி திருஷ்டிப் படும்படியாக யிருந்தார்கள். எலக்ட்ரிக் விளக்கென்னும் காந்த விளக்கு பளிச்சென்று ஸரோஜாவின் முககாந்தியை வீசச் செய்தது. அவள் ஒரு சாய்வு நாற்காலியில் சாய்ந்துகொண் டிருந்தாள் பார்ப்பதற்கு சுமார் பதினேழு வயதுள்ளவளாய் மெல்லிய உருவமும், கருத்த புருவங்களும், சுருண்டு அடர்ந்த கலைமயிரும் மாநிறமான அவள் வர்ணத்தை சிவப்பென்று சொல்லும்படியாகச் செய்தது.

அழகிற்கு குரூபத்தையும், வயோதிகனுக்கு சிறுபெண்ணையும், கெட்டவனுக்கு நல்லவளையும், இன்னும் பலவிதமாக விவாக விஷயத்தில் குழப்பம் செய்கிற பிரம்மா அக்கிரமங்களுக்கெல்லாம் பரிகாரமாக இந்த ஒரு பெண்ணுக்குச் சரியான புருஷனைக் கலியாணம் செய்வோம் என்று எண்ணி சீமாவை சிருஷ்டித்தாற்போலிருந்தது. நல்ல குடும்பத்தில் பிறந்து குழந்தை முதல் சௌகரியத்தில் வளர்ந்த அவன் முகத்தில் களையும் கம்பீரத்தன்மையும் நன்றாக விளங்கின. சாதாரணமாக, பணக்கார பிள்ளைகள் பரீக்ஷையில் தவறுவது வழக்கமாக யிருந்தபோதிலும் சீமா வழக்கத்திற்கு விரோதமாகவே பி.எல்.,

பரீக்ஷை வரையிலும் தவறாமலே பாஸ் செய்து இப்பொழுது வக்கீலாக இருக்கிறான்.

அவன் கட்டிலில் படுத்துக்கொண்டு தன் புஸ்தகத்திலேயே கவனமாக யிருந்தபடியால் நான் முன்சொன்னபடி ஸரோஜா புஸ்தகத்தை கீழே வைத்ததை கவனிக்கவில்லை.

“இந்திரா, நான் எனிப்படிப் பிறந்தேன்?” என்று விளக்கைப்பார்த்து வினவினாள் ஸரோஜா.

சீமா புஸ்தகத்தை வைத்துவிட்டுத் திரும்பினான். “இந்திரன் என்ன செய்வான்? பிரம்மா அல்லவோ சிருஷ்டிக்கென்று ஏற்பட்டவர். அது கிடக்கட்டும். எனிப்படி அதிருப்தி. உன்னை சிருஷ்டித்தபொழுது பிரம்மா ஒன்றையும் கண்ணை மூடிக்கொண்டு செய்ததாக எனக்குத் தோன்றவில்லையே. என்னை அகத்துக்காராகச் செய்த குறையைத் தவிர வேறு என்ன குறை உனக்கு?”

“நம்மிருவருக்கும் கலியாணமாகி ஐந்து வருஷங்களாகின்றன. சாந்திக் கலியாணமாகி இரண்டு வருஷமாகிறது. நாளையதினம் நான் இறந்து போனால் நீங்கள் என்ன செய்வீர்கள்?”

“அந்தமாதிரி பேசாதே, ஸரோ.”

“ஆமாம். எனக்குத் தெரியும். என் அம்மாதிரி பேசக்கூடாது. நான் போய்விட்டால் உங்களுக்குக் கொஞ்சம் கஷ்டமாக யிருக்கும். சில நாளைக்கு ஸினிமா, தியேட்டர் முதலியவற்றிற்குப் போகமுடியாது. உங்க அம்மா சீக்கிரத்தில் வேறு கலியாணம் செய்துவைக்கப் பார்ப்பார்.”

சீமா எழுந்து உட்கார்ந்தான். “ஸரோஜா—”

“உஸ், சற்று இருங்கள். நான் சொல்ல வேண்டியதை முழுவதும் சொல்லுகிறேன். அடுத்தாப்போல், நீங்கள் போய்விட்டால் எனக்கு வருத்தமாயிருக்கும். ஏனென்றால் நமது ஹிந்து சாஸ்திரப்படி நான் நகைகளையும் புது பட்டுப் புடைவைகளையும் அணியக்கூடாது. வெளியில் எவ்விடமும் செல்லக்கூடாது. ஜயிலில் அடைத்தாற்போலிருக்கவேண்டியது. அதனால்தான் எனக்கு வருத்தமாகயிருக்கும். அது தவிர நம்மிருவருக்கும் காதல் என்றும் அன்பு என்றும் பேச்சே கிடையாது.”

“அடி, ஸரோஜா! கண்ணு, உன்னிடம் எனக்கு அன்பு கிடையாதா?”

“அன்பா!” ஸரோஜா சிரித்தாள். “அன்பா! என்னைக் கண்டால் உங்களுக்குப் பிடிக்கிறது. ஏன்? நான் பார்வைக்கு கோரமாக யில்லாமல் நல்ல நகைகளையும் புடவைகளையும் அணிந்திருக்கிறேன். முழு முட்டாளாக யில்லாமல் ஏதோ நீங்கள் கிளப்பைப் பற்றியும் மோட்டாரைப்பற்றியும் பேசினால் அர்த்தம் புரிந்துகொள்வேன். அது தவிர உங்கள் வீட்டை சரியாக பார்த்துக்கொண்டு நல்ல சாப்பாடு வேளா வேளைகளில் கிடைக்குமாறு கவனித்துக்கொள்வேன்.”

ஸரோ: “சற்று இருங்கள்”- அவளும் ஆத்திரத்தில் எழுந்து உட்கார்ந்தாள். “எனக்கு உம்மைக் கண்டால் பிடிக்கவில்லையா? பிடிக்கிறது. ஏன்? நீங்கள் (ஏதோ சொல்லவந்த சீமாவை கையாலமர்த்தினாள்.) சில அகத்துக்காரர்களைப் போல என்னை ஹிம்சைப் படுத்துவதில்லை. ஒவ்வொரு நாளைக்கு ஏதாவது வீட்டில் அசௌகரியமாயிருந்தாலும் சமையல்காரன் உப்புரொம்ப போட்டு விட்டாலும் ஒன்றும் சொல்லாமல் பொருத்துக் கொள்ளுகிறீர்கள். நம்மிருவருக்கும் ஒரே மாதிரி குணங்கள் ஆகையால் இருவரும் ஒத்துப் போகிறோம். அதுவே தவிர, நம்மிருவருக்கும் காதலா! காதலென்றால் என்னதென்பதே தெரியாதே எனக்கு. காதல் என்றும் அன்பருக்காக கஷ்டங்களை யனுபவிப்பதென்றும் புஸ்தகங்களில் வாசிக்கிறோமே தவிர நாம் என்றளவும் அனுபவிப்பதேயில்லை. நீங்கள் சாயங்காலம் பந்தாடுமிடத்திலிருந்து வர நேரமாகிவிட்டால் நான் வாசலிற்கும் உள்ளுக்குமாக நடக்கிறேனா? ஏதோ சீட்டுக் கச்சேரி போட்டுவிட்டீர்கள். பலமாக நடக்கிறது என்று பேசாமலிருக்கிறேன். நான் என்னுடைய அத்தான் ராகவனிடம் ரொம்ப நேரம் பேசிக்கொண்டிருந்தால் நீங்கள் பொறாமைப்பட்டுத் தவிக்கிறீர்களோ?

“ராகவனைக் கண்டாலே எனக்கு வெறுப்பாக யிருக்கிறது.”

“எதுவோ நீங்கள் பொறாமைப்பட்டு நான் கண்டதில்லை. காதலாம்! நாமிருவரும் காதலித்தால் இப்படியா யிருப்போம்.”

“என்ன பண்ணுவது? நம்முடைய ஹிந்து வழக்கப்படி பெரியவர்கள் நம்மைக் கலியாணம் செய்துவைத்து விட்டார்கள்” என்று சிறிது மாறின குரலில் மன வருத்தத்துடன் சொன்னான் சீமா.

“அதைத்தான் சொல்லுகிறேன். என்னமோ கலியாணம் பண்ணி வைத்துவிட்டார்கள். என்னமோ ஆடுமாடுகள் வழக்கப்படி நாம் சாப்பிட்

டும் தூங்கிக்கொண்டு மிருக்கிறோம். மனதில் சந்தோஷமென்பதை அறிவோமோ ?''

"நான் திருப்தியாகத் தானிருக்கிறேன்.''

"திருப்தி! நான் திருப்தியைச் சொல்லவில்லை சந்தோஷமோ, துக்கமோ, காதலோ அன்போ ஒன்றும் தெரியாது. நளனைப்பிரிந்து தமயந்தி வருத்தப்பட்டாள் என்று வர்ணிக்கிறார்களே. அதில் நூறில் ஒருபங்கு உணர்ச்சிகூட எப்படி யிருக்குமென்று எனக்குத் தெரியாது.

"நளன்போல் நானிருந்தால் ஒரு வேளை என் பேரில் உனக்குக் காதல் உண்டாகலாம்.''

"சே. உங்களை அப்படி யிருக்கவேண்டு மென்று நான் சொல்லுகிறேனா? எனக்குமட்டும் சொல்லவில்லை. நம்மிருவருக்குமே காதல் என்றால் தெரியவில்லை என்று தானே சொல்லுகிறேன். வழக்கம்! என்ன வழக்கம்? பாழாய்போன வழக்கம். சிறு வயதிலேயே கலியாணம் செய்துகொண்டு ஆயுஸு முழுவதும் மிருகங்களுக்குச் சமானமாகக் கழிக்கவேண்டியது. மனதில் ஆசையோ, ஆவலோ ஒன்றும் கிடையாது. அடுத்தாப்போல் வெள்ளைக்காரர்களைப் பாருங்கள். அவர்கள் காதலென்பதை யறிந்து கலியாணம் செய்துகொள்ளுகிறார்கள்.''

"அவர்களெல்லாரும் திருப்தியாகவும் சந்தோஷமாகவும் இருக்கிறார்களோ ?''

"அப்படி நான் சொல்லவில்லையே. அவர்களெல்லாரும் சந்தோஷமாகவில்லை. சிலர் கஷ்டப்படுகிறார்கள். இருந்தாலும் நம்மைப் போலில்லையல்லவா? பகவான் பகுத்தறிவு உணர்ச்சியென்று கொடுத்திருப்பதற்கு அவர்கள் அதை அனுபவிக்கிறார்களல்லவா? ஒன்றைப்பற்றியும் யோசிக்காமலும் ஒன்றையும் அனுபவிக்காமலும் இருக்கிற ஜன்மம் என்ன ஜன்மம்? நமக்கும் மிருகங்களுக்கும் என்ன வித்தியாசம் ?''

"நான் என்ன செய்வது, ஸரோஜா? அம்மாதிரி காதல் இல்லாமல் என்னைக் கலியாணம் செய்துகொண்டு உன் வாழ்நாள்களெல்லாம் கஷ்டப்படும்படி நேரிட்டது. அம்மேல்நாட்டு வெள்ளைக்காரர்களைப்போ லிருந்தாலாவது விவாகரத்து செய்துகொள்ளலாம். அதுவும் கிடையாது. ஆனால் நம்ம வழக்கத்தில் ஒரு சௌகரியம். நாம் ஒருவரோடொருவர் நாள் முழுதும் பேசாமலிருந்தாலும் அந்நியர்கள் ஒன்றும் சொல்ல மாட்டார்கள். வெட்கப்பட்டுக்கொண்டு நம்மெதிரில் பேசவில்லை. கர்நாடகமாக யிருக்கிறார்களென்றே சொல்லுவார்கள். நானும் உன்னைத் தொந்திரவு செய்யாமல் என்னாலானமட்டும் விலகியே யிருக்கிறேன்'' என்றான் சீமா.

"உங்களைக் கண்டால் எனக்கு வெறுப்பாக யிருக்கிறது என்றேனா என்ன? அதெல்லாம் ஒன்றுமில்லை. நம்மிருவரையும்போல் ஒத்துமையாய் ஒருவருமிருப்பதில்லை. ஆனாலும் அகத்துக்காரர் அகமுடையாள் என்றால் எனக்குப் பிடிக்கவில்லை. அன்பு இல்லாமல் என்ன புருஷன் பெண்சாதி உறவு ?''

"சரி, உனக்கு வெறுப்புண்டாகும்படி உறவு கொண்டாட எனக்கு இஷ்டமில்லை. என் மட்டில் உன்னிடம்...—'' என,

"என்ன, என்னிடம் நான்தான் முன்பே சொன்னேனே. நம்மிருவருக்கும் காதல் என்பதே கொஞ்சமும் கிடையாது. அது என்னவென்றே எனக்குத் தெரியாது.''

"சரி, நாழிகையாகிறது படுத்துக்கொள்வோம்'' என்று சீமா சொன்னான்.

"நான் அடுத்த அறை யிலேயே படுத்துக்கொள்கிறேன். இங்கே வேண்டாம்''

"ஆகா அப்படியே'' என்று அப்பெரிய கட்டிலில் தனியாக படுத்தான் சீமா. ஸரோஜாவும் விளக்கை அணைத்துவிட்டு ஒரு பெருமூச்சு விட்டுக்கொண்டே எழுந்து அடுத்த அறையில் படுக்கச் சென்றாள்.

II

"வாடி யம்மா ஸரோஜா, ஸேவிக்கிறையா? தீர்க்காயுசாக கல்லாகத் தாலியைகட்டிக்கொண்டு குஞ்சும் குழந்தைகளுமாக சௌக்கியமாயிருக்க வேண்டும். எனிப்படி உடம்பு இளைத்திருக்கிறது ? குளித்து நாளாய்விட்டதோ ?'' "இல்லை, இல்லை. பத்து நாள்கள்தான் ஆயிருக்கு'' மென்று சிரித்துக்கொண்டே சொன்னாள் ஸரோஜா.

"என்னமோ, உங்க மாமியாருக்கு ஒரே பிள்ளை. உனக்கு சீக்கிரம் பிள்ளைக் குழந்தையாக பிறக்கவேண்டும். அடி, கமலா, ஸரோஜா பட்டணத்திலிருந்து வந்திருக்கிறாள். காபி, பலகாரம் கொடுக்கச் சொல்லு. உள்ளே அழைத்துக் கொண்டு போ. நான் சீமாவைப் போய் விசாரித்துவிட்டு வருகிறேன்'' என்று சொல்லிவிட்டு ஸரோஜாவின் பெரிய மாமியாராகிய கனகம்மாள் தன்னுடம்பைச் சிரமப்பட்டு தூக்கிக் கொண்டு அசைந்து சென்றாள்.

"என்ன ஸரோஜா, சௌக்கியமா? உன்னைப் பார்த்து ஒரு வருஷமாகிறதே. இல்லையா?"

"ஆமாம் கலியாணமா? தங்கைக்கு அகத்துக்காரர் வரப்போகிருரா?"

"கலியாணம். நீ வந்ததைப்பற்றி ரொம்ப சந்தோஷம். எங்கே வராமலிருந்து விடுவாயோ வென்று பயந்துகொண்டிருந்தேன்."

"மாமியார்கூட வரச்சரிப்படவில்லை என்று எழுதியிக்கும்பொழுது நாங்கள் வராமலிருப்போமோ! ஊரிலிருந்து கலியாணத்திற்காக யார் யார் வந்திருக்கிருர்கள்?"

"கிட்டதட்ட நம்ம உறவு எல்லாரும் வந்திருக்கிருர்கள். இந்த வீடு போராதென்று ஒவ்வொரு குடும்பத்திற்கும் தனித் தனியாக ஒழித்துவிட்டிருக்கிறது. உங்களுக்காக அடுத்த வீடு காலியாக வைத்திருக்கு."

"உங்கள் பெரியம்மா வந்திருக்கிருரா!"

"உம். பெண், நாட்டுப்பெண், அகத்துக்காரர் ஸஹிதமாக.

"அத்தை?"

"அத்தைகள் இரண்டுபேரும் வந்திருக்கிருர்கள். காவேரிக்குப் போயிருக்கிருர்கள். குட்டி உள்ளூரிலேயேதான் இருக்கிருள். அவளுக்கு அடுத்த மாஸம் பூச்சூட்டலாம். வா, உள்ளே வா. எத்தனையோ சமாசாரங்களிருக்கின்றன. சாவகாசமாக உட்கார்ந்து பேசலாம்."

"ஆகா. இந்தமாதிரிக் கலியாண ஸமயங்களில் தானே நாம் சந்திக்கிறேம்" என்று சொல்லிக் கொண்டே ஸரோஜாவும் அவளுக்கு நாத்தனார் முறையாக வேண்டிய கமலாவும் உள்ளே சென்ருர்கள்.

முன் நடந்த சம்பாஷணையிலிருந்து விளங்குவதுபோல் சீமாவும் ஸரோஜாவும் கும்பகோணத்தில் சீமாவின் பெரிய தகப்பனர் பெண்ணின் கலியாணத்திற்காக வந்திருக்கிருர்கள். போன அத்தியாயத்தில் கூறிய சம்பாஷணை நடந்து நான்கு மாதங்களாகின்றன. சீமாவும் ஸரோஜாவும் அதிகமாக ஒருவரோடொருவர் பேசுவதில்லை. சீமா மானி. எப்பொழுது தன் அகமுடையாள் தன்பேரில் காதல் இல்லை என்று சொன்னளோ, அன்று முதல் அவளருகில் செல்லுவதேயில்லை; பேசுவதுமில்லை. "சாப்பிடவில்லையா?" என்று ஸரோஜா கேட்டால் "வந்துவிட்டேன்" என்று சொல்லுவான். இதே மாதிரிதான் ஏதாவது அவசியமாக வேண்டியிருந்தால் பேச்சு; இல்லாவிடில் ஒன்றும் கிடையாது. இருவரும் தனித்தனி அறையில்தான் படுக்கை. சாதாரணமாக மற்றவர்களுக்கு இவர்கள் நடத்தையில் புதிதாக ஒன்றும் தோன்றவில்லை. மாடியில் தனியாகப் படுத்திருப்பது யாருக்குத் தெரியும்.

உள்ளே சென்ற ஸரோஜா காலை சிற்றுண்டியருந்திவிட்டு எல்லாருடனும் சுருக்கமாக ஒரு மணி நேரம் பேசிவிட்டு தங்களுக்காக ஏற்படுத்தியிருக்கும் ஜாகைக்கு ஸ்நாநம் செய்யப்போனள். அவ்விடத்தில் ஏற்கெனவே ஒரு வேலையாள் சாமான்களைக் கொண்டுவந்து வைத்திருந்தான். அவ்வீட்டு சொந்தக்காரர்கள் கலியாணத்திற்கு வருபவர்களுக்காகவென்று கூடத்தையும் குளிக்குமிடத்தையும் ஒரு அறையையும் மட்டும் ஒழித்துவிட்டு மற்ற இடங்களை பூட்டிக்கொண்டு போய்விட்டார்கள். சீமா ஸரோஜாவிற்கு முன்பே வந்து ஸ்நாநம் செய்துவிட்டுப் போய்விட்டான். ஸரோஜா பெட்டியைத் திறந்து புடவையை எடுத்துக் கொண்டுபோய் ஸ்நாநம் செய்துவிட்டு வந்தாள். உடனே கலியாண வீட்டிற்குச் சென்ருள். அங்கே கூடத்தில் பெண்டுகளெல்லாரும் உட்கார்ந்து பேசிக் கொண்டிருந்தார்கள். ஸரோஜாவைக் கண்டதும் "வா, உட்கார்ந்து கொள்" என்று கமலா தன்னருகில் ஓர் இடத்தைக் காண்பித்தாள். அவளும் உட்கார்ந்தாள்.

"ஸரோஜா முன்னைவிட இளைத்திருக்கிருளே, இல்லை? ஏதாவது சமாசாரமுண்டோ?" என்று அத்தை பெண்ணுகிய குட்டி கொஞ்சம் புன்சிரிப்புடன் கேட்டாள்.

"என் குட்டியக்கா, பூச்சூட்டல் சாப்பாடு எப்பொழுது?"

"தன்னைப்போல் மற்றவர்களையும் எண்ணிவிட்டாற் போலிருக்கிறது. அம்மாதிரி எல்லாம் என்னிடம் ஒன்றும் கிடையாது" என்று சிரித்துக்கொண்டே ஸரோஜா பரிகஸித்தாள். குட்டி வெட்கி தலை குனிந்தாள்.

"ஆமாம் ஸரோஜா உடம்பு இளைத்துத்தான் இருக்கிறது. சீமா அதற்கு மேலிருக்கிருன். துரும்பாக ஆகிவிட்டது உடம்பு. என் ஓர்ப்படி அடிக்கடி அவர்களைப் போய்ப் பார்ப்பதில்லை. பெரியவர்கள் மேல் பார்வையில்லாமல் சமையல்காரன் பண்ணிப்போட்டதை சாப்பிட்டு காப்பித் தண்ணியை குடித்துவிட்டு இரண்டும்

இப்படி யிருக்கிறதுகள்'' என்றார் ஸரோஜாவின் பெரிய மாமியார்.

"ஏன் அவர்கள் பரஸ்பரம் விஜாரித்துக் கொள்ளுவதுதானே. இவள் அவனுக்கு உபசாரம் பண்ணுவது. அவன் இவளுக்கு உபசாரம் பண்ணுவது'' என்றாள் கமலா.

"என்னமோ சிறுசுகள். சீமாவைப்போல் சாது இந்தப் பிருதிவியிலும் கிடையாது. என்ன குணம்? என்ன சமத்து? இந்தக் காலத்தில் குணமிருந்தால் சமத்திருக்காது. சமத்திருந்தால் குணமிருக்காது. தான் ஆகாசத்திலிருந்து துள்ளிக் குதித்ததாக எண்ணிக்கொண்டு விடுங்கள். சீமாவுக்கு இரண்டு மிருக்கிறது'' என்றார் அத்தை. அதற்குள் புருஷர்கள் சாப்பாடு முடியவே சீமா கையலம்பிவிட்டு அவ்விடம் வந்தான்.

"பெரியம்மா, வெற்றிலை பாக்கு வேண்டுமாம்.''

"இதோ நான் போய் எடுத்துக் கொடுக்கிறேன்'' என்று பெரியம்மா எழுந்து சென்றார்.

ஸரோஜாவும் அத்தை நாட்டுப் பெண்ணும் சீமாவைக் கண்டதும் எழுந்து அடுத்த அறையில் போய் உட்கார்ந்துகொண்டார்கள்.

"என்ன சீமா, உட்கார்ந்து கொள்ளு. உன் அகமுடையாள் உன்னைக் கவனிக்காமல் உன் உடம்பு துரும்பாகவும் நீ அவளைக் கவனிக்காமல் அவள் உடம்புக்குச் சமமாகவும் போய்விட்டதென்று அம்மா சொல்லுகிறாள்'' என்று கமலா வினவினள்.

"சரிதான். உன்னைப்போல் அகத்துக்காரர் பைத்தியமாக ஒருவரும் இருக்க மாட்டார்கள். அவரை இன்றைக்குப் பார்க்கிறேன். அடையாளமே தெரியவில்லை. (கமலா அகத்துக்காரர் 180 பவுண்டு எடையுள்ள கனவான்'') என்று சிரித்தான். சீமா "என்ன ஸார் என்கிறேன்.'' வயிற்றைத் தடவிக்கொண்டு "வேலைத் தொந்திரவு. பந்தாட்டமே கிடையாது'' என்று சொல்லுகிறார். அடே, அப்பா!''

இதைக் கேட்டதும் எல்லோரும் கொல்லென்று சிரித்தார்கள். கமலாவிற்கு வெட்கம் ஒரு புறமும், ரோஸம் ஒரு புறமுமாக வந்தது.

"ஏண்டிம்மா, அவருக்கு நீ சிசுருஷை செய்வதில் நூறில் ஒரு பங்கு எனக்கு நடந்தால் கூட நானும் அப்படி யாகிவிடுவேன். அவர் பேரில் என்ன குற்றம்!'' என்று அவன் சொல்லும் பொழுதே அவனையும் அறியாமல் ஒரு பெருமூச்சு வந்தது.

"ஆமாம், சீமா ரொம்ப அநியாயம். நானும் பார்த்துக்கொண்டே யிருக்கிறேன். நிமிஷத்திற்கு நிமிஷம் அம்மாள் மறைந்துவிடுவாள். உள்ளே போனால் "மாப்பிளைக்கு காபி கொடுத்தாய்விட்டதா? மாப்பிளைக்கு பலகாரம் அனுப்பியாய்விட்டதா'' இதே விசாரம். "ரங்கு அத்திம்பேருக்கு என்னவேணும் விஜாரி ராஜம். அத்திம்பேர் தனியாக யிருக்கிறார். சற்றுப்போய் பாரு.'' அப்பா! நானும் பொறுத்துப் பொறுத்துப் பார்க்கிறேன். என்னாலும் பொறுக்கமுடியவில்லை'' என்று சீமா பக்கம் சேர்ந்துகொண்டு கமலாவைக் கேலி செய்தாள் குட்டி.

கமலாவிற்கு பொறுக்க முடியவில்லை. "ஆமாண்டி அம்மா, நீ ரொம்ப ஸாது. சீமா, அடுத்த மாஸம் பூச்சூட்டல் தெரியுமோல்லியோ?'' என்று கேட்டாள்.

"என்ன, என்ன குட்டி நிஜமா? பேஷ். சரிதான். சீமந்த சாப்பாடு ஒன்றிருக்கிறது. எங்கேயவர் மாப்பிள்ளை, அதுதான் பூனையைப்போல் பேசாமலிருக்கிறார். நான் என்னமோ என்றல்லவோ யிருந்தேன்.''

இதற்குள் அத்தை பொருவள் வினவினள். "ஏண்டி கமலா, சீமாவும் ஸரோஜாவும் எப்படி? ஸஹஜமாகத்தானே யிருப்பார்கள்?''

"என்னமோ, எனக்குத் தெரியாது. இரண்டு பேரும் ரொம்ப வெட்கப்படுகிறார்களென்று சித்தி சொன்னாள். அவர்கள் ஒருவரோடொருவர் பேசிக் கண்டதேயில்லையாம். சீமா காலமே வந்தானே. தானே பெட்டியைத் திறந்து வேண்டிய துணிகளை எடுத்துக் கொண்டுபோய் ஸ்நாநம் செய்துவிட்டு வந்தான். ஸரோஜா தன் காரியத்தைத் தான் பார்த்துக்கொண்டாள்.''

"இல்லாவிடில் உங்களிருவரையும்போல ஏது சாக்கு அகப்படுமென்று ஒளிந்து பேசச் சொல்லுகிறாயோ. குளிக்கவேண்டுமானால் அகமுடையாள் தயவை எதிர்பார்க்கவேண்டும். பணம் வேண்டுமானால் அகத்துக்காரர் தயவு. மூலையில் ஸதா குசுகுசுவென்று பேசுவது.''

"இவன் பேசி நான் பார்க்கவேண்டும் போலிருக்கிறதே'' என்றாள் ஆசைக்காரியான அத்தை.

"ஆகட்டும் அத்தை. எல்லாம் நான் ஏற்பாடு செய்கிறேன். வெளிக்கு பாசாங்கு செய்கிறானே

தவிர உள்ளுக்குள் சீமாவுக்கு ரொம்ப ஆசை'' எனக் கமலா கூறினாள்.

"கமலா, அதோ பார் உங்க அகத்துக்காரர் தேடுகிறார். சாப்பாட்டு சிரமபரிஹாரத்தை செய்துவிட்டுவா. நான்போய் குட்டி அகத்துக்காரரைப் பார்க்கிறேன்'' என்று சீமா எழுந்துசென்றான்.

பக்கத்து அறையிலிருந்து ஸரோஜாவும் அத்தை நாட்டுப்பெண்ணும் (அவளை அங்கிருப்பவர்களெல்லாம் அத்தை நாட்டுப் பெண் என்று கூப்பிட்டார்களாகையால் நாமும் அப்படியே கூப்பிடுவோம்) வெளிவந்தார்கள்.

"வாருங்கள், குட்டிகளா! எல்லாரும் சாப்பிட வாருங்கள், அத்தையம்மா வாருங்கள்'' என்று பெரியம்மா கூப்பிட்டார். எல்லாரும் எழுந்திருந்து சாப்பிடச் சென்றார்கள்.

சாப்பாடு ஆனதும் குட்டி "சீமா, சற்று இங்கேவா. மாடிக்குப் போகலாம். நாமிருவரும் சிறுவர்களாக யிருக்கும்பொழுது சேர்ந்து விளையாடினோமே. ஞாபகமிருக்கிறதா?'' என்று கேட்டுக்கொண்டே அவனை மாடிக்கு அழைத்துக்கொண்டுப் போய்விட்டாள்.

"குட்டியும் சீமாவும் பிரியவே மாட்டார்கள். யாரைக் கலியாணம் பண்ணிக்கொள்ளப் போகிறாயென்று குட்டியைக் கேட்டால் சீமாவைத்தான் என்பாள்'' என்று சொன்னாள் அத்தை.

பெண்டுகளெல்லாரும் வெற்றிலை போட்டுக்கொண்டுப் பேசிக்கொண் டிருந்தார்கள்.

III

மூன்று நாள் கலியாண மாகிவிட்டது. ஸரோஜா எல்லாருடனும் ஸஹஜமாகப் பேசிக்கொண்டிருந்தபோதிலும் அவளுக்கு மனதில் ஏதோ கலவ மிருந்துகொண்டே யிருந்தது. அடிக்கடி தலையை வலிக்கிற தென்று தனியாக தனக்கென்று ஏற்பட்டுள்ள வசதியில் போய் உட்கார்ந்திருப்பாள். அகாரணமாக அவள் கண்களிலிருந்து ஜலம் தளும்பும். கலியாணக் குழப்பத்தில் இவளை ஒருவரும் அதிகமாகக் கவனிக்கவில்லை. இவள் இம்மாதிரி இருப்பதற்கும் சீமாவும் குட்டியும் தன் பாலிய சிநேகத்தை புதிப்பித்துக்கொண்டதற்கும் ஏதாகிலும் சம்பந்தமுண்டோ?

சீமா கண்களில் அகப்படுவதே யில்லை. சாப்பாடு வேளைகளில் தவிர, மீதி வேளைகளில் குட்டியும் சீமாவும் மாடியிலேயே தனித்து ஏதோ பேசிக்கொண்டே யிருப்பார்கள். பாலிய கதைகள் போதும். இல்லாவிடில் "எங்காத்துக்கு வாயேன்'' என்று அவனை தன் வீட்டிற்கு அழைத்துக் கொண்டு போய்விடுவள். குட்டி அகத்துக்காரர் கும்பகோணம் காலேஜில் உபாத்தியாயராக யிருக்கிறார். குட்டி மிகவும் அழகு வாய்ந்தவள். ஏற்கெனவே நல்ல வர்ணமான அவள் உடம்பு தற்சமயம் நன்றாக வெளுத்து பளபளவென்றிருந்தது. தாயாராகப் போகிறோம் என்ற உணர்ச்சியானது முகத்தில் ஒருவிதமான சோபையைக் கொடுத்து கண்டோர் மயங்கும்படி யிருந்தது.

"என்ன, கமலா, ஏதோ ஏற்பாடு பண்ணுகிறேன் என்றாயே'' என்று அத்தையம்மா கமலாவைத் தூண்டிவிட்டார்.

"எதைப்பற்றி?''

"சீமாவைப்பற்றி.''

"ஓகோ, அதற்கா ஆகட்டும். இன்று மத்தியானம் செய்கிறேன். சாப்பாடு ஆனதும் வேடிக்கை பண்ணிவிடுகிறேன்.''

அப்படியே இவர்கள் இருவரும் ஏற்பாடு செய்துவிட்டார்கள். குட்டி அன்றையதினம் கலியாண வீட்டிற்கு வரவேயில்லை. பெண்டுகள்கள் சாப்பாடு ஆனதும் கூடத்தில் உட்கார்ந்திருந்தார்கள். சீமா எங்கேயோ வெளியில் போகப் புறப்படுவதைக் கண்ட கமலா "சீமா, சற்று இங்கேவா. ஒரு சமாசாரம்'' என்று கூப்பிட்டாள்.

"என்னது? எனக்கு அவஸர காரியமிருக்கிறது.''

"இங்கே எல்லாரும் இருக்கிறார்கள். மாடிக்கு போ. இதோ வந்துவிட்டேன்'' என்று காதில் ரகசியமாகச் சொல்லவே அவன் சரியென்று மாடிக்குப் போனான். உடனே கமலா கண்சிமிட்டி அத்தைக்கு ஜாடை காண்பித்துவிட்டு தானும் போய் ஏதோ சமாசாரம் பேச்சுக்கொடுத்துக் கொண்டிருந்தாள் சீமாவுடன்.

அத்தை மெதுவாக "ஸரோஜா, சற்று மாடிக்கு வாயேன். எனக்கு ஏறத் தள்ளவில்லை. என் கையைப் பிடித்துக்கொண்டுவா. மாடி அறைகளெல்லாம் நான் பார்க்கவேண்டும்'' என்றாள்.

"யாராவது புருஷர்கள் இருப்பார்களோ'' என்று ஸரோஜா சங்கித்தாள்.

"அதெல்லாம் ஒருவரும் இருக்கமாட்டார்கள். சற்றுவா'' என்று கூப்பிட்டுக் கொண்டு போனாள். அங்கே போனதும் கமலா உள்ளிருந்து வெளிவந்தாள். உடனே அத்தையும் கமலாவு

ஆற்றி னிலைதளர்ந் தற்றே வியன்புல மேற்றுணர்வார் முன்ன ரிழுக்கு.

மாக ஸரோஜாவை உள்ளே தள்ளி கதவை இழுத்து சங்கிலி யிட்டுவிட்டார்கள். வெளியில் கைதட்டி கேலி செய்துவிட்டு இருவரும் கீழே போய்விட்டார்கள்.

உள்ளே போன ஸரோஜா என்ன சமாசாரமென்று தெரியாமல் விழித்தாள். பிறகு சாளரத்தண்டை சீமா நிற்பதைக் கண்டாள். இவர்கள் செய்த சூழ்ச்சி தெரிந்தது. அவளை அறியாமலே புன்னகை வந்தது. வெட்கமென்பதை யறியாத ஸரோஜா அப்பொழுது சீமாவைக் கண்டதும் வெட்கி தலைகுனிந்தாள்.

சீமா ஸரோஜாவை உள்ளே தள்ளிவிட்டு கமலா கதவைத் தாளிட்டதைக் கண்ட உடனே அவஸரமாகப் போய் கதவை இடித்தான். இழுத்துப் பார்த்தான்; ஒன்றும் பிரயோசன மில்லை. புருஷர்களெல்லாம் வாசல் பந்தலில் சீட்டுக் கச்சேரி போட்டுவிட்டார்கள். பெண்டுகளெல்லாம் கூடத்தில் உட்கார்ந்து வெற்றிலை போட்டுக் கொண்டு வம்பு அளந்து கொண்டிருந்தார்கள். சீமா கதவைப் படேலென்று உதைத்தான். "கமலா! கதவைத் திற. உன் அகத்துக்காரரிடம் சொல்லுகிறேன் பார். என்ன விளையாட்டு ஜாஸ்தியாகிவிட்டது!"

கமலா பதில் சொன்னாளில்லை. அவள் மனதில் எண்ணினாளோ என்னமோ, ஸரோஜாவின் முகம் குன்றிற்று. ஜன்னலண்டை பேசாமல் போய் நின்றாள்.

"அத்தை சற்று கதவைத் திறவேன். எனக்கு ரொம்ப அவஸரமான காரியமிருக்கிறது. கமலா, கதவைத் திறக்கிறாயா, உடைக்கட்டுமா?" என்று கதவிற்கு பலமாக இரண்டு உதை கொடுத்தான்.

கூடத்தில் பேசிக்கொண்டிருந்த பெரியம்மா என்ன ஸமாசாரமென்று கேட்டார். மற்றவர்களுக்கெல்லாம் கமலா வேடிக்கை பண்ணிவிட்டது தெரியுமானாலும் பெரியம்மாவிடம் சொன்னால் அவர் சம்மதிக்கமாட்டாரென்று சொல்லாமலிருந்தார்கள். கதவை இடித்த ஓசை என்னவென்று கேட்கவே, பட்டு என்ற சிறிய பெண் "அம்மாமி, உங்க சீமாவையும் ஸரோஜாவையும் கமலா உள்ளே விட்டு கதவை சாற்றிவிட்டாள். சீமா மாமா கதவை இடிக்கிறார்" என்றாள்.

பெரியம்மா உடனே, "நன்றா யிருக்குதடி, பெண்களா அவர்கள்? என்ன, முன்பின் பேசாதவர்களா? பார்க்காதவர்களா? நன்னா உள்ளே தள்ளி கதவைச் சாத்தினாப். ஏ, ரெங்கு. மாடிக்குப்போய் கதவைத் திறந்து விட்டுவா" என்று அவ்வழியே போய்க் கொண்டிருந்த தன் பிள்ளையைப்பார்த்து சொன்னாள்.

ரங்கு உடனே மாடிக்குப்போய் கதவைத் திறந்து விட்டு வந்தான். சீமா தன் அகமுடையாளைத் திரும்பிக்கூட பார்க்காமல் ஒரே தாவலில் மாடியை விட்டிறங்கிப் போய்விட்டான்.

ஸரோஜா மெதுவாக கீழே யிறங்கி வந்தாள். எல்லாரும் நம்மைக் கேலி செய்வார்கள். நாம் சிரித்தமுகமாக யிருக்க வேண்டுமென்று தீர்மானித்தாள்.

"என்ன ஸரோஜா, எங்கே இத்தனைநாழிகை! கண்ணிலேயே காணோமே?" என்று ஒன்றும் தெரியாதவள்போல் கமலா வினவினாள். (இவள் இவர்களை உள்ளேவிட்டு வந்து பத்து நிமிஷங்கள்கூட இருக்காது. அதற்குத்தான் இத்தனை நாழிகை.)

"போடி, அவளுக்கு எத்தனையோ காரியமிருக்கும். இப்பொழுது யாரோ கீழே யிறங்கி வந்தார்களே யாரது? சீமாவா?" என்று பரிவது போல் பாசாங்குசெய்து சிரித்தாள் ஒருவள்.

"எப்போ? ஸரோஜாவோடு வந்ததா? ஏன் ஸரோஜா, உன்னோடு சீமாதானே இறங்கி வந்தான். இதற்கு கேள்வி என்ன?"

"ரங்கு, சீமாவை அம்மா கூப்பிடுகிறாளென்று கூப்பிடு. அவசர காரியமென்று சொல்லு" என்று தம்பியை கமலா ஏவினாள். சீமாவையும் பரிஹஸிப்போமென்பது அவள் எண்ணம்.

"யாரு, சீமாவா! சீமா அப்பொழுதே வண்டியிலேறி குட்டியாத்திற்குப் போய்விட்டானே" என்றான் ரங்கு.

ஸரோஜாவிற்குத் திடீரென்று வெறுப்பு வந்துவிட்டது. ஒன்றும் பிடிக்கவில்லை. எழுந்திருந்து அடுத்த வீட்டிற்குப்போய் படுத்துக்கொண்டாள். இவளையும் அறியாமல் தாங்கவொணாத் துயரம் வந்து நெஞ்சை அடைத்தது. விம்மி, விம்மி, அழ வாரம்பித்தாள். ஐயோ, பாவம், என்ன துயரம். யானை தன் தலையில் தானே மண்ணை வாரிப் போட்டுக்கொள்வதுபோல் தானே வரவழைத்துக் கொண்ட துன்பமன்றோ! பெண்மணி, காதல் என்றால் தெரியாது என்றனையே, இப்பொழுது தெரிந்ததோ? சீமாவோடு பேசுவதும் விளையாடுவதும், சந்தோஷிப்பதும் சாதாரணமென்றெண்ணினாயே? அவன் உன் பேரில் வைத்திருந்த பிரியமெல்லாம் அறியாமலிருந்

தாயே. துக்கப்படு; துக்கத்தினால்தான் உனக்கு அறிவு வரும். வெய்யலில் இருந்தவர்களுக்கல்லவோ நிழலின் அருமை தெரியும். இப்பொழுதல்லவோ அவ்வுத்தமன் குணமெல்லாம் தெரிகிறது. இப்பொழுதல்லவோ அவனைக் கண்டால் உன் கண்கள் குளிருகின்றன. அவன் பேச்சைக் கேட்டால் உனக்கு இனிமையான சங்கீதத்தைக் கேட்பது போலிருக்கிறது. முன்பு அவன் நாள் முழுவதும் உன்னோடு பேசினாலும் அலட்சியமாகயிருப்பாயே, இப்பொழுது அவன் உன்னிடம் ஒரு வார்த்தை பேசினாலும் அது மறுபடியும் உன் காதில் ஒலித்துக் கொண்டிருக்கிறதல்லவா? இதுதான் காதல். காதலினால் படும் கஷ்டத்தை அனுபவிக்க வேண்டுமென்றாயே. காதலன் வரவை ஆவலுடன் எதிர்பார்க்க இச்சித்தாயே! எதிர்பார்த்துக்கொண்டே இரு. எப்பொழுது வருவான் அக்கண்ணுக்கினிய காதலன்,

IV

அன்றையதினம் சாயந்திரம் அம்மான் ஊர்வலத்திற்கு வரவேண்டுமென்று ஸரோஜாவைக் கூப்பிட்டார்கள். "தலைவலியா யிருக்கிறபடியால் வரவில்லை" என்று சொல்லிவிட்டாள். மற்றவர்களெல்லாரும் போய்விட்டார்கள். பெரியம்மா மட்டில் கலியாணம் விசாரிக்க வருபவர்களை உபசரிக்கவேண்டுமென்று கூடத்தில் தனியாக உட்கார்ந்திருந்தாள். ஸரோஜாவைக் கூப்பிட்டுக் கொண்டு வரும்படி ஆளனுப்பினாள். ஸரோஜா வந்ததும் "வாடியம்மா! உட்கார்ந்துகொள். தலைவலி எப்படி யிருக்கிறது. என்ன, முகத்தைப் பார்க்கவே முடியவில்லையே. என்ன அலங்கோலம். தலைக்கு மருந்து தடவட்டுமா?" என்று ஆதரவுடன் கேட்டாள் பெரியம்மா.

"ஒன்றுமில்லை, அம்மா. இப்பொழுது சற்று தேவலை."

"தேவலையா? ஆனால் தலையைப் பின்னட்டுமா?" என்று சீப்பை எடுத்துத் தலையை வாரத் தொடங்கினாள். அப்பொழுது குட்டி வந்தாள்.

"நன்றாயிருக்கு, குட்டி கண்ணிலேயே காணோம். ஆகட்டும் உனக்கு நாளைக்கு சீமந்தம் நடந்தால் நாங்கள் வருகிறோமா பார். சாப்பிடக் கூட வரவில்லை.

"என்ன சொல்லுகிறது. அம்மாமி ஆத்தில் ரொம்ப காரியமிருந்தது. என்னமோ பெரியவர்கள் ஆசீர்வாதம் தான் எங்களுக்கு இந்த மட்டும் கொடுத்து வைத்திருக்கிறது. சீமாவைப்போல் உபகாரி நான் பார்த்ததேயில்லை." என்று குட்டி சொல்லிக்கொண்டே உட்கார்ந்தாள்.

"ஏன், என்ன சமாசாரம்! எல்லாம் விபரமாகச் சொல்லு."

"என்ன சமாசாரமா? வெளியிற் சொல்லமுடியாத சமாசாரமாக யிருக்கிறது. ஆனால் உங்களிடம் சொல்லாமல் வேறு யாரிடம் சொல்லப்போகிறேன். எங்கள் மாமனார் செத்துப்போய் ஆறு மாஸம் ஆச்சு உனக்கு தெரியுமோல்லையோ? அதுமுதல் சண்டைதான். கடன் ரொம்பவும் வைத்துவிட்டார். அதில் எங்க அகத்துக்காரருக்கு தம்பியை யாரோ தூண்டிவிட்டு எல்லாக் கடனுக்கும் காரணம் எங்க அகத்துக்காரர், அவருக்கு கலியாணம் செய்து, படிக்கவைத்த செலவினால்தான். அதனால் எல்லாவற்றையும் அவர்தான் ஏற்றுக்கொள்ள வேண்டியது. சொத்தில் மட்டும் தனக்கு சரிபாதி பங்கு வேண்டுமென்று கேட்கச் சொன்னார்கள். இதனடுவில் கடன்காரர்கள் வீட்டை ஏலம்போட வந்து விட்டார்கள். குட்டிக்கு கண்கள் கலங்கின. இது சமாசாரம் தான். சீமா இங்கே வந்தவுடனேயே அவனிடம் இது சங்கதிகளெல்லாம் சொல்லி, சற்று ஒத்தாசை செய் என்று வேண்டிக்கொண்டேன். என் அகத்துக்காரருக்கு சட்ட விஷயத்தைப் பற்றி ஒன்றுமே தெரியாது. சீமாதான் நான்கு நாளாக அலைந்து ஏற்பாடு செய்து வீட்டை தான் வாங்கி கடன்காரர்களை திருப்தி செய்வதாகவும் பிற்பாடு சாவகாசமாக நமக்குள் ஒத்துக்கொள்ளலாமென்றும் செய்து இப்பொழுதுதான் எல்லாம் முடிவிற்கு வந்தது. இன்று மத்தியானமெல்லாம் அங்கேதான் என் மைத்துனரிடம் நல்ல வார்த்தை சொல்லி சமாதானம் செய்து வைத்தான். அடே அப்பா, அவன் வாய்ச்சாதுர்யமும் சாமர்த்தியமும் யாருக்கு வரும். என்ன நயமாகப்பேசி கடன்காரர்களை பொறுத்துக்கொள்ளச் சொன்னான். என்னமோ அவன் புண்ணியத்தில் நாங்கள் இருக்கிறோம். சீக்கிரம் அவனுக்கு ஒரு குழந்தை பிறந்து சந்தோஷமாக யிருக்கவேண்டும்" என்று பெரிய கதையாகச் சொல்லிமுடித்தாள் குட்டி.

"ஓஹோ. அப்படியா, எதுவோ அரைகுறையாக என் காதில்பட்டது. முழு சமாசாரமும் தெரியாது. என்ன சொன்னாலும் சீமா தங்கமான பிள்ளைதான்" என்றாள் பெரியம்மா.

ஸரோஜாவிற்கு மனதில் ஒரு குதூஹலம் பிறந்தது. அதற்குக் காரணம் அவளுக்கே தெரியது. முகத்தில் ஆனந்தம் தாண்டவமாடிற்று.

"என்ன, ஸரோஜா நான் சொல்லுகிறது தெரிந்ததா? சின்னம்மாமிக்கு சீக்கிரம் பேரன் வேண்டுமாம்." என்று சிரித்தாள் குட்டி.

"குட்டியக்காவிற்கு வேறு பேச்சுதெரியாது" வெட்கித் தலைகுனிந்தாள் ஸரோஜா.

"ஏண்டியம்மா, தலைவலி தேவலையா. முகத்தைத் துடைத்து நெற்றிக்குப் பொட்டு இட்டுக் கொள்ளு. பாவம். தலைவலியினால்தானே என்னமோ உடம்பு இப்படி யிருக்கிறது. ஏதாவது தகுந்த வைத்தியம் செய்யவேண்டும்" பெரியம்மா தலையை பின்னி முடியிட்டுவிட்டுச்சென்றார்.

"இப்பொழுது ஒன்றுமில்லை" என்று எழுந்திருந்து பெரியம்மாவை ஸேவித்தாள்.

"எதற்காக ஸேவை? தலை பின்னிவிட்டதற்காகவா? அது கர்நாடக வழக்கமாச்சே. தாயிட தந்தையிட எல்லாருக்கும் செல்லப் பெண்ணாகயிரு" என்று ஆசீர்வாதம் செய்தாள் பெரியம்மா.

த்ரயோதசி சந்திரன் நன்றாகப் பிரகாசித்துக் கொண்டிருந்தது. வேலைக்காரன் விளக்குக் கொண்டு வந்ததை "அடுத்த அறையில் வை. இங்கே நிலா வெளிச்சம் போதும்" என்றாள். ஸரோஜா கூடத்தில் முற்றத்தின் ஓரத்தில் உட்கார்ந்து ஆகாயத்தை நோக்கினாள். அவள் முகத்தினழகு சந்திர காந்தியைப் பழிப்பதுபோ லிருந்தது. கடந்த நான்கு மாதங்களாக நடந்த சம்பவமெல்லாம் ஒன்றின்பின் ஒன்றாக அவள் மனதில் தோன்றின. குட்டியிடம் தன் அகத்துக்காரர் சிநேகிதமாக யிருக்கிறார் என்று சங்கித்த தன்னை நொந்துகொண்டாள். அக்காரணத்தால் வீண் வியாகூலமடைந்திருந்த அவளுக்கு குட்டி சமாசாரங்களைச் சொன்னதும் மனதில் குதூஹலம் உண்டானபோதிலும் தான் அவரோடு கூடி ஸஹஜமாக யில்லாமல் இப்படியிருக்கிறோமே யென்று மிகவும் வருத்தமாக யிருந்தது. வெட்கத்தைவிட்டு தன் நிலைமையை அவருடன் சொல்லுவதற்கும் கூச்சமா யிருந்தது.

யாரோ வருகிற சப்தம் கேட்டது.

"ஸரோ! என்ன நீ தலைவலியென்று ரொம்ப கஷ்டப்படுகிறாயாமே. பெரியம்மா நான் கவனிக்க வில்லையென்று கோபித்துக் கொள்ளுகிறாள். என்னிடம் சொல்லக்கூடாதா?" என்று கேட்டுக்கொண்டு அருகில் வந்து உட்கார்ந்தான் சீமா.

நான்கு மாதமாக தன்னை "ஸரோ" என்று கூப்பிடாமல் இருந்தவர் தன்னருகில் வந்து உட்கார்ந்து அப்படி கேட்டதும் ஸரோஜா சந்தோஷத்தை கேட்கவேண்டுமா?

"ஒன்றுமில்லை. அப்பொழுது ஏதோ கொஞ்சம் வலித்த மாதிரியிருந்தது. பெரியம்மா என் பேரில் வைத்த பிரியத்தால் அப்படிச் சொல்லுகிறார்.

அந்நிலவு வெளிச்சத்தில் விரகதாபத்தால் பீடிக்கப்பட்ட சீமாவின் முகம் பரிதாபகரமாக விருந்தது.

"ஐயோ, ஸரோஜா, என்னால் தாங்கமுடிவில்லையே, என் கண்ணே உனக்கு நான் என்ன செய்தால் என்பேரில் காதலுண்டாகும்? சொல்லேன், அதைச் செய்கிறேன். நானும் மனிதன் தானே. உன் அழகை தினந்தோறும் பார்த்து எப்படி ஸஹிப்பேன். என் மனத்தை கலியாண தினத்தன்றே கொள்ளைகொண்ட நீ நாளுக்கு நாள் இளைத்துப் போவதை எப்படிப் பொறுப்பேன்" என்று அடங்கொணு ஆசையுடன் அவளை அணைத்து முத்தமிட்டான்.

"அடி, ஸரோ; சொல்லடி, என்ன பண்ண வேணும் சொல்லு. ஐயோ, உன் வார்த்தையைக் கேட்காமல் என் காது மந்தமாகிவிட்டது. இக் கலியாணத்தில் வந்திருப்பவர்கள் எல்லாரிலும் உனக்கு சமானமானவர் யாராகிலும் உண்டோ என்று பார்த்தேன். ஒருவரையும் காணோமே. சொல்லு, உன் மனதிலிருப்பதைச் சொல்லேன்" என்று அவள் முகத்தை நிமிர்த்திக் கேட்டான்.

ஸரோஜா கண்களில் ஜலம் ததும்பிற்று. ஆனந்த பரவசமானாள். "காதல் என்றால் என்னவென்று தெரிந்துகொள்ள ஆசைப்பட்டேன். அதன் சோக ரஸத்தை நான்கு மாதங்களாய் அனுபவித்தேன். இன்றுதான் அதன் ஆனந்தத்தை அறிகிறேன்."

தான்ஸேன் மஹாராஜ்:—உத்தரதேசத்து ஸங்கீதத்தின் கூடஸ்தர் பாட்டிலும் வாத்தியத்திலும் கவனத்திலும் நிகாற்றவர். ஹரிதாஸ் ஸ்வாமியின் சிஷ்யர். ஆக்பர் சக்ரவர்த்தியின் சமஸ்தான வித்வான். உயிர்த்தோழன் ஸங்கீத வித்யையின் அவதாரமென்றே சொல்லலாம்.

பல்லவர்கள்

THE PALLAVAS

[திருவாளர் T. V. சதாசிவ பண்டாரத்தாரவர்கள்.]

பல்லவர் என்போர் வடநாட்டில் ஆட்சிபுரிந்து கொண்டிருந்த ஓர் அரசகுலத்தினர் ஆவர். இவர்களது பூர்வ வரலாற்றை நன்கு அறிதற்குரிய சாதனங்கள் இப்போது கிடைத்தில. ஆயினும் இதுகாறும் கிடைத்துள்ள பிரமாணங்களைக் கொண்டு அதனைச் சிறிது விளக்குவாம்.

இவர்களைப் பல்ஹவர் எனவும் பல்லவர் எனவும் துளம்பர் எனவும் காடவர் எனவும் போத்தர் எனவும் பழைய நூல்களும் சாசனங்களும் கூறுகின்றன. இவர்கள் பாரசீகத்திற்கும் சிந்து நதிக்கும் இடையிலுள்ள நிலப்பரப்பைப் புராதன நாடாகக் கொண்டவர் என்றும் மிகப் பழைய காலத்திலேயே அங்கிருந்து புறப்பட்டுப் பல்லவநாட்டிற் குடியேறினர் என்றும் ஒரு சாரார் உரைக்கின்றனர். மற்றொரு சாரார் இவர்கள் வேறொரு நாட்டிலிருந்து அங்குப்போய்க் குடியேறினர் என்று கூறுகின்றனர். இஃது எவ்வாறு ஆயினும் இக்கூட்டத்தினர் தமிழர் அல்லர் என்பது திண்ணம். ஆகவே, இவர்கள் வடதிசையினின்றும் புறப்பட்டுத் தென்றிசையிலுள்ள தமிழ்நாட்டிற்புகுந்து அதனைக் கைப்பற்றி ஆட்சி புரிந்தவர்கள் என்பது இனிது புலப்படுகின்றது.

இவர்கள் தம் இயற்பெயரோடு 'வர்மன்' என்ற சிறப்புப் பெயரையும் இணைத்து வழங்கிவந்திருத்தலாலும், க்ஷத்திரியர் என்று சில சாசனங்களில் ஆங்காங்கு சிறப்பாகச் சொல்லப்பட்டிருத்தலாலும், அரசர்களுக்குரிய அசுவமேதம் முதலிய யாகங்கள் செய்திருத்தலாலும் அரசகுலத்தினர் என்று தெரிகிறது. இவர்களது உற்பத்தி எதனிலிருந்து தொடங்கியுள்ளது என்பதைப் புதுச்சேரிக் கருகிலுள்ள பாகூர் என்ற ஊரில் கிடைத்த செப்பேடுகள் புராண முறையில் நன்கு விளக்குகின்றன. அஃதாவது: "எல்லாப் பொருள்களுக்கும் உற்பத்தி ஸ்தானமாயுள்ள திருமாலினது உந்திக் கமலத்திலிருந்து பிரமன் தோன்றினன்; அப்பிரமனிடத்திலிருந்து ஆங்கிரசு தோன்றினன்; அவனிடம் இந்திரனுக்கு அமைச்சனாய் விளங்கிய வியாழன் தோன்றினன்; அவன்பாற் சம்புவும் அச்சம்புவினிடத்துப் பாரத்துவாசனும் தோன்றினர்கள்; பாரத்துவாசனிடம் துரோணன் தோன்றினன்; அவனிடம் அசுவத்தாமன் தோன்றினன்; இவ்வசுவத்தாமன்பால் பல்லவராசன் தோன்றினன்; அவன் உலகிலுள்ளோர் எல்லோரையும் காப்பாற்றினன்" என்பது. இவர்களைச் சம்புவகுலத்தவர் என்றும் பாரத்துவாச கோத்திரத்தினர் என்றும் அறிஞர்கள் கூறுவது இச்சாசனப் பகுதியால் பெரிதும் உறுதியாகின்றது.

இவர்கள் தெற்கில் வந்தபோது தமக்குப் பகைவராய் எதிர்ப்பட்ட சளுக்கியரோடும் தமிழ் வேந்தர்களோடும் நடத்திய போர்கள் அளவற்றனவாகும். மதுரையிலிருந்த கடைச்சங்கப் புலவர்களால் பாடப்பட்டுத் தொகுக்கப் பெற்றுள்ள அகநானூறு புறநானூறு முதலிய சங்க நூற்களில் தமிழ் நாட்டில் செங்கோல் செலுத்திய முடியுடை வேந்தராலும் குறுநில மன்னராலும் பிற அரசராலும் நடத்தப்பட்ட பல போர்ச்செய்திகள் சொல்லப்பட்டிருக்கின்றன. ஆனால் இப்பல்லவர்கள் நடத்திய பெரும் போர்களில் ஒன்றாவது அந்நூற்களில் கூறப்படவில்லை. கடைச்சங்கநாளில் இவர்கள் தமிழ் நாட்டிற் புகுந்து அதனைக் கைப்பற்றிக் கொள்ள போர்புரிந்திருப்பின் அச்செய்திகளைச் சங்கப்புலவர்கள் தம் பாடல்களில் குறித்திருப்பர். அவர்கள் அவ்வாறு செய்யாமையின் இம்மரபினர் கடைச்சங்க காலத்திற்குப் பின்னரே தமிழகம் புகுந்து அதனைக் கைப்பற்றி ஆட்சிபுரிந்தவராதல் வேண்டும் என்பது நன்கு வெளியாகின்றது. மதுரையில் விளங்கிய கடைச்சங்கம் கி. பி. இரண்டாம் நூற்றாண்டோடு முடிவுற்றது. எனவே, அதற்குப் பிறகு தான் இப்பல்லவர்கள் தமிழ்நாடு புகுந்திருத்தல் வேண்டும். தமிழ் நாட்டை முதலில் அரசாளத் தொடங்கியவன் முதல் மகேந்திர வர்மனது தந்தையாகிய சிம்மவிஷ்ணு என்போன். இவன் கி. பி. ஆறாம் நூற்றாண்டின் பிற்பகுதியில் வாழ்ந்தவன். ஆகவே பல்லவர்கள் தமிழ் நாட்டிற்கு வந்தது இக்காலத்தேதான்.

இனி இவர்கள் தெற்கே வந்தபோது தமிழகத்தில் முதலில் எதிர்ப்பட்டது தொண்டை நாடாதலின் அதனைத் தம் படைவலியாலும் போர் வீரத்தாலும் கைப்பற்றிக் காஞ்சியைத் தலைநகராகக் கொண்டு ஆட்சிபுரியத் தொடங்கினர். பின்னர், சிறிது சிறிதாகச் சோழநாடு முழுவதையும் பாண்டி நாட்டின் சில பகுதிகளையும் பற்றிக் கொண்டு அரசாண்டனர். திருஞான சம்பந்தர்,

218
...600 00...

திருநாவுக்கரசர், திருமங்கையாழ்வார் முதலான சமயாசாரியர் திகழ்ந்த காலத்தே நம் தமிழகத்தில் சக்கரவர்த்திகளாக வீற்றிருந்து ஆட்சிபுரிந்தோர் பல்லவர்களே யாவர். இச்செய்தி அப்பெரியோர்களது அருட்பாக்களால் இனிது விளங்கும். இவர்கள் தம் பெருமையைத் தமிழகத்தில் நிலைநாட்டியது கி. பி. 7, 8-ஆம் நூற்றாண்டுகளாகும் என்று கூறுதல் மிகவும் பொருத்தமுடைத்து. இவர்களுள் சிறப்புற்று விளங்கிய அரசர்கள் முதல் மகேந்திரவர்மன், முதல் நரசிங்கவர்மன், முதல் பரமேச்சுரவர்மன், இரண்டாம் நரசிங்கவர்மன், இரண்டாம் பரமேச்சுரவர்மன், நந்திவர்ம பல்லவமல்லன், தந்திவர்மன், தெள்ளாறெறிந்த நந்திவர்மன் என்ற இன்னோரேயாவர். இவர்களுள் முதல் மகேந்திரவர்மன் இப்போது திருச்சிராப்பள்ளியிலுள்ள குகைக்கோயில் குடைந்தவன் என்பர். இவனது புத்திரனே முதல் நரசிங்கவர்மன் என்பான். சிவனடியார் அறுபத்துமூவருள் ஒருவராகிய சிறுத்தொண்டநாயனாரைச் சேனாதிபதியாகக் கொண்டவன் இம்மன்னனே யாவன். இவன் காலத்தே தான் மேலைச் சாளுக்கிய வேந்தனை புலிகேசியினது தலைநகரமாகிய "வாதாபி" நம் சிறுத்தொண்டரால் அழிக்கப் பெற்றது. இரண்டாம் பரமேச்சுரவர்மன் இப்போது காஞ்சிமா நகரில் வைகுந்தப் பெருமாள் கோயில் என்று சொல்லப்படும் பரமேச்சுர விண்ணகரத்தைக் கட்டுவித்தவன். நூற்றெட்டுத் திருப்பதிகளில் ஒன்றாகிய நந்திபுரவிண்ணகரத்தை எடுப்பித்தவன் நந்திவர்ம பல்லவமல்லன் என்பவன். இவ்வேந்தன் மண்ணைக்குடி, வேம்பில், நெல்வேலி முதலான இடங்களில் பெரும் போர்புரிந்து பகைவர்களைத் தோற்றோடச் செய்து 62-ஆண்டுகள் ஆட்சிபுரிந்தனன். இப்பல்லவர்களுள் இறுதி வேந்தனான அபராஜிதன் என்போன் கி. பி. ஒன்பதாம் நூற்றாண்டின் கடைசியில் சோழ அரசனாகிய முதல் ஆதித்தனால் தோற்கடிக்கப்பட்டு நாட்டை இழந்தான். பின்னர் சோழ அரசர்கள் சக்கரவர்த்திகள் ஆயினர். பல்லவர் ஆட்சியும் முடிவுற்றது. ஆயினும் பல்லவர்கள் சிலவிடங்களில் சிற்றரசர்களாகவும் இருந்துள்ளனர்.

மீராபாய்:—(1500) உதயபுர அரசனான கும்பகர்ண மஹாராஜாவின் பார்யை; பக்த சிரோமணி; எண்ணிறந்த கீர்த்தனங்களைச் செய்தவள்.

இரஞ்சிதம்

[ஸ்ரீமான் ஆ. இராமசாமி முதலியார் அவர்கள்.]

முதல் அத்தியாயம்

விவாகப் பேச்சு

முற்காலத்தில் முக்கண்ணனின் திருவிளையாடல்கட்கு இருப்பிடமாயிருந்ததும், எக்காலத்தும் நீர்வள நிலவளங்கள் பொருந்தியிருப்பதும், வைகையாற்றின் பெருமை தங்கியதும், சர்வசக்தி வாய்ந்த ஸ்ரீ மீனாம்பிகையின் திருவாலயத்தைக் கொண்டதும், பாவலராற் புகழப்பெற்றதும், முச்சங்கத்தாற் சிறப்புற்று விளங்கியதும், தற்காலத்தில் பெரிய நகர்களில் ஒன்றாகக் கொண்டாடப்படுவதுமான மதுரைமா நகரிலுள்ள அழகிய தெருக்களில் ஒன்றான வடக்கு மாசி வீதியின் தென்புறம் சிரேணியில் ஒன்றிற்கொன்று உயர்வு தாழ்வில்லாக் கட்டழகு வாய்ந்த மூன்று மாளிகைகள் இருக்கின்றன. இவற்றில் கீழ் புறமாயிருப்பது மளிகை வர்த்தகத்தில் பெருந்திரவியத்தைக் கொண்ட மாணிக்கவாசகம் பிள்ளையின் மாளிகை. மத்தியில் மாண்பமைந்து நிற்பது செல்வச் சீமானான இரத்தினம் பிள்ளையின் இல்லம். மேற்புறத்தில் இருப்பது கப்பல் வியாபாரத்திற் கைதேர்ந்த வீரபத்ர பிள்ளையின் வீடு.

இம்மூன்றில் முதன் முதற் சொன்ன மாளிகையில் நுழைவோமானால் மேல்மாடிக்குச் செல்லக்கூடிய படிக்கட்டொன்று தென்படும். அதின் மீதேறிச் சென்றால் மாடியிலுள்ள கூடத்தின் மத்தியில் சுமார் நாற்பத்தைந்தென்று மதிக்கக்கூடிய வயது வாய்ந்தவரும் கம்பீரத் தோற்றமுள்ளவருமான ஒருவர் சோபாவில் சாய்ந்து கொண்டிருப்பதையும், சுமார் நாற்பது வயதுடையவளும் சுந்தரவதனத்தை உடையவளுமான ஒரு ஸ்திரீ அவருக்குச் சமீபமாகச் சாதாரண நாற்காலியொன்றில் உட்கார்ந்து கொண்டிருப்பதையும் காணலாம். இவர்தான் இம்மாளிகையின் சொந்தக்காரரான மாணிக்கவாசகம் பிள்ளை. அருகிலிருப்பது அவர்தம் அருமைப் பத்தினி குணவதி. இவர்கள் இருவரும் ஏதோ ஒரு முக்கிய விஷயத்தைப் பற்றிப் பேசிக்கொண்டிருப்பதாகத் தோன்றுகிறதாதலின் இவர்களுடைய சம்பாஷணை யாதென்று கவனிப்போம்.

மாணிக்கவாசகம் பிள்ளை:—குணவதி! நம் குழந்தை இரத்தினத்திற்கு இன்னும் இருபது

வகையறிந்து வல்லவை வாய்சோரார் சொல்லின் றொகையறிந்த தூய்மை யவர்.

JL 211, N08VB

ஆண்டுகூடப் பூர்த்தியாகவில்லை, அதற்குள் ஏன் அவனுக்கு விவாகஞ் செய்ய வேண்டுமென்கிருய்? மேலும் அது அவனுடைய கல்விக்கு இடையூருகுமென்று தெரியவில்லையா. இன்னும் ஒன்றிரண்டு வருடங்கள் கடந்தபின் கலியாணம் செய்தாலென்ன?

குணவதி:—நாதா! நமக்கிருப்பது ஒரே குமாரனுதலினுலும் நமக்கும் வயோதிக திசை கிட்டி வருகிறதினுலும் கூடிய சீக்கிரம் அவனுக்கு மணஞ்செய்து அக்கோலத்தை என் கண்குளிரப் பார்க்கவேண்டு மென்ற பிரியம். பின் தங்களிஷ்டம்.

மாணி:—உன் இஷ்டத்தைப் பூர்த்திசெய்ய வேண்டியதும் என்கடமையே யாகும். எனினும் குழந்தையின் கல்வி அபிவிருத்தியையும் கவனிக்க வேண்டியிருக்கிறது. ஆகவே சிறு பெண்ணொன்றைப் பார்த்து விவாகஞ் செய்வோம். உன் மனம் சமாதான மடைந்ததா?

குண:—பிரபு! சந்தோஷமாயிற்று. பெண்ணையும் குறித்து விட்டால் நலமா யிருக்குமென்று நினைக்கிறேன்.

மாணி:—பெண் இன்னதென்று குறித்தபின் முகூர்த்த நாளையும் நிச்சயப் படுத்திவிடுவோம் என்று சொல்வாய் போலிருக்கிறது. பார்ப்போம். நம் நெருங்கிய சுற்றத்தாருள் நமது அந்தஸ்துக்குத் தகுந்ததாயும், சுகுணங்கள் வாய்ந்து இளம் பருவத்தை யுடையதாயும், எந்தப் பெண் இருக்கிறது? ஒன்றையுங் காணேமே!

குண:—நன்ருக யோசித்துப் பாருங்கள்.

மாணி:—நீ சொல்வதைப் பார்த்தால் ஏதோ ஒரு பெண்ணை நிச்சயித்து விட்டாற் போலிருக்கிறது. எனக்குத் தெரிந்தவரைக்கும் எல்லாம் புஷ்பவதியான பெண்களாக இருக்கிருர்களேயன்றி சிறுபெண் ஒன்றுகூட இருப்பதாக எனக்குத் தோன்றவில்லை.

குண:—நாதா! தாங்கள் கூறுவது இடையன், ஆட்டைத் தன் தோளின்மீது போட்டுக்கொண்டு தேடினமாதிரி யிருக்கிறது. நம் குமாரனுக்குத் தகுந்த பெண் நம் வீட்டிலேயே இருக்கும்பொழுது எங்கெங்கோ தேடுகின்றீர்களே.

மாணி:—என்ன நீ சொல்வது விந்தையாக இருக்கிறது! நம் வீட்டில் எந்தப் பெண் இருக்கிருள்?

குண:—நம் வீடல்லாவிடில் அடுத்த வீடு.

மணி:—ஓகோ! உன் தமையன் இரத்தினம் பிள்ளையின் குமாரத்தி இரஞ்சிதத்தைச் சொல்லுகிருயோ. இப்பெண் இருக்கிறது எனக்குத் தெரியாமற்போகவில்லை. இவள் நம் சிறுவனுக்குத் தகுந்தவளே யாவள். எனினும் நீ விஷயந் தெரியாமற் பேசுகின்ருய். உன் அண்ணியார் கனகவல்லி தன் புதல்வியை அவளுடைய தமையன் வீரபத்ர பிள்ளையின் குமாரன் மதனகோபனுக்குக் கொடுக்க வேண்டுமென்று சொன்னதாகவும் அதற்கு உன் தமையனும் இசைந்துவிட்டதாகவும் கேள்விப்பட்டிருக்கிறேன். இதன் மத்தியில் நாம் நுழைவது அவ்வளவு நன்ருக வில்லை. அவ்விதஞ் சென்ருலும் பயன் தரா தென்பது என் அபிப்பிராயம்.

குண:—நாதா! உண்மையில் எனக்கு இந்தச் சங்கதி தெரியாது. ஆனுல் என் தமையன் இவ் விவாகத்திற்குத் தன் முழு மனதுடன் ஒப்புக்கொண்டிருக்க மாட்டார் என்று உறுதியாகச் சொல்வேன். கட் குடியனும், காம விகாரங் கொண்டவனும், தாசிக் கள்ளனும், துர்க்குணங்களெல்லாம் ஒருங்கே வாய்க்கப் பெற்றவனும், துர்ச்சகவாசத்தைக் கைக்கொண்டு துன் மார்க்கத்தில் ஈடுபட்டு நிற்பவனுமான அம்மதன கோபனுக்கு அவர்தம் ஏகபுத்திரியான இரஞ்சிதத்தை மணஞ் செய்துகொடுக்க எட்டுணையும் பிரியங் கொள்ளார் என்பது திண்ணம்.

மாணி:—குணவதி! இருப்பினும் நீ அவனை அவ்வளவு இழிவு படுத்திக் கூறுவது சரியன்று. ஒரு முறையில் அவனும் உனக்கு மகன் ஆக வேண்டுமல்லவா?

குண:—அத்தகைய மகன் எனக் கிருப்பானுல் அவனையும் என் புதல்வனென்று சொல்லிக்கொண் டிருப்பேனு? ஆற்றில் தள்ளிவிட்டு அன்றே எண்ணெய் தேய்த்து முழுகிவிடுவேன்.

மாணி:—நீ அவனை எவ்வளவு தூஷித்துப் பேசினுலும் இயற்கையில் அவன் என்னமோ நற்குணங்கள் வாய்ந்தவனே. திடீரென்று அவன் தந்தை இறக்கவும், அவ்விசனத்தைப் பொறுக்கலாற்ருது அவன் தாய் மரணமடையவும், கெட்ட சகவாசம் ஏற்படவும், திரண்ட செல்வம் கையிலிருக்கவும் அவனுடைய குணம் இவ்விதம் கெட்டு நிற்கிறது. பணத்தின் அருமையை அறியாச் சிறுவன். வீரபத்ரபிள்ளை எவ்வளவோ கஷ்டப்பட்டுச் சம்பாதித்த ஆஸ்தி. இவ்வளவு சம்பாதித்தது போதாதென்று மறுபடியும் வர்த்தக விஷயமாய்க் கப்பலேறிச் சென்ருர். ஐயோ,

பரிதாபம்! அவர் சென்ற கப்பல் உடையவும் சமுத்திரத்திற்கு அவர் இரையாகவும் அவருடைய செல்வம் இவ்வாறு அழியும்படி நேரிட்டது.

குண:—ஐயோ. அவர் மரணமடைந்து இன்னும் சரியாக ஒரு வருஷமாகவில்லை. இதற்குள்ளாக இச்சண்டாளன் அருமையாகத் தேடிவைக்கப்பட்டிருந்த அப்பெருஞ்செல்வத்தைத் துர்விநியோகஞ் செய்ததுமன்றிக் கடன்காரனுகவும் இருக்கிறுனுமே. இத்தகையோனுக்கா என் தமையன் தன் பெண்ணைக் கொடுக்கப்போகிறுர். இது ஒருகாலும் நடவாது. பச்சைக்கிளிபோன்ற இரஞ்சிதத்தை இப்படிபாவிக்குக் கல்யாணஞ் செய்து கொடுப்பதைவிட ஒரு கிணறு குட்டையில் தள்ளிவிடுவது மேலாகும்.

மாணி:—குணவதி! நீ பேசுவதைப்பார்த்தால் இரஞ்சிதம் உன் பெண்மாதிரியும் உன்னைப் பெண்கேட்க வந்துவிட்டாற்போலு மன்றோ தோன்றுகிறது. நீ எவ்வளவுதான் மதனகோபனை இழிந்துகூறியும் பலன் என்? உண்மையில் அவன் நீ சொன்ன மாதிரி அவ்வளவு கெட்டவனுகவே இருக்கட்டும். உன் அபிப்பிராயத்தை யார் கேட்கப்போகிறுர்கள். கனகவல்லியம்மாள் தன் மகளை அவளுடைய அண்ணன் மகனுக்கே விவாகஞ் செய்துகொடுக்க வேண்டுமென்று இஷ்டங் கொள்ளுவாளாயின் அதைத் தடுக்க அவளுடைய புருஷனுலேயே முடியாதென்றுல் நீயும் நானும் எம்மாத்திரம்?

குண:—நாதா! தாங்கள் கூறுவது முற்றும் உண்மையேயாகும். ஒன்றுமறியாப் பேதையான இரஞ்சிதத்தை அத்துஷ்டனுக்கு விவாகஞ் செய்வதென்னும் விஷயத்தைத் தாங்கள் சொல்லவே என் மனம் பொறுமல் ஏதேதோ சொல்லிவிட்டேன். கனகவல்லி பிரியப்பட்டால் இணங்காதோரையும் இசையும்படி செய்வித்துத் தான் மனதிற்கொண்டதைச் சாதிக்க வல்ல ஆற்றல் அவளிடத்திருக்கிற தெனினும் இவ்விஷயத்தில் நம்மால் ஏதேனும் செய்யமுடியுமோ என்று யோசித்துப் பாருங்கள்.

மாணி:—இதில் நாம் செய்வது என்ன இருக்கிறது? எது நடந்தாலும் பார்த்துக் கொண்டிருக்க வேண்டியதுதான்.

குண:—தாங்கள் அவ்வாறு சொல்லக்கூடாது. ஒருசமயம் இவ் விவாகம் நடைபெறுவதாயிருந்தால் அதைத் தடுப்பதற்கு ஏதேனும் மார்க்கமுண்டோ என்று தங்களைக் கேட்கிறேன்.

மாணி:—குணவதி! உன் மகனுக்கு இரஞ்சிதத்தை விவாகஞ் செய்துகொள்ள வேண்டுமென்னும் பிரியத்தில் நன்மை தீமைகள் இன்னவை என்பதை மறந்துவிட்டாய் போலும். 'ஆயிரம் பொய்யைச் சொல்லியேனும் ஒரு கலியாணத்தை நடத்து' என்பது உலக வழக்கச் சொல்லாயிருக்க, நடைபெறப் போகும் விவாகத்தைத் தடுத்தற்கு ஏதேனும் வழியுண்டோ என்று நீ நினைப்பது மகா பாபமாகும். குணவதி! இவ் விஷயம் இன்று இத்துடன் நிற்கட்டும். நாளைய தினம் சாவதானமாகப் பேசிக்கொள்வோம். நான் வெளியிற் சென்று வருகிறேன் என்று சொல்லி புறப்பட்டுப் போய்விட்டார்.

குணவதியும் சற்று நேரம் ஆழ்ந்த யோசனையிலிருந்து கடைசியாகத் தன் தமையனை இவ்விஷயத்தைப்பற்றிக் கேட்கவேண்டு மென்னும் நிச்சயங் கொண்டவளாய் எழுந்துசென்றுள்.

இரண்டாம் அத்தியாயம்

சகவாச தோஷம்.

முன் அத்தியாயத்திற் கூறப்பட்ட சங்கதிகள் நடந்து இரண்டு வருஷங்கள் ஆயின. மதனகோபனின் ஒழுங்கீனத்தைப்பற்றிக் குறைகூறின குணவதியின் புதல்வன் இரத்தினம், தாசியின் வீடே தஞ்சமென் றடைவானுயினன். ஏன் இவ்வாறு முடிந்ததென்பதும் குணவதி இதைப் பார்த்துச் சகித்துக் கொண்டிருக்கிறுளா என்பதும் பின்வருவனவற்றுல் விளக்கமுறும்.

துவக்கத்திற்சொன்ன விவாகம் கடவுள் சங்கற்பத்தால் யாதொன்றும் நடவாமல் நின்றுவிட்டது. இரத்தினம் பிள்ளைக்கு பூஸ்திதி கிடையாது. அவனுடைய பெருஞ்செல்வ முழுவதையும் ரொக்கமாக எண்ணிறந்த பேர்களை அழியச்செய்த ஆர்பத்நட் பாங்கியில் வைத்திருந்தான். வேறெவ்விதமான வரும்படியுமின்றிச் சுகஜீவனஞ் செய்துகொண்டு வந்திருந்த சமயம் அப் பாங்கி உடைந்து விட்டதென்ற செய்தியைக் கேட்டதும் இருதயம் வெடித்து இரத்தினம் பிள்ளை உயிர் துறந்தான். செல்வச் செருக்குற்றிருந்த கனகவல்லி தனது ஏழ்மைத் தன்மையில் இருக்கச் சகியாதவளாய் வியாதி கொண்டு சிறிதுநாட்களுக்குள் அவளும் மரணமடைந்தாள்.

ஹிந்து மதமும் வழிபாடும்

HINDU RELIGION AND WORSHIP

[திருவாளர் திரு. வி. கலியாணசுந்தர முதலியார்.]

ஹிந்து என்னுஞ் சொல்வரலாற்றைப் பற்றி ஈண்டு விரித்துக்கூற வேண்டுவதில்லை. அது வழக்கில் எவரைக் குறித்து நிற்கிறதென்பது உலகறிந்ததொன்று. அக்கூட்டத்தார் தமது உயிர்க்குரிய பற்றுக்கோடாகக் கொண்டொழுகும் மதம் ஹிந்துமதமென வழங்கிவருதல் கண்கூடு. அம்மதத்தில் உயரிய கொள்கை நிலவினும் அஃது உருவ வழிபாட்டு மதமென்றும், பல கடவுளரைப் போற்று மதமென்றும், பலதிற புறவழிபாடுகளையுடைய மதமென்றுஞ் சொல்லப்படுகிறது. ஆதலால் ஹிந்துமதத்துக்குரிய வழிபாடு யாது என்பது ஆராயற் பாலது.

ஹிந்துமத வழிபாட்டின் மீது கருத்தைச் செலுத்துமுன் அம்மதத்தின் உள்ளக்கிடக்கையை ஈண்டுச் சுருங்கச் சொல்வது நலமெனத் தோன்றுகிறது. ஹிந்து மதத்திற்குரிய வேதம் நான்கு. அவைகளின் முடிந்த உண்மையைக் கூறுவது வேதாந்தமென்பது. அவ்வேத வேதாந்த நுண்பொருள்கள் கடல்போல் பரந்து கிடத்தலால் வேதவ்யாசர் என்னும் பெரியார் அக்கடல் கடைந்து 'வேதாந்த சூத்திரம்' அல்லது 'பிரமசூத்திரம்' என்னும் அமிழ்தை உலகோர்க்கு ஈந்தனர். வேதவேதாந்தங்களையொட்டி எழுந்த வழிநூல்கள் எண்ணில. அவை யாவும் மக்கள் அறிவாற்றலுக்கேற்றவாறு அறிஞரால் யாக்கப்பட்டன. அவைகளின் நுண்ணிய பொருள் வேத வேதாந்த ஆராய்ச்சியுடையார்க்கே செவ்விதிற் புலனாகுமன்றி ஏனையோர்க்கு அது திரிபாகவே புலனாகும்.

வேதாந்த சூத்திரத்துக்குப் பலர் உரை கண்டுள்ளார். ஒவ்வோர் உரையில் ஒவ்வொருவித சுவையுண்டு. ஒரு மூலத்துக்கு உரை காணப் புகுவோர் உள்ளத்தெழுங் கருத்து, பெரிதும் அவர்வதியுங் காலநிலை தேசநிலை முதலியவற்றைப் பொறுத்து நிற்பதென்பது ஊன்றிக்கவனிக்கற்பாற்று. உரைகளை மதமாகக்கொண்டு நம்மவர்கள் இடர்ப்பட்டு வருவது மூலமதத்துக்குக்கேடு நிகழ்த்தியிருக்கிறது. உரைகளை ஆராய்ச்சிக்குக் கருவியாகக்கொள்ள வேண்டுமென்பது எனது கருத்து. ஒவ்வொருவர் உரைமீது துரபிமானங் கொண்டு பிறவுரைகளைக் குறை கூறுவது அறிவுடைமை யாகாது. இது நிற்க.

ஹிந்துமத நூல்களை ஆய்ந்தால் தொடக்கத்தில் பன்மை உணர்வும் முடிவில் ஒருமை உணர்வும் தோன்றும். "உலகம் பலவிதம்" என்பது பழமொழி. அப்பலவிதத்தில் ஒருவிதங் காண்பது அறிவுடைமை. ஹிந்து மதம் இறைவனுக்கு எட்டு மூர்த்தம் சொல்கிறது. அவை மண் புனல் தீ வளி வெளி திங்கள் ஞாயிறு உயிர் என்பன. இப்பன்மை எட்டையும் ஓர் ஒருமை இசைபட நிறுத்தி யியக்கும் பெருமை வியக்கற்பாலது.

"இருநிலனாய்த்தீயாகி நீருமாகி
இயமானனாயெறியுங்காற்றுமாகி
அருநிலையதிங்களாய்ஞாயிறாகி
ஆகாசமாயட்டமூர்த்தியாகிப்
பெருநலமுங்குற்றமும் பெண்ணு மாணும்
பிறவுருவுந்தம்முருவுந்தாமேயாகி
நெருநலையாயின்றாகிநாளையாகி
நிமிர்புன்சடையடிகணின்றவாறே.'

"நிலநீர் நெருப்புயிர் நீள் விசும்பு நிலாப்பகலோன்
புலனாய மைந்தனோ டெண்வகையாய்ப் புணர்ந்து [நின்றான்
உலகே ழெனத்திசைபத் தெனத்தா னொருவனுமே
பலவாகி நின்றவா தோணோக்க மாடாமோ"

என்று தமிழ் வேதம் முழங்குதல் காண்க.

இவ்வெட்டுக்கும் வேறாக உலகில் ஒரு பொருளுண்டோ என்பது சிந்திக்கத்தக்கது. எல்லாம் அவைகளிலடங்கும். இவ்வெட்டிற்கும் அடிப்படையாய்த் தாரகமாய் நிற்கும் பொருளே சித்தெனுஞ் செம்பொருள். அது மண்ணில் மண்ணாகவும் பிறவற்றிற் பிறவாகவும் நீக்கமற நிறைந்து எல்லாவற்றையும் இயக்கி வருகிறது. "அங்கிங் கெனாதபடி எங்கும் பிரகாசமா" யிலங்கும் அப்பரம் பொருளைக் காணவேண்டுமேல் அதன் இயற்கைவடிவாகிய மண் முதலிய எட்டின் வாயிலாகவே அதைக் காண்டல் வேண்டும். அத்துறையிலிறங்கி உழைத்து உண்மையுணர்த்திய முனிபுங்கவர்களின் நிலையை என்னென்று கூறுவேன்? அவர்களல்லவோ வேதாந்திகள் (ஹிந்துக்கள்)? மண் முதலிய பொருள்கள் இதுபோழ்து நமக்குக் கண்டப் பொருள்களாகத் தோன்றுகின்றன. அவைகளை வழிபடின் அவைகளின் வாயிலாக அவைகளோடு அத்துவிதமாகக்கலந்து நிற்கும் அகண்டாகாரப்பொருள் புலனாகும். அப்போது மண்முதல் உயிர் ஈறாக

கற்றார்முற் கற்ற செலச்சொல்லித் தாங்கற்ற மிக்காருண் மிக்க கொளல்.

உள்ள எல்லாம் மறைந்துபோகும். அந்நிலையில் தோன்றும் ஒருமைக்காட்சியைக் கண்ணால் காண முடியுமோ? கருத்தால் கருதமுடியுமோ? அந்நிலையை மணிவாசகனார்,

"இன்றெனக் கருளி யிருள் கடிந் துள்ளத்
    தெழுகின்ற ஞாயிறே போன்று
நின்றநின் றன்மை நினைப்பற நினைந்தேன்
    நீயலாற் பிறிதுமற் றின்மை
சென்றுசென் றணுவாய்த் தேய்ந்து தேய்ந்தொன்
    றாந் திருப்பெருந் துறையுறை சிவனே
ஒன்றுநீ யல்லை யன்றியொன் றில்லை
    யாருன்னை யறியகிற் பாரே."

என்று விளக்கியிருத்தல் காண்க.

அப்பெருநிலையை உலகிற் பிறந்த மக்கள் ஒவ்வொருவரும் ஒருபோது எய்த வேண்டியவரே. அந்நிலை ஒருவர்க் குரியதா? ஒரு கூட்டத்தார்க் குரியதா? ஒரு தேசத்தார்க் குரியதா? அஃது அகிலத் துறையும் அனைவர்க்கு முரியது. அந்நிலை குறிக்கும் மதமும் அனைவர்க்கும் உரியதென்று ஈண்டு வலியுறுத்திக் காட்டவேண்டுவதில்லை. வேதாந்தம் ஒருவர்க்குரியதன்று என்றுரைத்து மேலே செல்கிறேன்.

பஞ்ச பூதமாகவும், சந்திர னாகவும், சூரியனாகவும், ஆன்மாவாகவும் ஒளிரும் அகண்டாகார சச்சிதானந்த வத்துவைப் பெறுதற்கு அவ்வெட்டையே துணைக் கருவியாகக் கோடல் வேண்டும். நாடோறும் மனிதன் தன்னுடனுள்ள ஆன்மாவைக் காணா தொழியினும், அதைப் பற்றி ஆராயா தொழியினும், மண் முதலியவற்றைக் காண்கிறான்; ஆராய்கிறான்; அவைகளின் துணையால் வாழ்கிறான். இக் காட்சியும் ஆராய்ச்சியும் மனிதனுக்கு எட்டு மூர்த்தமாக உள்ள ஒன்றை உணர்த்துகின்றனவா? இல்லையே. அவ்வுணர்வுங் காட்சியும் பெற வழிபாடு வேண்டற்பாலது.

எட்டில் எதை விடுவது? உலகில் ஒவ்வொன்றை வழிபடுவோருளர்; சிலவற்றை வழிபடுவோருளர்; எல்லாவற்றையும் வழிபடுவோருளர்; இவ்வழிபாட்டு முறைகள் பற்பல. அவைகளே பல மதங்களாக உலகில் நிலவுகின்றன. அவ்வழிபாடுகளை உருவம் அருவம் அருவுருவம் என்னும் மூன்றனுள் அடக்கலாம். உருவத்தைக் கொண்ட மதங்கள் சில; அருவத்தைக் கொண்ட மதங்கள் சில; அருவுருவத்தைக் கொண்ட மதங்கள் சில. எல்லாவற்றையுங் கொண்டது வேதாந்தமெனும் ஹிந்து மதம். ஆதலால் ஹிந்துமதத்தை எந்தமதத்திலுங்காணலாம். ஹிந்து மதம் ஒரு கண்டப்பட்ட மதமன்று. அஃது அகண்டமாக எல்லாவற்றிற்கும் இடந்தந்து நிற்பது. இதைவிரிக்கில் இக்கட்டுரைநீளும்.

எட்டுப்பொருளில் ஒவ்வொன்றை வழிபடுவோர் அவ்வப்பொருளில் கடவுளுண்மை காண்பர்; அவர் மற்றப் பொருளில் கடவுளுண்மை காண்பதில்லை. யாண்டுங் கடவுளைக் காண்டற்குரிய வழிபாடு யாது? எட்டுக்கு வேறாக ஒன்றில்லையென்று மேலே சொற்றமையான், யாண்டுங் கடவுளைக்காட்டும் வழிபாட்டிற்குரிய பொருள் அவ்வெட்டனுள் ஒன்றாகவே யிருத்தல் வேண்டும். அஃதெது? அதுதான் ஆன்மா. மற்ற எழும் ஆன்மாவைப்போன்ற அறிவுடைப் பொருளல்ல. அறிவுடைப் பொருளாம் ஆன்மாவின் வழி ஆண்டவனை வழிபடுவோர் ஆண்டவன் உண்மையை மற்றப் பொருளிலுங் காணலாம். மண்முதலியன அறிவுடைப் பொருளல்லவாகலான் அவைகளுக்கு எல்லை இடம் முதலியன உண்டு. ஆன்மா அறிவுடைப் பொருளாகலான், அதற்கு எல்லையுமில்லை; இடமுமில்லை; ஒன்றுமில்லை.

இவ்வான்ம வழிபாட்டைப்பற்றி எழுதலாம்; பேசலாம். ஆனால் அது செயலில் எளிதில் கூடுவதோ? அரிது; அரிது; மிகஅரிது. முடிந்த வழிபாடு அஃது என்பதை மாத்திரம் எவரும் மறத்தலாகாது. அதைக் குறிக்கொண்டே மற்ற வழிபாடுகள் நிகழப்பெறல்வேண்டும். இவ்வான்ம வழிபாட்டை அறிவுறுத்தும் ஹிந்து மதமா உருவ வழிபாட்டு மதம்? பல கடவுளரை வழிபடும் மதம்? பலதிறக்கிரியைகளையுடைய இழிந்த மதம்? இவைகள் ஹிந்து மதத்திலில்லையோ? உண்டு. இவைகள் யாவும் ஹிந்து மதத்தின் படிகள் என்க. உருவங்களை மாத்திரம் வழிபடல் ஹிந்துமதம் என்று சொல்வது தவறு.

ஆன்ம வழிபாடெனும் பெருவழிபாட்டைக் குறிக்கொண்டு ஒவ்வொரு வித வழிபாட்டைப் படிப்படியாகக் கோடலே செயலில் அப்பெருநிலையெய்தக் கால்கொள்வதாகும். ஹிந்துக்கள் பெரிதும் உருவங்களை வழிபடுவோராய், பல கடவுளரைப் போற்றுவோராய், கிரியையாளரா யிருப்பதற்குக்காரண மென்னை என்று வினவலாம். உலகில் வாழும் மக்களுள் பெரும்பான்மையோர் எந்நீரர் என்பது கவனிக்கப் படல் வேண்டும். பெரும்பான்மையோர்-ஏறக்குறைய

எல்லோரும்-மன உணர்வோடு புலனறிவோடு வாழ்வோரேயாவர். அவர் சொல்பொருள் என்னும் ஈருலகில் வாழ்வோரயாவர். ஒவ்வொரு சொல்லுக்கும் ஒவ்வொரு பொருளுண்டு. ஒருசொல் சொல்லும்போது அதன்பொருள் மனதிலுறுதல் பெறுகிறோம். மனதில் பொருளுணர்த்தாத தொன்று வெறும் பாழாகவே யிருத்தல் வேண்டும். தென்னை என்றதும், தென்னையின் வடிவம் மனதிலுறுமற் போகாது. மனிதன் மன உணர்வோடு வாழுமட்டும் உருவங்கடந்த ஒன்றை எவ்வாறு வழிபட வல்லான்? "நினைப்பும் மறப்பும் அற்றவர் நெஞ்சில்- வினைப்பற்றறுக்கும் விமலனிருப்பன்" "நினைப்பற நினைந்தேன்" என வருஉம் ஆன்றோர் மொழிகளைக்காண்க. மன உணர்வு கடந்த நிலை எய்துதற்கு மனவுணர்வோடு வாழும் மனிதன் என்ன செயல் வேண்டும்? தன்னிலைக்கேற்ற வழிபாடுகளைப் படிப்படியாகக் கொண்டொழுகல் வேண்டும்.

சிலர் "ஹிந்துக்கள் உருவத்தை வழிபடுவோர்; நாங்கள் உருவங்கடந்த ஒன்றை வழிபடுவோர்" என்று வாயாற் பேசி "பரலோகத்துள்ள எங்கள் பிதாவே" என்று ஆண்டவனை வழுத்துகிறார். பரலோகம் யாண்டுளது? அங்கே பிதா எப்படியிருக்கிறார்? 'பரலோகம்' 'பிதா' என்னுஞ் சொற்களுக்கு என்ன பொருள்கள் அவர்கள் உள்ளத்தில் தோன்றுகின்றன? செபஞ் செய்யுங் கோயிலும் தொப்பியும் தாடியும் நீண்ட அங்கியும் தோன்றும் போலும்! இல்லையேல் அன்னார் வெறும்பாழைப் போற்றுவோராவர். மன உணர்வுள்ளவரை மனிதன் மனதில் வடிவம் புலப்பட்டுக்கொண்டிருத்தல் இயல்பு. அத்தகைய மனதை ஒரு வடிவில் பதிய வைத்துப் பயிற்சி செய்யச் செய்ய அது மனிதனைப் பலதுறையில் அலைத்து அலைத்து இடர்ப்படுத்தாது. முதலாவது நெஞ்சை ஓரிடத்தில் நிலைபெறச் செய்யல்வேண்டும். அதற்கு உருவ வழிபாடு இன்றியமையாதது. வழிபாட்டுடன் நெஞ்சைப் பின்னும் நிலைபெறுத்தச் சில கிரியைகளும் வேண்டற்பாலன.

"நிலைபெறுமாறெண் ணுதியேல்நெஞ்சே நீவா
நித்தலுமெம் பிரானுடைய கோயில்புக்குப்
புலர்வதன்முன் னலகிட்டு மெழுக்குமிட்டுப்
பூமாலை புனைந்தேத்திப் புகழ்ந்துபாடித்
தலையாரக்கும்பிட்டுக் கூத்துமாடிச்
சங்கராசயபோற்றி போற்றியென்றும்
அலைபுனல்சேர்செஞ்சடையெம்மா தீயென்றும்
ரூராவென்றென் றேயலறுநில்லே"

என்று அப்பர் சுவாமிகள் அருளிச்செய்திருத்தல் காண்க. இத்திருப்பாடல், "விறகிற்றீயனன் பாலிற் படுநெய்போல்-மறைய நின்றுளன் மாமணிச் சோதியன்-உறவுகோல் நட்டுணர்வு கயிற்றினால்-முறுக வாங்கிக் கடைய முன்னிற்குமே?" என்றும், "காயமே கோயிலாக" என்றும், ஆண்டவனை "இப்படியன் இந்நிறத்தன் இவ்வண்ணத்தன் என்றெழுதிக் காட்டொணாதே" என்றும் உலகோர்க்கறிவுறுத்திய பெரியாரால் அருளிச் செய்யப்பட்ட தென்பது கருதற்பாலது.

உருவ வழிபாட்டில் பலதிறமூர்த்தி பேதங்கள் நிகழும். மூர்த்தி வழிபாடு ஒரு நிலையாகலான் அதுபற்றி உயர்வு தாழ்வு வாதமிடுவோர் உண்மை காணும் முயற்சியில் தலைப்பட்டுழைப்பவரல்லர். மூர்த்தி வழிபாடு அவரவர் விரும்பிய வாறு செய்யலாம். ஒரு மூர்த்தியின் மாட்டுக் கொண்ட பற்றால் மற்ற மூர்த்திகளைக் குறை கூறுவோர் ஆன்ம வழிபாடெனும் பெருநிலை எய்தல் அரிது. மூர்த்தி வாதத்தில் தலையிட்டுக் காலங் கழிப்போர் ஒருவித நாத்திகரேயாவர்.

பஞ்சபூதப் பெருவடிவையே முதல் முதல் மனிதன் மனதில் உன்ன இயலாதெனக்கருதி நம் முன்னோர்கள் பஞ்சபூத நுட்பதைக் கோயில்கள் வாயிலாகவும் பூசைகள் வாயிலாகவும் விளங்க வைத்துச் சென்றார்கள். பஞ்சபூதம் ஆண்டவன் வடிவம் என்பதை அறிவுறுத்த நமது தமிழ்நாட்டிலேயே ஐந்து திருப்பதிகளுண்டு. அவை காஞ்சி (மண்) திருவானைக்கா (புனல்) திருவண்ணாமலை (நெருப்பு) திருக்காளத்தி (காற்று) சிதம்பரம் (வெளி) என்பன. பூசைக்காலத்தில் மூர்த்தி மண்ணையும் பிற நீரையும் நெருப்பையும் உணர்த்துகின்றன. மூர்த்தி முன் விசுறுவது காற்றைக் காட்டுவது. பாக்களைப் பாடுவது ஒலிவடிவான ஆகாயத்தை அறிவுறுத்துவது. சூரிய நமஸ்காரம், தியானம் இவைகள் மற்ற மூர்த்தங்களைக் குறிப்பன. மக்கள் நிலைக்கேற்ற வண்ணம் பல முறைகள் வகுக்கப்பட்டன. இம்முறைகள் இதுபோழ்து பொருளிழந்து கிடத்தல் கண்கூடு. என் செய்வது! காலத்தின் கோலம்!

திருக்கோயில் வழிபாடும் பூசை முறைகளும் நெஞ்சை நிலை பெறுத்துவன வாகலான் அவைகள் தொடக்கத்தில் கொள்ளற்பாலன. உருவ வழிபாட்டைக் குறை கூறுவோரும் ஆண்டவனைத் தொழுதற்கென நிலையங்கோலிக் கொள்வது காண்கிறோம். இம்முறை வெவ்வேறு

வழியில் மனவுணர்வுடைய மனிதன் ஒவ்வொருவனும் தன் தன் மதப்பெயரால் கொள்ளப்படுவது. இது ஹிந்து மதத்துக்கு முதற்படியாக விளங்குகிறது.

இந்நிலையில் ஒருமை மனங்கொண்டுழைக்கும் ஒருவன் செயற்கை யுருவங்களையும் செயற்கை முறைகளையும் விடுத்து இயற்கை யுருவங்களை வழிபடும் ஒரு நிலையெய்துவன். மலையையுங் காட்டையும் வயலையுங் கடலையும் ஆண்டவன் வடிவாகப் போற்றும் மனம் பரந்த பாட்டொழுகும் மனமாகும். இயற்கை யின்பமும் மனவுணர்வும் ஒன்றுபடும் போழ்து மனம் என்னும் தத்துவம் ஒடுங்குதல் காணலாம். அஃதொடுங்க ஒடுங்க ஆன்ம மூர்த்த வழிபாடு கூடும். அவ்வழிபாடு கூடப்பெற்ற ஒருவன் எல்லாவற்றையும் தன்னில் காணும்பேறெய்துகிறான். அவ்வழிபாட்டிற்கு மேற்பட்ட வழிபாடில்லை. பின்னைக்கூடும் பெரு நிலையைப் பற்றிப் பேச்செற்றுக்கு? "உரையற்றதொன்றை உரைசெயும் ஊமர்காள்-கரையற்ற தொன்றைக் கரை காணலாகுமோ" என்னுந் திருமூலர் திருவாக்கைப் போற்றுகிறேன்.

ஹிந்து மதத்துக்குரிய வழிபாட்டு முறைகளைத் தாவிபுலாக நியாயம் பற்றி இக் கட்டுரையிலடங்குமாறு சுருங்கக் கூறினேன். ஹிந்துமதம் உருவ வழிபாட்டளவோடு நிற்கும் மதமன்று என்பதொன்றே ஈண்டுக் கவனிக்கற்பாற்று.

நாளடைவில் ஹிந்துக்கள் படிகளாக உள்ள உருவ வழிபாட்டுகளையே முடிந்த வழிபாடாகக் கருதி, அதற்குப் பூசல் மூழ்கல் மடிகட்டல் மணியுருட்டல் முதலியனவே ஒழுக்க முறைகள் எனக் கொண்டமையான், ஹிந்துக்களிடையில் ஆன்ம மூர்த்த வழிபாடும், அதற்குரித்தாய ஆன்ம நேய வழிபாடும் பெரிதும் இறந்து பட்டன என்னலாம். அக் காலத்திலேயே அதாவது இடைக் காலத்தில் ஹிந்துக்களுக்குள் சாதிப்பூசலுஞ் சமயச் சண்டையும் தலைகாட்டலாயின. இச் சண்டைகள் அழுக்காறு வெகுளிமுதலிய அரக்க குணங்களைத் தெய்வங்களாகப் போற்றச் செய்தன. திருநீறு திருமண் சண்டையும், வடகலை தென்கலைச் சண்டையும், இவை போன்ற பிறவும் எந்நீர்மையைப் புலப்படுத்துகின்றன? மக்கள் நிலை இவ்வாறாகப் புறவழி பாட்டிற்குரிய தெய்வ நிலையங்கள் தத்தம் நோக்கத்தினின்றும் வழுவலாயின. ஹிந்து கோயில்களின் நிலையையும் மடங்களின் நிலையையுங் கூறவும் வேண்டுமோ?

ஹிந்துக்கள் தெய்வ வழிபாட்டு முறைகளின் வீழ்ச்சி அவர்களுக்குள் கலாம் விளைத்து, ஒற்றுமை குலைத்து, அவர்கள் தேசத்தையும் அவர்களிடத்திருந்து இழக்குமாறு செய்தது. ஆன்ம மூர்த்தத்தை வழிபடும் பெரும் பேறெய்திய ஹிந்துக்கள் இதுபோழ்து உலகிலுள்ள எல்லா மக்களினும் தாழ்நிலை யுற்றுள்ளார்கள். ஹிந்துக்களுக்கெனச் சுயராஜ்யம் பெற்ற தேசமில்லையெனில், அவர்கள் சிறுமை நிலையை என்னென்றெழுதுவது? மீண்டும் ஹிந்துக்கள் பழைய நிலை யெய்தவேண்டுமேல் அவர்கள் பழையபடி தெய்வ வழிபாடுகளில் தலைப்பட்டு ஆன்ம ஞானத்தை வளர்க்க முயலல் வேண்டும். புறவழி பாட்டிற்கென ஏற்பட்டுள்ள நிலையங்கள் ஆன்ம விளக்கத்துக்கு இனித் துணைபுரியுங் கருவிகளாக நிற்கும் என்பதில் எனக்கு நம்பிக்கையில்லை. ஆண்டுச் செல்வதினும் வீட்டிலேயே ஓர் அறை வகுத்து உருவ வழிபாடு செய்வது நலம். உருவ வழிபாட்டை ஒரோ வழி கொண்டு பெரிதும் இயற்கையை வழிபடுவதில் பயிற்சி பெறல் வேண்டும். இப்பயிற்சி எட்டு மூர்த்தங்களுள் சிறந்த ஆன்மாவைத் தாங்கும் இயற்கைக் கோயில்களை வழிபடுந் துறைகாட்டுவதாகும். நடமாடுங் கோயில்களாகிய உயிர் வழிபாடே இது காலை வேண்டற்பாலது.

> படமாடக்கோயிற் பகவற்கொன் றீயின்
> நடமாடக்கோயில்நம் பர்க்கங்காகா
> நடமாடக்கோயில் நம்பர்க்கொன் றீயிற்
> படமாடக் கோயிற் பகவற்கங்காமே.

எனவரூஉந் திருமூலர் திருவாக்கையோர்க. படமாடுங்கோயிலாகிய செயற்கைக் கோயிலினும் நடமாடுங் கோயிலாகிய இயற்கைக் கோயிலே சாலச்சிறந்த தென்க. ஹிந்துக்களுக்குள் ஒற்றுமை உரிமை வேண்டுமெனில் அவர்கள் சாதி சமய வேற்றுமை கருதாது நடமாடுங் கோயில்களாகிய உயிர்களை வழிபாடு செய்வார்களாக. உயிர்கள் வழிபாடு புத்துயிர் பெற்றெழுந்தால் சாதிச் சண்டையும் சமயச்சண்டையும் மாய்ந்தொழியும். அன்புமதம் யாண்டும் பெருகும். உண்மை ஹிந்துமதவாட்சி யாண்டுங் காணலாம்.

"எவ்வுயிரும் என்னுயிர் போல் எண்ணி யிரங்கவுநின்
தெய்வ அருட்கருணை செய்யாய்பராப ரமே"

—தாயுமானர்.

பகையகத்துப் பேடிகை யொள்வா ளவையகத் தஞ்சுமவன் கற்ற நூல்.

சிறுத்தொண்டர்

விநாயகர் காப்பு

வெண்பா

பூவாருஞ் செஞ்சடையார் பொற்பாத மீதன்பு
தாவாச் சிறுத்தொண்டர் தஞ்சரிதை—நாவோத
சங்கரன்தன் ஐயனருஞ் சண்முகன்த மையனெம
தைங்கான் துணைப்பதங்காப் பாம்

சரஸ்வதி துதி

(தேவி மீனாக்ஷி சுதம் - மெட்டு)

கல்யாணி - ரூபகம்

பல்லவி

தேவீ கலைவாணிநிதந் திருவருள்புரி கல்யாணி

அனுபல்லவி

நாவலர் மனோஹரி நாயகி தயாபரீ —தேவி

சரணம்

தேவர்கள் மூவர்கள்யாவரும்—தேடிவரும் விச்வாசினி
தூவுமலர்ப் பதபோதினி ஸ்வப்ரகாச பத்மாசினி
மேவியென் நாவினயந்தொரு வேதியத் தொண்ட
[ரின் நாடகம்
பாவொடு கீதமுந் துலங்கப் பண்பாயருள்
[பாலித்தருள். —தேவி.

அங்கம் I

காட்சி 1

இடம்:— சோழமன்னன் கொலுமண்டபம்

நடர்:— சோழமன்னன், பரஞ்சோதியார்.

சோ:— மந்திரி! இன்று யான் உம்மைக் காண்பதில் எனக்கோர் ஆனந்தம் பொங்குகின்றது. உம்மை மந்திரியாகப் படைத்த என் பாக்கியமே பாக்கியம்; உமது கல்விப் பெருக்கையும் மதியூகத்தையும் கண்டே இதுகாறும் பேருவகை பூத்திருந்தேன். இப்பொழுதோ உமது தீரத்தையும் புகலருந் தைரியத்தையும் சத்துருவை யடக்கும் மெத்த நல்ல சாமர்த்தியத்தையும் பார்த்து ஆநந்தக் கடலில் ஆழ்ந்துவிட்டேன். நானே எத்தனையோ முறை போருக்கெழுந்து சென்றும் அடக்க முடியாத நமது எதிரி வாதாபியாகிய அந்தப் பரம சண்டாளனை

(சாண்டோரே - சாண்டாரோ - மெட்டு)

கன்னடா - ஆதிதாளம்

பல்லவி

எப்படி ஜயித்துவந்தீர் ஐயா
எமனும் நடுங்கு மந்தக் காமகாரப் பாதகனை—எப்

அநுபல்லவி

கப்பிய கருங்கல்மனத்—
தொப்பிய தீங்குசெய்வோனைக்
கலங்கும்படி வதைத்துப்
பலங்குலைத் தலையவைத்து— (எப்)

சரணம்

தொடுத்த போரத்தனையும்—தும்ஸப் படுத்தி
விட்டான்
விடுத்த சைனியங்களை மேவிவாவே வெட்டான்
தடுத்துப்புத்திசொன்னாலும்தள்ளியாணவப்பட்டான்
அடுத்த வுமக்கடங்கி யகந்தை குலையக்கெட்டான்
(எப்)

பரஞ்:— திரிபுர சம்ஹாரியாகிய சித்புருஷனது திருவருளால் விளங்கும் மன்னர் மன்னவ! எளியேனாகிய என்னை ப்ரமாதப்படுத்துவதும் பொருந்துமோ? தங்கள் ஆக்ஞையைச் சிரசால் வகித்துப் போருக்குப் புறப்பட்டேன். கருணைக் கடலாகிய கண்ணுதலாரின் பேருதவியால் காதகனை ஜயித்தேன். அவ்வளவுதான். அற்பமதியினரும், மாயை வலையிற் சிக்கி மயங்கியவர்களும், பசி பிணி தாபம் மறதி முதலியவற்றிற்கு ஈடுபட்டவர்களுமான நம்மால் எந்த காரியந்தான் முடியப் போகின்றது? அவனன்றி ஓரணுவும் அசையாதென்னும் ஆன்றோர் வாக்கே முக்காலும் உண்மை அரசே!

இராகம்-அசாவேரி - ரூபகதாளம்

பல்லவி

பன்னக பூஷணன் பக்ஷமிருக்குமானால்
பலிக்காத காரியம் உண்டோ (பன்னக)

அனுபல்லவி

என்னாலே யானது ஒன்றுமில்லை சொன்னேன்
ஈசன் அருட்பலத்தால் தேசம் பிடித்துவந்தேன்
(பன்)

சரணம்

ஆவதும் அழிவதும் அரனார் திருவருளே
அடிமையாகிய நம்மால் முடிவதோ ஒன்றுமில்லை
நாவில் மனத்தில் அருஞ்செய்கையில் அவர்பாதம்
நாடிப் பொருந்துவதே நாமடையும் ப்ரசாதம்
(பன்)

ஆகவே, ப்ரபோ! என்னால் முடிந்ததாக ஒன்றுமில்லை. எல்லாம் எனையாளும் ஈசன் செயல். அவர் பலமில்லாவிட்டால் நான் அடுத்த பகைவனைத் தொடுத்து வெல்லுவேனோ? ஆதலால், தாங்கள் என்னைப் புகழ்வதைவிட்டு நமது பங்கிலிருந்து பாதுகாத்தருளிய எல்லாம் வல்ல எம்பெருமானையே போற்றவேண்டும், புண்ணியமுண்டு.

சோ:—மெத்தச் சந்தோஷம். தாம் கூறுவது உண்மையே. கடவுள் கண் பார்த்தால் காலனையும் வெல்லலாம். இத்தகைய பக்தியோடிருப்பது அருமையிலும் அருமை. அடியார்க்கெளியனாகிய அம்பலவாணன் தன் அன்பில் ஈடுபட்டு அதையே சதமெனவும் எல்லாம் அதுவே யெனவும் அசையா உறுதியைக் கொண்டுள்ள மஹானுபாவர்களைக் காணுதலே புண்ணியத்தைத் தரும்.

விருத்தம்

தவஞ்செய்யும் பெரியோரொன்று
தங்களை யறிந்தேன் இன்றே
பவமிகுதி யினுலுங்கள்
பணிகொண்டேன் பொறுப்பீர் ஐயா!
குவிந்த இப்பொருளை யெல்லாம்
கொண்டு நீர் சென்றுமாசில்
சிவன்பணி செய்யும்வேறு
சிந்தனை சிறிதும் வேண்டாம்

இந்தப் பிறவிக்கேதுவான லௌகிக வாழ்க்கையைக் கையாடுமாறு நான் இனி ஒருநாளும் உம்மை வற்புறுத்தமாட்டேன். தாங்கள் எதிரியினிடமிருந்து கைப்பற்றிவந்த இந்த அளப்பருஞ் செல்வம் அனைத்தையும் நீரே எடுத்துச்சென்று சிவத்தொண்டு புரியும் கைங்கர்யத்தை மேற்கொள்ளலாம். பவத்தொண்டாகிய மற்ற எத்தொழிலும் நிர்மலமான இன்பத்தை இம்மையிலுந் தராது மறுமையிலுந் தராது.

பா:— விருத்தம்

உலக வெம்பந்தம் விட்டே
ஒருவன் தன் பணி செய்யென்றீர்
அலகிலொண் தவஞ்செய்தார்கள்
அரும்பலன் அடைவீர் வேந்தே
விலகரும் அருள்மெய்க் கொண்டார்
வெள்விடையானூர் ஞானத்
திலகரின் ஏவல் கேட்கச்
சென்றுயான் வருவேன் இன்றே.

குடிகளுக்கு வேண்டியவைகளை குறிப்பாலுணர்ந்து, பிள்ளையின் பசியறிந்து பாலருத்துந் தாயே போலும், அவர்களது மனது குளிரும் வண்ணம் புரிவதே வேந்தர்க்கழகு. அதனையே செங்கோன்மை யென்பார்கள். அத்தகைய அற்புத விற்பன்னத்தைக் கொண்ட தாங்கள் எங்களுக்கெல்லாந் தாய்போலவே சமயமறிந்து தண்ணருள் புரிந்து வரும் நன்றியை யாங்கள் என்றும் மறவோம். தாங்கள் கூறியவண்ணமே யான் சென்று எல்லாம் வல்ல எம்பெருமானின் பணிவிடைகளைச் செய்து என் சித்தத்தைச் சிவன்பால் செலுத்திக் கொண்டிருப்பேன்.

திருத்தாண்டகம்

"அரியானை அந்தணர்தஞ் சிந்தை யானை
அருமறையின் அகத்தானை அணுவை யார்க்குந்
தெரியாத தத்துவனைத் தேனைப் பாலைத்
திகழ் ஒளியைத் தேவர்கள்தம் கோனை மற்றைக்
கரியானை நான்முகனைக் கனலைக் காற்றைக்
கனைகடலைக் குலவரையைக் கலந்து நின்ற
பெரியானைப் பெரும்பற்றப் புலியூ ரானைப்
பேசாத நாளெல்லாம் பிறவாநாளே !"

வேந்தே ! யான்போய் வருகிறேன்.

சோ:— சுகமாகப் போய்வரவும்.

[சிறுத்தொண்டர் போதல்.]

காட்சி 2

இடம்:—சிறுத்தொண்டர் மனையில் ஓர் அறை.
நடர்:—சிறுத்தொண்டர், திருவெண்காட்டு நங்கை.

[சிறுத்தொண்டர் பாடிக்கொண்டு வருதல்]

சிறு:— காம்போதி - ரூபகம்

"வாழ்வாவது மாயம்இது மண்ணாவது திண்ணம் [ன்
பாழ்போவது பிறவிக்கடல் பசிநோய் செய்த பறிதா
தாழாதறம் செய்ம்மின் தடங்கண்ணான் மலரோனும்
கீழ்மேலுற நின்றான் திருக்கேதார மெனீரே."

விருத்தம்

'திருநாம மஞ்செழுத்துஞ் செப்பாராகில்
தீவண்ணர் திறம் ஒருகாற் பேசாராகில்
ஒருகாலுந் திருக்கோயில் சூழா ராகில்
உண்பதன்முன் மலர்பறித்திட் டுண்ணாராகில்
அருநோய்கள் கெடவெண்ணீ றணியாராகில்
அளியற்றார் பிறந்தவா றேதோ வென்னில்
பெருநோய்கள் மிக நலியப் பிறந்துஞ் செத்தும்
பிறப்பதற்கே தொழிலாகி இறக்கின்றாரே."

[திருவெண்காட்டு நங்கை பாடிக்கொண்டு வருதல்]

சுருட்டி - ரூபகம்

திரு:— "பித்தா பிறைசூடி பெருமானே யருளாளா
எத்தான் மறவாதே நினைக்கின்றேன் மனத்துன்னை
வைத்தாய் பெண்ணை தென் பால் வெண்ணெய்
[நல்லூரருள் துறையுள்
அத்தாவுனக் காளாயினி அல்லேன் எனலாமே."
"நாயேன் பலநாளும் நினைப்பின்றி மனத்துன்னை
பேயாய்த்திரிந் தெய்த்தேன் பெறலாகா அருள்
[பெற்றேன்
வேயார் பெண்ணைத் தென்பால் வெண்ணெய் நல்
[லூரருள் துறையுள்
ஆயா உனக் காளாயினி அல்லேன் எனலாமே."

நாதா! தாங்கள் வந்து வெகுநேரம் ஆச்சோ?

சிறு:—இல்லை. இப்பொழுதுதான் வந்தேன். என் அன்பிற்குரிய அருமை நங்காய்! அருகில் வா. இன்று உன்னிடம் சொல்லத்தக்க செய்தி ஒன்றுண்டு. பக்தி நெறியிற் சித்தத்தைச் செலுத்தி சித்துருவாகியும் சத்துவமாகியும் வேத நூல்களில் ஓதிடு மூர்த்தமதாகியும், ஆக்கல் அழித்தல் காத்தல் முதலிய முத்தொழிற் கர்த்தனுகியும், விளங்கும் சாக்ஷாத் சிவபெருமானை மனத்தினில் இருத்தி மனமொழி மெய்களால் சதா அருத்தியொடு தொண்டு செய்து நித்தியாநந்தத்தைத் தரும் சிவ யோகத்தையே புரியுங் காலம் என்று வாய்க்குமோ என உள்ளத்தே பக்தியொடு நத்தியிருந்த நமக்குத் திருவுள மிரங்கிக் கிருபை பாலித்துள்ளார் நம் கண்ணுதலார்.

திரு:—நாதா ! எந்த விதமாகவோ?

சிறுவர்களுக்கான பக்கங்கள்

CHILDREN'S PAGES

1. மத்ஸ்யாவதாரம்

ஒரு சமயம், நைமிசாரண்யம் என்னும் புண்ணிய க்ஷேத்திரத்தில் ஒரு பெரும் வேள்வியின் பொருட்டுக் கூடியுள்ள அநேக மஹரிஷிகளின் வேண்டுகோளுக் கிணங்கி, புராணகதைகள் சொல்வதில் மிகக் கியாதிபெற்ற ஸூதர் என்னும் மகான், அந்த ரிஷிகள் முன்னிலையில் பகவதவதார புண்ணிய கதைகளை எடுத்துக்கூறி, அவர்களைச் சந்தோஷப்படுத்தினதாகச் சொல்லப்படுகிறது. இவ்விதம், ஒரு சமயம் அவர்கள் பரமபுருஷனது முதன்மையான மத்ஸ்யாவதாரத்தின் காரணத்தைப்பற்றி வினவ, ஸூதபுராணிகர் சொல்லுகிறார்:—

"இந்த கல்பத்திற்கு முந்தின கல்பத்தின் முடிவுகாலத்தில், திரவிட தேசத்தில் ஸத்யவிரதன்(அல்லது மனு)என்னும் ஒரு அரசச்சிரேஷ்டன் இருந்தான். இவன் சூரியனது புத்திரன்; மகாவிஷ்ணுவிடம் பக்தியுள்ளவன்; தமம் சமம் பொருந்தியவன்; பொறுமை, பூததயை நிறைந்தவன். இவன் தனது புத்திரனிடம் இராஜ்யபாரத்தை ஒப்புவித்துவிட்டு, மலயபர்வதத்தில் தவஞ்செய்யச் சென்றான். சுகம், துக்கம் இரண்டையும் ஒன்றாகப் பாவிக்கக்கூடிய சாந்தமான நிலைமையுடன் வெகுகாலம் தவத்தில் ஆழ்ந்திருந்தான். இவ்வாறு அநேக ஆயிர வருஷங்கள் கடந்தன. பின்னர் பிரம்மன் பிரத்தியக்ஷமாகி, யாது வரம் வேண்டுமென வினவினர். அப்போது ஸத்தியவிரதன் "பிரபுவே, நான் உம்மிடம் யாசிக்கும் வரம் ஒன்றே. அதாவது, பிரளயகாலம் வரும்போது, சராசர வஸ்துக்கள் அனைத்தையும் ரக்ஷிக்கக்கூடிய சக்தி எனக்கு ஏற்படவேண்டும்" என்று பிரார்த்திக்க, சதுர்முகனும் 'அப்படியே ஆகக்கடவது' என்று கூறி மறைந்தார். இது கேட்டுக் களித்த வானோர் ஸத்யவ்ரதன்மீது மலர் மாரி பொழிந்தனர்.

பின்னர் ஒருசமயம், ஸத்யவிரதன் கிருதமாலை என்னும் நதியில் ஜலதர்ப்பணம் செய்துகொண்டிருந்தான். அப்போது அவன் கையில் தேஜோமயமான ஒரு மீன்குட்டி விழுந்தது. இதுகண்ட ஸத்யவிரதன் அதை நதிஜலத்தில் விட்டான். அப்போது அந்த மீன், தயாளுவான அவ்வேந்தனை நோக்கி, 'பரம காருணிகனே, துஷ்ட ஜலசரங்கள், பெருமீன்கள் இவற்றிலிருந்து நான் மிகப் பயப்படுகிறேன். நீர் என்னை இங்குவிடாமல் காத்தருள்வீராக" என வேண்டிற்று. நாராயணனே அம்மீன் உருக்கொண்டு, தன்னை அனுக்கிரகிக்க வந்திருக்கும் இரகசியத்தை அவன் அப்போது அறியவில்லை. ஆகையால், அதைக் காத்து ரக்ஷிக்கும் பொருட்டு, தனது கமண்டல ஜலத்தில் அதை எடுத்துவிட்டு, ஆசிரமம் நோக்கிச் சென்றான்.

அன்று இராத்திரி அது கமண்டலம் நிறையுமாறு பெருத்து, மறுநாள் அரசனை நோக்கி, வேறு ஒரு ஜலாசயத்தில் தன்னை எடுத்து விடும்படி வேண்டிக்கொண்டது. அவ்வாறே அவனும் அதை ஒரு பெரும் பானை ஜலத்தில் விட்டான். ஒரு முகூர்த்தகாலத்தில் அம்மீன் மூன்று முழநீளம் வளர்ந்தது; பானையில் அடங்காமல் தவித்தது.

பின்னர் அவன் அதை ஒரு கிணற்றில் போட, அங்கும் அது பெருத்து, ஒருபெரிய ஏரியில் விடப்பட்டது. உடனே அது ஒரு யோஜனை அளவு வளரவே, அரசன் அதைக் கங்கையில் எடுத்துப்போட்டான்; அங்கும் அது நிரம்பியிருக்க, கடைசியில் அவன் அதை சமுத்திர ஜலத்தில் எடுத்துவிட்டான். உடனே அது அநேக யோஜனைகள் பரிமாணம் பருத்து, சமுத்திரம் நிரம்ப வியாபித்துவிட்டது.

இந்த ஆச்சரியத்தைக் கண்ணுற்ற ஸத்யவிரதன் பிரமைகொண்டு திகைத்தான். 'ஆ! இதென்ன மாயம்! இவ்வித ஜலஜந்துவை நான் இதுவரையில் கண்டதுமில்லை; கேட்டதுமில்லை!' என்று தவித்தான். பின்னர், அவன் அதை நோக்கி, "நீர் வாஸுதேவனான பரம புருஷனாகவே இருக்கவேண்டும். உம்மைத் தவிர வேறு யார் இவ்விதம் பெருத்து எங்கும் வியாபிக்கக் கூடும்? ஆதியந்தமில்லாத ஸாக்ஷாத் நாராயணனே நீர். ஸர்வப் பிராணிகளுக்கும் அனுக்கிரகம் செய்யும் பொருட்டே நீர் இவ்வித ஜலசரரூபம் தரித்துள்ளீர் என்பது திண்ணம். பக்திசெய்து உம்மைச் சரணமடைவோரை ஸதா காத்துரக்ஷிக்கும் விரதங்கொண்ட பரஞ்சோதியே! ஜகத்தின் உற்பத்தி, ஸ்திதி, லயம் இம்மூன்றுக்கும் காரணமாயுள்ள நித்ய புருஷனே! உமக்கு நமஸ்காரம். நீர் லீலார்த்தம் எடுத்துள்ள அவதாரங்கள் எல்லாம் பிரபஞ்சத்திலுள்ளோரின் க்ஷேமத்தின் பொருட்டே உண்டாகக் கூடியவை. ஆகையால், எந்த உத்தேசத்தைக்கொண்டு தாங்கள் இவ்வித ரூபம் எடுத்துள்ளீர்?" என்று பிரார்த்தித்தான்.

இது கேட்ட ஜனார்த்தன பகவான், பிரளய கால ஜலராசியில் லீலை செய்யவும், பரம கருணை கொண்டு ஜனங்களைக் காத்தருளவும் உத்தேசித்து, ஸத்திய விரதனுக்குப் பதில் கூறலுற்றார்:—"ராஜ சிரேஷ்டனே! மத்ஸ்ய உருவமாயுள்ள எனது ஸ்வரூபத்தை நன்கு அறிந்து கூறினாய். நான் இந்த ரூபமாய் வந்த விஷயத்தைச் சொல்லுகிறேன். சமீபகாலத்திலேயே, ஜலப்பிரளயம் ஏற்படும்; அப்போது, மலைகள், வனங்கள் கூடிய எல்லாப் பிரபஞ்சமும் மூழ்கித் தவிக்கும். * இதோ இருக்கும் படகு வேத மயமாயும், தேவர்களின் சரீர அம்சங்களால் அமைக்கப்பட்டதாயுமுள்ளது. ஜீவகோடிகளைக் காப்பாற்றும் பொருட்டு உண்டாக்கப்பட்டிருக்கிறது மேற்கூறிய பிரளயகாலத்தில், ஜீவராசிகள், ஔஷதிகள் முதலியவற்றை இதில் ஏற்றி வைத்துக்கொண்டு ரக்ஷிப்பாயாக. அவ்வித பிரளயகாலம் முடிந்ததும், நீ சராசர வஸ்துக்களடங்கிய பிரபஞ்சத்தைப் படைக்கும் ஞானமும் சக்தியும் பெற்று, வைவஸ்வதமனு என்ற பிரசித்தப் பெயருடன் கொண்டாடப்பட்டு விளங்குவாய்."

கேசவனால் இவ்வாறு அனுக்கிரகிக்கப்பட்ட ஸத்யவிரதன், திருமாலை வணங்கி, "ஜகந்நாதனே! நீர் கூறிய பிரளயம் எப்போது ஏற்படும்? ஜீவராசிகளை நான் எவ்வாறு காத்து ரக்ஷிக்கக்கூடும்? எப்போது நான் உம்மையடைந்து மோக்ஷ ஸாம்ராஜ்யம் பெறுவேன்?" எனக் கேட்கலானான்.

இவ்வாறு பிரார்த்திக்கப்பட்ட பகவான் "பக்த சிரேஷ்டனே! பூமியில், இது முதல் ¶ நூறு வருஷகாலம் அநாவிருஷ்டி (மழையின்மை) ஏற்பட்டு, எங்குப் பார்த்தாலும் க்ஷாமமும், பலவித கஷ்டங்களுமுண்டாகும். பின்னர், சூரிய கிரணங்கள் வெகு உக்கிரமாகி, பிராணிகளின் பலத்தைக் குறைத்து நாசமடைவிக்கும். சமுத்திரத்தினுள் அடங்கியிருக்கும் படபாமுகாக்கினியென்னும் பெருந் தீயானது வெளிக் கிளம்பி எங்கும் தகிக்க ஆரம்பிக்கும். பாதாளத்திலுள்ள ஆதிசேஷனது விஷாக்கினி ஜ்வாலைகள் கிளம்பி எரிக்கும். ருத்திர பகவானது மூன்றாவது கண்ணிலிருந்து பிரளய கால அக்கினி கிளம்பி அழிக்கும். இவ்வாறெல்லாம் தகிக்கப்பட்ட பிரபஞ்சமானது நாசமடையும். ஆகாசம் கொதிப்பெடுத்து, நக்ஷத்திராதிகள் அழியும்; தேவர்கள் லயமடைவர்; காள மேகங்கள் இடைவிடாது மழை பொழியும்; பெருங்காற்றுகள் வீசும்; இடிகள் விழும்; ஏக காலத்தில் சமுத்திரங்களெல்லாம் பொங்கி, எங்கும் ஒரே ஜலமயமாயிருக்கும். இவ்வாறு மூவுலகங்களும் ஜலப்பிரளயத்தில் அகப்பட்டு நாசமாகும்போது, எல்லா வஸ்துக்களின் ஸத்வ அம்சங்களை, நீ உன் யோக சக்தியால் கிரகித்து, வேத மயமான இந்தப் படகில் ஏறிக்கொண்டு, நான் கொடுக்கும் கயிற்றால் இதை என் கொம்பில் கட்டிவிடு. எனது பிரபாவத்தால் நீ

* ஸ்ரீமத் பாகவதத்தில், இக்கப்பலானது 'பிரளயம் ஏற்பட்டதும் அனுப்பப்படும்' என்று குறிக்கப்பட்டிருக்கிறது.

¶ இவ்வாறு மாத்ஸ்ய புராணத்தில் கூறப்படுகிறது. ஸ்ரீமத் பாகவதத்தில் 'இன்று முதல் ஏழு நாளில் பிரளயம் ஏற்படும்' என்று சொல்லப்பட்டிருக்கிறது.

ரக்ஷிக்கப்படுவாய். நீயும், சந்திரன், சூரியன், சதுர் முகப் பிரமன், ஈசுவரன், நான், மார்க்கண்டேய ரிஷி * இவர்களும், வேதங்கள், புராணங்கள் வித்யைகள் இவைகளும் மட்டும் அடங்கியதாய் இப் பிரபஞ்சம் தங்கி நிற்கும். யுகாந்த நாசம் நீங்குங்கால், நான் வேதங்களைப் பரவச் செய்வேன். அதனால், நீ மீண்டும் லோக சிருஷ்டி செய்து, வெகு காலம் புகழ் பெற்று வாழ்வாய். உனது காலமானது வைவஸ்வத மன்வந்தரம் எனப் பிரசித்த பெயருடன் விளங்கும்'' என்று கூறிவிட்டு, பகவான் மறைந்தார்.

இவ்வாறு சொல்லப்பட்ட அம் மன்னனும், பகவான் குறிப்பிட்ட பிரளய காலம் வரையில் யோகத்திலாழ்ந்து, அவரது பாத கமலங்களிலேயே மனதை நாட்டித் தியானிக்க லானான். பிறகு, அவர் சொன்னவாறு பிரளயம் உண்டாயது. ஸத்யவிரதன் எல்லா வஸ்துக்களின் ஸூக்ஷ்ம அம்சத்தைத் தனது யோக சக்தியால் கிரகித்துக் கொண்டு, ஸப்த ரிஷிகளுடன் மேற் கூறிய படகில் ஏறிக்கொண்டு, திருமாலைப் பலவாறு புகழ்ந்து பிரார்த்தித்தான். உடனே, இரு பதினாயிரம் யோஜனை அளவுள்ளதும், ஒற்றைக் கொம்புள்ளதுமான ஒரு தங்கமயமான மீன் தோன்றிற்று. கயிறு ரூபமான பாம்பொன்று கப்பலண்டை வந்தது. மனுவும் அதன் மூலமாய் ஓடத்தை மீன் கொம்பில் கட்டினான், வேதங்களால் புகழப்பட்ட ஆதிபுருஷனை பகவானைப் பலவாறு துதிக்கலானான்:—

“ அஞ்ஞானத்தால் ஸம்ஸார துக்கத்தில் அகப்பட்டுத்தத்தளிக்கும் ஜீவர்களுக்குஞானமளித்துக் கரையேற்றக்கூடிய ஸத்குரு நீரே! கர்மபாசத்தால் கட்டுண்டு தவிப்பவர்களின் பாவத்தைப் போக்கி, நற்கதி பெற வழிகாட்டும் கருணைநிறைந்த ஆசிரியன் நீரே! சுவர்ணத்தின் அழுக்குகள் அக்கினியால் நீங்குவதுபோல, உம்மைப் பஜிப்பதாலே தான், ஜீவர்களின் அஞ்ஞான ரூபமான பாவங்கள் கழிந்து, அவர்கள் பேரானந்த மடையக்கூடும். தேவர்கள் முதலான எல்லோரும் சேர்ந்தாலும், நீர் செய்யக்கூடிய கிருபையில் லவலேசமும் செய்யமுடியாது. மற்றவர்களது உபதேசம் மாசற்ற ஞானத்தையு மளிக்காது. ஒரு குருடன் மற்றொரு அந்தகனுக்கு வழிகாட்டுவது போலவே, உலகில் அநேகமாய் ஒருவன் மற்றவனுக்குச் செய்யும் உபதேசமானது, மேன்மேலும் கெட்ட வழியில் செல்வதற்கு ஏற்ற துர்ப்போதனையாகவும், கோரமான பாபகர்மங்களைச் செய்து தீராத்துக்க மனுபவிப்பதற்கு வேண்டிய தூண்டுகோலாகவும் முடிகிறது. நீர் எல்லாப் பிராணிகளிடமும் அந்தர்யாமியாய் வஸிப்பவர்; பரமகருணை யுள்ளவர்; அனைவரின் க்ஷேமத்தைக் கருதியுள்ளவர் ; சரணமடைவோரைக் கைவிடாது காத்து ரக்ஷிப்பவர் ; ஸத்ஞானோபதேசம் செய்யவல்ல பரம ஆசிரியன். இவ்விதமிருந்தும், ஜனங்கள் மோஹத்தால மூடப்பட்டு, உம்மைப் பஜிக்காம லிருக்கிறார்களே. என்ன ஆச்சரியம்! நீர்தான் எனக்கு ஸத்குரு. உம்மையே நான் சரணமடைகிறேன். ஆதியந்தமில்லாதவனும், ஸர்வ சக்தனும், ஸர்வஞ்ஞனும், ஜகத் காரணனுமான பரம புருஷனே! எனது அஞ்ஞானத்தைப் போக்கி, என்னை நற்கதி யடைவிப்பீராக!'' என்றும், இன்னும் பலவிதமாகவும் ஜனார்த்தனனைத் துதி செய்தான்.

இவ்வாறு மனமுருகி, அந்தரங்க பக்தியுடன் பிரார்த்திக்கும் மனுவிடம், கருணாநிதியான பகவான் கிருபைகூர்ந்து, அப்பிரளய ஸமுத்திரத்தில் அங்குமிங்கும் விளையாடிக்கொண்டே, அவனுக்குத் தத்துவோபதேசஞ் செய்தார். வேதம், புராணாதிகளின் அர்த்தங்களையும், ஸாங்கிய யோகம் முதலான தத்துவங்களையும், லோக சிருஷ்டிக் கிரமங்களையும், தமது அவதாராதி பரம இரகசியங்களையும் விஸ்தாரமாய் எடுத்துரைத்தார். ஸப்த ரிஷிகள் முன்னிலையில் ஸத்யவிரதன் பகவானது மகிமையையெல்லாம் ஐயமறத் தெரிந்து கொண்டான். இவ்வாறு பிரளய காலம் முடியும் வரையில் மத்ஸ்ய மூர்த்தி அவ்வோடத்தைக் காத்தருளினார்.

இக் கல்பாந்தர பிரளய காலமானது, பிரம்மதேவன் நித்திரை செய்யும் சமயம். அப்போது அவரது முகத்திலிருந்தும் வெளிக்கிளம்பிய வேதங்களை ஹயக்ரீவன் என்னும் ஒரு பல பராக்கிரமமுள்ள அசுரன் எடுத்துக் கொண்டு, சமுத்திரத்தினுள் பிரவேசித்து விட்டான். பிரளயம் முடிவடைந்து, பிரமன் எழுங்காலம் வந்தது. மத்ஸ்ய உருக்கொண்ட ஆதிபுருஷன் அந்த அசுரனை ஸம்ஹரித்து, வேதங்களை மீண்டும் பிரம்மதேவனிடம் கொடுத்தருளினார்.

ஸத்யவிரதனும் பகவானுடைய திவ்விய உப

* இது மத்ஸ்ய புராண கதை. ஆனால், பிரளய காலத்தில் ஸத்யவிரதன், ஜீவராசிகளைக் கிரஹித்து, ஸப்தரிஷிகளுடன், கப்பலில் ஏறிக்கொள்ள வேண்டுமென்று சொன்னதாக ஸ்ரீமத் பாகவதம் கூறுகிறது.

தேசத்தால், ஸர்வ ஞானங்களும் பெற்று, அவர் நியமித்தபடி, பிரஜைகளைச் சிருஷ்டிக்கத் தொடங்கினான். இக் கல்பத்தில், அவன் வைவஸ்வத மனு என்று கொண்டாடப்பட்டு வருகிறான். இப்போது நாம் வசிக்குங்காலம் வைவஸ்வத மன்வந்தரம் எனச்சொல்லப்படுகிறது. இது நாம் இப்போது சுபமுகூர்த்தாதிகளில் சொல்லி வரும் ஸங்கல்பத்தில் குறிக்கப்படுகிறது. ஒரு மன்வந்தரம் (சதுர்யுகம்) என்பது 4,320,000 மனுஷ வர்ஷங்கள் அடங்கியது. இது பிரம்மதேவனது ஒரு நாள் பொழுதில் $\frac{1}{14}$ பாகம்; அதாவது 14 மன்வந்தரங்கள் கொண்டது பிரமனது ஒரு நாள். இவ்வித நாள் அளவில், 7-வது பாகமாகிய வைவஸ்வத மனுவின் காலம் இப்போது நடைபெற்று வருகிறதென்றும், இன்னும் ஏழு மனுக்கள் பின்னர் உண்டாவார்கள் என்றும் ஐதிஹ்யமாக நினைக்கப்பட்டுவருகிறது.

ஸர்வ வியாபியான பகவான், பூமியில் ஏதோ உருவமெடுத்து அவதரிப்பது லோகரக்ஷணத்தின் பொருட்டென்பதும், அவ்வாறு சிலசமயம் அவர் ப்ராகிருத ஜன்மம் எடுத்து, தமது பெருமையைக் காட்டியோ, மறைத்தோ சமயத்துக்குத் தக்கவாறு நடந்து துஷ்ட நிக்கிரகம், சிஷ்டபரிபாலனம், தர்மத்தை நிலை நிறுத்தல் முதலிய காரியங்களைச் செய்துள்ளது அவரது ஸௌலப்யம், பரம கருணை முதலான உத்தமகுணங்களை விளக்குமேயல்லாது, அவரது மேன்மைக்கு யாதொரு குறைவு முண்டாக்காதென்பதும் ஆஸ்திக ஹிந்துக்களின் நம்பிக்கை. நாம் பிரத்தியக்ஷமாய்க் கண்ணாற் கண்டறிவதற்கரிய மத விஷயங்களில், இவ்வித நம்பிக்கையானது கேவலம் ஒரு மூட பத்தியைச் சார்ந்தது (Superstitious) என்று தள்ளிவிடத் தக்கதல்ல. அஸூயை, அகங்காரம், லோபம் முதலிய துர்க்குணங்களைக் கைக்கொண்டு, பகவத் அவதாரங்களைப்பற்றி இழிவாய் நினைப்பது, ஹிந்துமதக் கொள்கையின் அடிப்படையையே அழிப்பதுபோலாகும்! யுக்தியுக்தமாயிருப்பதாய்க் கூறப்படும் இதர மதங்களிலும், இதைவிடக் கேவலமான மூட நம்பிக்கைகளும், ஸங்கேதங்களும் நிரம்பியிருக்கின்றன என்பது ஆராய்ந்து பார்ப்பவர்களுக்கு நன்கு விளங்கும். சுபம்.

ஆரியமத உபாக்கியானம்.—2-ம் பாகம், 51 புராண கதைகளும் ஆசாரியர்களது சரிதையுங் கொண்டது. ஆப்டோன் படங்களுடன். அணா 10.

ஸ்திரீகளுக்கான பக்கங்கள்

LADIES' PAGES

ப்ரதிஜ்ஞா யௌகந்தராயணம்

(வாஸவதத்தா பரிணயம்)

வடமொழியில் காவியங்கள், நாடகங்கள் முதலிய கிரந்தங்கள் இயற்றியுள்ள கவிகளுள் காளிதாஸன் மிகச் சிறப்புற்ற மகான் என்பது எல்லோரும் அறிந்த விஷயம். இவரது கிரந்தங்கள் பலவித ரஸங்கள் நிரம்பியவைகளாயும், மேலான ஸ்வபாவோக்திகள் கூடியவைகளாயும், உவமை முதலிய வாக்கணிகளால் நன்கு அலங்கரிக்கப்பட்டவையாயும் உள. இவற்றின் மேன்மையை மேனாட்டு வித்துவான்கள் பலரும் கொண்டாடியிருக்கிறார்கள். இப்பரத நாட்டில், காளிதாஸனுக்கு முற்காலத்திலுண்டான கவிகள் பலருளர். இவர்களுள், பாஸன் என்னும் ஒரு மகாகவி இருந்ததாக அநேக கிரந்தங்களில் கூறப்பட்டிருக்கிறது. காளிதாஸனே, தமக்கு முன்னர் உண்டாய பிரசித்த கவிகளுள் பாஸன் முக்கியமானவர் எனக் கூறியிருக்கிறார். பாஸனால் கூறப்பட்டுள்ள அருமையான அர்த்தங்களையும், கற்பனைகளையும், வர்ணனைகளையும் அநுசரித்து, காளிதாஸன் அநேக இடங்களில் தமது நாடகாதி கிரந்தங்களில் பல விஷயங்களை எடுத்துரைத்திருக்கிறார் என்பது வெகுகால பரம்பரையாய் வந்துள்ள நம்பிக்கை. ஆனால், பாஸனால் செய்யப்பட்டதாய்க் கூறப்பட்டு வந்துள்ள நாடகம், ரூபகம் முதலான த்ருச்ய காவியங்கள் பலவும் கொஞ்ச காலத்துக்கு முன்வரையில் அகப்படாமலிருந்தன. இப்போது, இவ்வித கிரந்தங்கள் பதின்மூன்று அகப்பட்டு அச்சிடப்பட்டிருக்கின்றன. இராமாயணம், மகாபாரதம் முதலிய விசேஷ கிரந்தங்களிலுள்ள கதையின் அம்சங்களைக்கொண்டு, பாஸகவி தமது ரூபகாதி காவியங்களை இயற்றியிருக்கிறார்.

பாஸன், கிறிஸ்து பிறப்பதற்கு சுமார் 500 வருஷங்களுக்கு முன்னரே இருந்தவர் என அநேக கிரந்த பிரமாணங்களைக்கொண்டு நிச்சயிக்கத்தக்கதாயிருக்கிறது. இவரது கிருதிகளிலுள்ள அருமையான விஷயங்களைக் காளிதாஸனே அநுவாதஞ் செய்து கூறியுள்ளார் என்பதே இவற்றின் மேன்மைக்கும், ஸ்வாரஸ்யத்துக்கும் தக்கதோர் அத்தாக்ஷியாகும். மேலும், இராஜ்ய

தந்திரத்திலும், புத்திக் கூர்மையிலும் சாணக்கியன் (அல்லது கௌடல்யன்) சிறந்தவரென்பது உலகப் பிரசித்தியுள்ளது. இவர் பெயர், உலக தந்திர ஸாமர்த்திய விஷயத்தில், ஒரு பழமொழியாக விளங்கிவருகிறது. பூர்வம், மௌர்ய சந்திரகுப்தனை மகத தேசத்தில் சக்கரவர்த்தியாக ஸ்தாபித்து, அத்தேசம் வெகுகாலம் சிறப்பும் செழிப்புமுற்று விளங்குமாறு செய்துள்ளவர் இவரே; எங்கும் புகழப்பட்ட அர்த்த சாஸ்திரம் என்னும் பெருங் கிரந்தமியற்றியவர் இவர். மந்திரிக்கு அரசனிடமிருக்க வேண்டிய அந்தரங்க பக்தியும், அவனுக்கு ஆபத்துக்கள் நேர்ந்தக்கால், ஸமயோசித உலகதந்திரங்களை உபயோகப்படுத்தி, அவனைக் காத்து ரக்ஷிப்பதில் ஏற்படவேண்டிய ஊக்கமும், விடாமுயற்சியும், உத்தம மந்திரிகளிடம் காணத்தக்க மற்றைய நற்குணங்களும், பாஸனது சில நாடகங்களில் முக்கிய நாடக பாத்திரமாய்க் கூறப்பட்டுள்ள யௌகந்தராயணன் என்னும் மந்திரியிடம் காணப்படுகின்றன. சாணக்கியன் இவற்றையெல்லாம் நன்குணர்ந்து, அவ்வித சிறந்த குணங்களைத் தாமும் சந்திரகுப்தனது விஷயத்தில் அநுஷ்டித்துக் காட்டியிருக்கிறார் போலும்! பாஸனது கிரந்தங்களைச் சாணக்கியன் அறிந்துள்ளார் என்பது, அவரது அர்த்த சாஸ்திரத்தில் கூறப்பட்டுள்ள சிலவிஷயங்களால் ஏற்படுகிறது.

இவ்வாறு, பிரசித்திபெற்ற வெகுப் பிராசீன கவியான பாஸன் இயற்றிய நாடக கதைகளுக்கு ஆதாரமான புராண கதைகள் அநேகம் உண்டு. இவற்றுள், கௌசாம்பி நகர மன்னனான வத்ஸ ராஜன், உஜ்ஜயினீ ராஜனது புத்திரியாகிய வாஸவதத்தை, இவர்கள் சரித்திரங்களைப் பற்றிய தகவல்கள் ப்ருஹத் கதை எனும் பூர்வீக கிரந்தத்தில் காணப்படுகின்றன. இக்கதைகள் முன்னர் ஒருசமயம் வெகுவாறு கொண்டாடப்பட்டு, ஜனப் பிரசாரத்தில் இருந்துவந்தன. வத்ஸராஜன், வாஸவதத்தை இவர்களது அன்னியோன்னிய அநுராகாதிகளையும்,உதயனனுடைய முக்கிய மந்திரியாகிய யௌகந்தராயணனது ராஜபக்தி, சாமர்த்தியம், தீர்க்காலோசனை இவற்றையும், பிரதிஞ்ஞா யௌகந்தராயணம் என்னும் தமது நாடகத்தில் பாஸன் எடுத்துக்காட்டியிருக்கிறார். இம்மந்திரியின் சூழ்ச்சியால், வத்ஸ ராஜன் வாஸவதத்தையை மணந்ததே இந்நாடகத்தின் முக்கிய தாத்பரியமானதால், இதை வாஸவதத்தா பரிணயம் என்னும் ஸங்கேதமான ஒரு சிறுபெயரால் விவகரித்தலும் பொருந்தும் என நினைத்து, இந்நாடகத்தை இப்பெயராலும் குறிப்பிடலானேம்.

முற்காலத்தில், வத்ஸ தேசம் என்னும் நாட்டில், கௌசாம்பி என்னும் நகரில், உதயனன் எனும் பிரசித்திபெற்ற ஒரு சந்திரவம்சத்து மன்னன் இருந்தான். இவன், அர்ஜுன புத்திரனாகிய அபிமன்யுவின் வமிச பரம்பரையில் இருபத்தைந்தாவனாகப் பிறந்தவன்; வெகு ரூபலாவண்யம் வாய்ந்தவன். வத்ஸ ராஜன் என்றால் ஜனங்கள் எல்லோரும் மெச்சிக் கொண்டாடி, அவனுடைய சரித்திர விசேஷங்களைக் கீதம்பாடி மகிழ்வார்கள். இவனது பெயர் எங்கும் பரவி வெகுப் பிரசாரத்திலிருந்து வந்தது. இவன் கானத்தில் வெகு நிபுணன். வாஸுகி என்னும் ஸர்ப்பராஜனது சகோதரனான வஸுநேமி என்பவன் இவனுக்குக் கோஷவதீ என்னும் ஒரு அபூர்வமான வீணையை அளித்திருந்தான். இவ்வீணை வாசிப்பதில் உதயனனுக்கு அபார சாமர்த்தியமுண்டு. இவன் எவ்வித முரட்டு யானையையும் வசிகரணம் செய்யும் வித்தையில் கைதேர்ந்தவன். இவன் தனது ரூபசம்பத்தாலும், பராக்கிரமத்தாலும், மேற்கூறிய வீணா ஞானத்தாலும், கஜ வசீகரண சாமர்த்தியத்தாலும் அகங்கொண்டு, இதர மன்னர்களை ஒரு பொருட்டாக நினையாமலே இருந்து வந்தான். யௌகந்தராயணன் என்னும் விப்பிரசிரேஷ்டன் இவனது முக்கிய மந்திரியா யிருந்தான்.

அச்சமயம், நர்மதைக்கு வடக்கில், வத்ஸ தேசத்தை அடுத்துள்ள அவந்தீ ராஜ்யத்தில், உஜ்ஜயனீ நகரத்தில் ப்ரத்யோதனன் (அல்லது மகாசேனன்) என்னும் வேந்தன் அரசு புரிந்து வந்தான். இவனுக்கு வாஸவதத்தை என்னும் ஓருமைப் புதல்வி இருந்தாள். இவளும் வெகு ரூபலாவண்யம் பொருந்தியவள்; புத்திக் கூர்மையுடையவள். இவள் கணவனை மணக்கும் பருவம் வந்தது. இவள் வத்ஸராஜனது ஸௌந்தர்யாதிகளைப் பற்றி வெகுவாறு கேள்வியுற்றாள்; ஒருக்கால் அவனுடைய சுந்தர ரூபத்தைக் கனவிற் காணலானாள். அவனிடமே அவள் மனம் நாடியது. அவனையே எவ்விதத்திலும் மணஞ்செய்துகொள்வதில் கருத்துடையவளானாள். இதையறிந்த ப்ரத்யோதராஜன், இது விஷயமாய் வத்ஸராஜனுக்குச் செய்தியனுப்பி, அவன்

தனக்கு மருமகனாக வேண்டுமென்று பலவாறு வேண்டிக் கொண்டான். உயர்குலம், அழகு, வித்தை, பராக்கிரமம் முதலியவற்றில் தனக்கு நிகரில்லையென்று மதித்துள்ள வத்ஸராஜன், தான் உஜ்ஜயினிபோய் அவளை மணப்பது தனக்கொரு கௌரவ ஹானி என்று நினைத்து, வேண்டுமானால், ப்ரத்யோதன் வாஸவதத்தையைத் தகுந்த சீதனத்துடன் கௌசாம்பிக்கு யழைத்து வந்து, தனக்கு விவாகஞ் செய்து கொடுக்கட்டுமென்று பதில் சொல்லிவிட்டான். இதுகேட்ட அவந்தி மன்னன் துக்கமடைந்தான். எனினும், தான் ருஜுவாய்ப் பிரார்த்தித்து அடைய முடியாத விஷயத்தில், தந்திரத்தால் காரிய சித்திபெற்றுத் தனது கௌரவத்தைக் காப்பாற்றிக் கொள்ளக் கருதினான்.

வத்ஸ ராஜனுக்கு யானை வேட்டையில் மிகப் பிரியமுண்டு. இவன் தன் ராஜ்யத்தைச் சுற்றிலுமுள்ள அடர்ந்த காடுகளில் அடிக்கடி வேட்டையாடிக் களிப்பதுண்டு. வத்ஸனது இம் மனப்பாங்கை மஹாஸேனன் நன்கறிந்துள்ளவன். நிஜ யானைபோல் தோன்றும்படி, மரத்தால் அவ்வளவு வேலைத் திறமையுள்ள ஒரு கறுப்பு யானை நிர்மாணம்பண்ணி, அதனுள் பல யுத்த வீரர்கள் மறைந்திருக்குமாறு செய்து, அதை இரு ராஜ்யங்களுக்கு மத்தியிலுள்ள வனப் பிரதேசத்தில் வைக்கச் செய்தான். ஏதோ ஒரு அற்புதமான காட்டு யானை அவ்வனத்தில் உலாவி, வெகு உபத்திரவம் செய்து வருகிறதென்று ஒரு வதந்தி கிளப்பி, வத்ஸராஜன் சமீபமான காடுகளில் வேட்டை யாட வரும்போது இச்செய்தி அவன் காதிற் படும்படி செய்தான். அவன் தனது மந்திரியான ஸாலங்காயனன் என்பவனைத் தக்க சைந்ய பரிவாரங்களுடன் சுற்றுப்பக்கத்தி லிருக்கச்செய்து, சமயம் வாய்த்தபோது உதயனனைச் சிறை பிடித்து வரும்படி ஏற்பாடு செய்தான். மேற் கூறிய விஷயங்கள் யௌகந்தராயணம் என்னும் நாடகக் கதையின் பூர்வ சந்தர்ப்பங்கள். இனி கூறப்படுவது நாடக ரீதியை அனுஸரித்ததாகும்.

இவ்வாறிருக்க, ஒரு சமயம் வத்ஸ ராஜன் நர்மதைக் கரையின் அருகாமையிலுள்ள வேணுவனத்தில் (மூங்கிற் காடு) வேட்டையாடப் புறப்பட்டுப் போனான்; அங்கிருந்து, அதைச் சார்ந்துள்ள அடர்ந்த காடுகளில் யானை வேட்டை செய்யப் போவதாய் ஏற்பாடாயிருந்தது. இவ்வாறு அவன் அங்குப் போவதற்கு முந்திய தினம், கௌசாம்பியில் யௌகந்தராயணனுக்கு, ப்ரத்யோதன் வத்ஸராஜனைப் பிடிப்பதற்குச் செய்திருந்த பொய்யானையின் தகவல் வேவுகாரர் மூலமாய்த் தெரியவந்தது. இது கேட்டு, அவன் மனோவியாகூல மடைந்தான். தன்னரசன் யானை வனம் சென்று, ப்ரத்யோதனனது சூழ்ச்சியாகிற வலையில் சிக்கிக்கொள்ளாம லிருக்கும்பொருட்டு, யாது செய்வதென்று அறியாது சிந்தையிலாழ்ந்தான். நன்கு ஆலோசித்துத் தனக்குள்ளே ஒரு தீர்மானம் செய்துகொண்டான்; தனது சேவகனான ஸாலகன் என்பவன் மூலமாய் அரசனுக்கு ஒரு நிருபம் எழுதியனுப்பி, அவன் நாகவனம் போகாமற் தடுக்கக் கருதினான். அவ்வாறே அவன் ஸாலகனை வரவழைத்து, அரசனுக்கு அவசரமாய்ச் செய்தி கொண்டுபோகவேண்டுமென்பதைத் தெரிவித்தான். பின்ன அவனைப் பார்த்து, ‘ஸாலகா, நீ போகவேண்டிய வழி வெகு தூரமிருக்கிறது. இது விஷயத்தில் உனது சிரமத்தைப் பாராமல், யஜமான பக்தியை முன்னிட்டு விரைவாக நடந்து, காரியபூர்த்தி பண்ணவேண்டும். செய்தற்கரிதான பெருங்காரியத்தை, எவன் பரம விசுவாஸம்பொருந்தியவனோ, எவன் மேலோரின் குணங்களை யறிந்து, அவர்களின் நற்பயனைக் கருதி நடப்பவனோ, அவ்வித தூதனிடமே ஒப்பிவிப்பது நியாயம். அவ்விதம் செய்தும், காரியசித்தி ஏற்படாவிட்டால், அது தெய்வச் செயல் என்றே சொல்லவேண்டும். நான் உன்மீது பூர்ணநம்பிக்கை கொண்டே, இவ்விஷயத்தில் உன்னை ஏவுகிறேன். நமது வத்ஸராஜன் நாளையதினம் வேணுவனத்தைவிட்டு, அருகிலுள்ள யானை வனத்துக்குப்போவதாக ஏற்பாடாயிருக்கிறது. அவர் அவ்வாறு புறப்பட்டுப் போவதற்குள், நீ அங்குச் சென்று இச்செய்தி தெரிவிக்கவேணும். இல்லையேல் வெகு அநர்த்தம் நேரிடும்” என்று கூறினான்.

இது கேட்ட ஸாலகனும், தான் அவனது ஆஞ்ஞையைச் சிரமேல் வகித்து நிறைவேற்றத் தயாராயிருப்பதாயும், அரசனுக்குச் சேரவேண்டிய கடிதமானது தன்னிடம் கொடுபடாதமையால் மாத்திரம் தான் புறப்படத் தாமதமென்றும் வணக்கமாய்ப் பதில் கூறினான். உடனே யௌகந்தராயணன் விஜயா என்னும் வேலைக்காரியைக் கூப்பிட்டு “மகாராஜன் கையிற் கட்டிக் கொள்வதற்கான மங்கள ஸூத்திரத்தையும், அவ

(இதன் தொடர்ச்சி 40-ம் பக்கம் பார்க்க.)

பல்குழுவும் பாழ்செய்யு முட்பகையும் வேந்தலைக்குங் கொல்குறும்பு மில்லது நாடு.

பிரபஞ்ச வர்த்தமானம்

NEWS AND NOTES

பூகோள சாஸ்திரத்தைக் கற்பிக்க ஒரு புதிய முறை :—ஸ்பெயின் தேசத்தில் அவைல்ஸ் என்னுமிடத்திலுள்ள மாணவர்களுக்கு பூகோள சாஸ்திரமும், அதன் சம்பந்தமாக வியாபாரப் போக்குவரவு வழிகளும், புதிய முறையில் கற்பிக்கப் படுகின்றன. இரண்டு வட்ட வடிவமான குட்டைகள் வெட்டப்பட்டு அவைகளில் ஒவ்வொரு கண்டம், தீவு இவைகள் தக்கவாறு கற்களால் செதுக்கப்பட்டு வைக்கப்பட்டிருக்கின்றன. இவ்விரண்டு குட்டைகளும் தண்ணீரால் நிரப்பப்பட்டு, நடுவே சம்பந்தப்படுத்தப் பட்டிருக்கின்றன. இதனல் மாணவர்களுக்கு பூகோள சாஸ்திரத்தில் முன்னிலும் அதிக உத்ஸாக மேற்பட்டு, வெகு ஊக்கமாய்ப் படிக்கிறார்களாம்.

* * *

உலகில் பெரிய கடிகாரம் :—உலகில் மிகப் பெரிய கடிகாரம் அமெரிக்காவில் நியூயார்க் நகரத்தில் கால்கேட் தொழிற் சாலையின் உச்சியில் ஸ்தாபிக்கப்பட்டிருக்கிறது. இது மின்சார சக்தியினல் ஓடுகிறது. இக்கடிகாரத்தின் குறுக்களவு 50 அடி, அதன் நிமிஷமுள் 37 அடி 3அங்குல நீளமும், மணிமுள் 27 அடி 6 அங்குலமும் உள்ளது. இக்கடிகாரத்தின் முகப்பு எண்கோண வடிவமாயுள்ளது. முகப்பு முழுமையும் நல்ல வெளுப்பாயும், முட்கள் நல்ல கறுப்பாயும் இருப்பதால் பகலிலும் தூரத்திலிருப்பவர்கள் இதைப் பார்த்து மணியை யறியலாம். முட்களில் மின்சார விளக்குகள் இருப்பதனல் இரவிலும் இது வெகு தூரத்திற்கு நன்றாய்த் தெரியும். இதன் நிமிஷமுள் 2200 பவுண்டும், மணிமுள் 1725 பவுண்டும், கடிகாரத்தின் மொத்த எடை 4 டன்னும் ஆகிறதாம். இக்கடிகாரம் நியூயார்க் துறைமுகத்திலும், மற்றும் மிகப்பெரிய கட்டடங்களில் இருப்பவர்களுக்கும், சரியான மணியைக் காண்பிப்பதில் மிகவும் சாதகமாய் இருக்கிறதாம்.

* * *

காங்கிரஸூம் தந்திச் செய்திகளும்:—சென்ற டிசம்பர் மாதம் 23-ந் தேதி முதல் 29-ந் தேதி வரையுள்ள காங்கிரஸ் வாரத்தில், கான்பூர் தந்தியாபீஸில் 2,63,000 வார்த்தைகள் கொண்ட செய்திகள் பத்திரிகைகளுக் கனுப்பப்பட்டன. 26-ந் தேதியன்று மட்டும் 60,000 வார்த்தைகளும் கிழக்குத் தந்திக் கம்பிகள் மூலம் கிறிஸ்துமஸ் வாழ்த்துச்செய்திகள் 25,000 அனுப்பப் பட்டன.

* * *

உலகத்தில் மிகப் பெரிய பிராணி :—உலகில் பிராணிகளெல்லா வற்றிலும் பெரியது நீலத் திமிங்கிலமே. அது 93 அடி நீளமுள்ளது. அதன் எடை 30-டன். இது பக்ஷிக்கும் பிராணிகள், அவற்றினும் சிறியவையும், முறையே அச்சிறு பிராணிகள் தங்களிலும் சிறியவைகளையுமாய்க் கடைசியில் எஞ்சிய சிறிய ஜந்துக்கள் சமுத்திரத்தினடியே வளரும் செடி கொடிகளையும் பக்ஷிக்கின்றன. ஆதலால் இந்தப் பெரிய ராக்ஷஸப் பிராணியானது தனது ஆகாரத்திற்கு சமுத்திரத்தில் வளரும் சிறு செடிகளைப் பொருத்திருக்கிறது. ஒவ்வொரு நீலத் திமிங்கிலம் ஒரு மணிக்கு 30-மைல் வேகத்துடனும், 650 குதிரை-சக்தியுடனும் செல்லக்கூடியதாம்.

* * *

ஞானதிருஷ்டி யந்திரம்:—பெர்லினைச் சேர்ந்த புரொபஸர் எடோனர்டு என்பவர் தாம் ஞான திருஷ்டி யந்திரத்தைக் கண்டுபிடித்து விட்டதாகவும், தாம் அதனைப் பொது ஜனங்களுக்கிடையில் நிரூபித்துக் காட்டியதாகவும் பிரெஞ்சு புகைப்படச் சங்கத்திற்குத் தெரிவித்திருப்பதாக 'பெடிட் பாரிஸியன்' பத்திரிகை கூறுகிறது.

(39-ம் பக்கத் தொடர்ச்சி.)

ருக்கு எழுதி வைத்திருக்கும் லேகனத்தையும் சீக்கிரம் எடுத்துவா" என்று ஆஞ்ஞாபித்தான்.

இதற்குள் மந்திரிசிரேஷ்டன் ஸாலகனை நோக்கி, அவன் போகவேண்டிய வழியின் தகவல்களைச் சொல்லி, ப்ரத்யோதன் பொய்யானையைக் கொண்டு வத்ஸராஜனை ஏமாற்றிச் சிறைபிடிப்பதற்காகச் செய்துள்ள சூழ்ச்சியைத் தெரிவித்தான். வத்ஸராஜன் புத்தி தடுமாறி அவ்வித வலையில் சிக்கிக்கொள்ளாமலிருக்க வேண்டுமே என்றும் பகவானைப் பிரார்த்தித்தான்! இவ்வாறு செய்ய மனம் புகுந்த ப்ரத்யோதனனது பயங்காளித்தனத்தைப்பற்றி இகழ்ந்தான்! "ஆகா! அனேக அக்ஷௌஹிணிகள் நிறைந்துள்ள தனது ஸைனிய பலம் பயனற்றதென்று ப்ரத்யோதன் நினைத்தான் போலும்! பராக்கிரமம், நிஜமான ராஜபக்தி இவை பொருந்திய சேனாஸகாயமுடைய அரசன் எவனும் இவ்வித இழிகர்மம் செய்யத் துணியான்?" என்று ஆலோசிக்கலானன்.

[illegible] 371.

1926 அமிருதாஞ்சனம் காலண்டர்கள் 1926

அழகிய மூன்று கலர்களில் ஸ்ரீ கிருஷ்ணன், மோஹினி ஆகியவர்களின் படங்கள், பிரபல சித்திரக்காரர்களால் எழுதப்பட்டவை.

ஒன்று விலை ரூ **0—2—0**; டஜன் ரூ. **1—4—0**; **100** ரூ. **9—12—0.**

தினசரி கிழிக்கக்கூடிய ஆபீஸ் காலண்டர் **1**-க்கு அ **4**. (தபால் பாக்கிங் சார்ஜ் வேறு.)

அமிருதா ஞ்சனம்

ஸர்வ நோய்களுக்கும் ஸித்த ஔஷதம்

அமிருதாஞ்சனம் அபூர்வமான மூலிகைகளிலிருந்து செய்யப்படுகிறது. எல்லா நோய்களுக்கும், தோலைப்பற்றிய சொறி சிரங்குகளுக்கும், வெட்டுக்காயம், இருமல் முதலிய உபத்திரவங்களுக்கும் கைகண்ட மருந்து (விலை அணு பத்து). அமிருதாஞ்சனம் எல்லாவிடத்திலும் கிடைக்கும்.

இதர அமிருதாஞ்சனம் ஔஷதங்கள்

படைத்தைலம். — இது எல்லா விதமான படைகளையும் போக்கும் இரண்டு தடவை உபயோகித்தவுடன். எவ்வித படையும் போய்விடும். விலை டப்பி ஒன்றுக்கு அணு ஆறு.

தந்தசூரணம்.—பல் துலக்க இது நல்லதாள். பல் வியாதி, ஈறுவலி முதலியநோய்கள் நீங்கும். தினந்தோறும் உபயோகித்தால் பல் வெண்மையாகி முகவசீகரமுண்டாகும். விலை டப்பி ஒன்று அணு 2.

அமிருதாஞ்சனம் டிப்போ,

நெ. 7, தம்புசெட்டி தெருவு, ஜார்ஜ் டவுன்,

சென்னைப்பட்டணம்.

THE QUEEN OF HAIR OILS

KAMINIA OIL (Registered)

கூந்தல் வளர் எண்ணெய்களுள் ராணி

காமினியா ஆயில் (ரிஜிஸ்டர்ட்)

இந்தக் காமினியா எண்ணெய் அதிக விலை உயர்ந்த சாமான்களடங்கியது. இது மயிர் உதிர்வதையும் மண்டை குடைச்சலையும் நிறுத்தி, பொடுகைப் போக்கிப் புது மயிர் வளர்ச்சியை விருத்திசெய்து வர்ணம் மாறிய கூந்தலை சுபாவ வர்ணத்திற்குத் திருப்பும். இது வியாபாரிகளுக்கும், மூளை சம்பந்தமாய் உழைப்புள்ளவர்களுக்கும, மாணுக்கர்களுக்கும், மூளையைக் குளிரச்செய்து ஞாபக சக்தியை விருத்திசெய்து தலையின் அடிப்பாகத்தைச் சுத்திசெய்யும். இதுவும் தவிர, காமினியா ஆயில், அதிக வாசனையு முடையது.

நற்சாக்ஷி பத்திரம்

மூவத்துப்புழையி லிருக்கும் மிஸ்டர் பன்ஸோஸ் எழுதுகிறார்:—காமினியா தைலத்தை நான் மிகவும் சந்தோஷத்துடன் உபயோகித்தேன். அதின் அபூர்வமான குணங்களைப் பற்றி உங்களுக்கு வந்தனம் செய்யப் போதுமான காரணத்தைக் கண்டேன். இந்தத் தைலம் அதிக குளிர்ச்சியைக் கொடுப்பதும் தவிர, கொடிய தலைவலியை துரத்துகின்ற நிபுண "டாக்டர்". தயவுசெய்து ஒரு புட்டி காமினியா ஆயில் வி. பி-யில் சீக்கிரம் அனுப்பவும்.

மைசூர் பொருட் காட்சியில் தங்கமெடலும், அலஹாபாத் பொருட்காட்சியில் நல்ல நற்சாக்ஷிப் பத்திரமும் பெற்றிருக்கிறது.

ஒரு தரம் உபயோகிக்கவும்

ஒரு புட்டியின் விலை ரூ.	1	0	0	வி. பி. தபால் செலவு ரூ.	0	5	0	பிரத்தியேகம்
4—புட்டிகள் ,,	2	10	0	,, ,, ,,	0	14	0	,,

☞ எச்சரிக்கை:—காமினியா ஆயில் ஒவ்வொரு முக்கியமான பட்டணங்களிலும் கிராமங்களிலுமுள்ள கடைகளில் விற்கப்படுகிறது. உங்களுடைய சமீபத்தில் காமினியா ஆயில் விற்பவர் இல்லாவிடில், கீழ்க்கண்ட விலாசத்திற்கு நேராய் ஆர்டர் அனுப்பவும். ஆனால் உங்களூர் வியாபாரிகளிடம் வாங்கும்பொழுது, தங்களுக்கு அதிக லாபம் கிடைக்கும். வேறு மாதிரியான தெரியாத எண்ணெய்களை இதுதான் நல்ல எண்ணெய் என்று இந்தக் காமினியா ஆயிலுக்குப் பதிலாய்க் கொடுக்க முயற்சிசெய்வார்கள். காமினியா ஆயிலைத் தவிர நல்ல குணமுடைய வேறு எண்ணெய்கள் கிடையாததினால், அவர்கள் முயற்சிக்கு ஏமாறாமல் எப்பொழுதும் இக் காமினியா ஆயிலே வேண்டுமென்று சொல்லிப் பெற்றுக்கொள்ளுங்கள்.

ஸோல் ஏஜண்டுகள் :— ஆங்கிலோ இண்டியன் டிரக் அண்டு கெமிகல் கம்பெனி,
155, ஜும்மா மஸீத், பம்பாய்.

Printed at the B. N. Press & published by V. Kuppuswami Aiyar, 69, Brodies' Road, Mylapore, Madras.